Registered as a Newspaper in Srilanka

முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல்

23 மே 2003 - வெள்ளிக்கிழமை | 21 ரபீஉல்-அவ்வல் - 1424 | கவடு - 11 | தருகை - 15 ரூபா

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

3 முஸ்லிம் அரசியல் தலைமைத்துவ பிரச்சினை தீர வழி என்ன?

5 புத்தக குற்றவாளி பிரபாகரன் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும்

6 ஈராக் வரலாறு வஞ்சகத்தின் வெற்றி வீரத்தின் தோல்வி!

முஸ்லிம் அரசியல் சூடுபிடிக்கிறது

மு.கா. மாற்றுக் குழு பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு!

முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர் பீடம் அவசரக்கூட்டம்!

(நமது அரசியல் செய்தியாளர்)

நமது முஸ்லிம் அரசியலில் "வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி இருக்கிறது". ஏலவே பாதயாத்திரை, பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு என நமது அரசியல் தலைமைகளால் நடாத்தப்பட்ட அரசியல் போராட்டங்கள் - மிகப் பெரும் தோல்வியடைந்த நிலையில், மீண்டுமொரு முறை அடையாளப் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவினர் மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றனர்.

முஸ்லிம்களின் அரசியல் கோரிக்கைகள், முஸ்லிம்களின் பாதுகாப்பு இவற்றுடன் முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவினர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்த தனிப்பட்ட கோரிக்கைகள் என்பன, நிறைவேற்றப்படும் வரை இவ் அடையாளப் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு தொடரும் என மு. கா. மாற்றுக்குழு தெரிவித்திருக்கிறது. இத்திடீர் அரசியல் முடிவால் எழுந்துள்ள நிலைமைகளை ஆராய்வதற்கு ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் புதன் காலை உடனடியாக தங்களது அரசியல் அதி உயர் பீடத்தைக் கொழும்பில் கூட்டியுள்ளது.

ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ், உடனடியாக முஸ்லிம்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய பெரும் அரசியல் நெருக்கடியை - மு. கா. மாற்றுக் குழுவின் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு முடிவினால் எதிர்நோக்கியுள்ளது. கொழும்பு அரசியல் மிகப்பெரும் கொந்தளிப்பாக உள்ள இன்றைய நிலையில் ஐந்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் இவ் அதிரடி முடிவு கொழும்பு அரசியலையும் ஒரு கலக்குக் கலக்கி வருகிறது.

இப்பாராளுமன்றப் பகிஷ்கரிப்பினால் முஸ்லிம்களுக்கு கிடைக்கப்போகும் அரசியல், சமூக நன்மைகள் எதுவென பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்! ஏனெனில் கடந்த டிசம்பரில் ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் உட்பட இப்போது பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கும் ஐந்து எம்.பிக்களும் இணைந்து நடத்திய பாராளுமன்ற பகிஷ்கரிப்பு - முஸ்லிம் மக்களை மிக மோசமாக ஏமாற்றியதுடன் பலத்த அரசியல் தோல்வியையும் சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

இவர்களால் அன்று முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டு - நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்ததனால் - பாராளுமன்ற பகிஷ்கரிப்பை கைவிடுவதாக அதாவுல்லா தரப்பும் ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் தரப்பும் நமது மக்களுக்கு தெரிவித்திருந்தனர். ஆனால் கடந்த ஐந்து மாதங்களில் இவர்களால் முன்வைக்கப்பட்ட ஒரு கோரிக்கை தானும் இன்னுமே நிறைவேற்றப்படவில்லை. மூதூரில் முஸ்லிம்களை பாதுகாக்க அரசாங்கம் தவறியதையும், முஸ்லிம்களுக்கான சுயாட்சியை உத்தரவாதப்படுத்த அரசாங்கம் தவறியதையும் நமது மக்கள் கண் முன்னால் கண்டனர்!

மீண்டும் இப்போது பாராளுமன்ற பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகிறது. அரசாங்கத்தின் உறுதியில்லாத சந்தர்ப்பவாத வாக்குறுதிகளை நம்பி நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தங்களது பாராளுமன்றக் கூடாரங்களுக்குத் திரும்பலாம். இவ் எதிர்பார்ப்பு நமது அரசியலில் நடைபெறக் கூடியதுதான். இருந்தும் நமது அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து நமது ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட முன்வந்திருப்பது இன்றைய அரசியல் அரங்கில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

உங்களுக்கு...!

* ஒரு ஜெயசூரியாவும் இன்னும் இரு முக்கிய அமைச்சர்களும் உட்பட 16 ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு பூரண ஆதரவு தெரிவித்து கடிதம் எழுதிய செய்தி கசிந்தவுடன் - ஹக்கீம் - அதாவுல்லா தலைமையிலான இரு அணியினரும் சந்திரிகாவை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தரும்படி கேட்டனராம். இது தொடர்பாக இரு தரப்பும் இரகசியமாக ஜனாதிபதியின் முக்கிய வட்டாரத்தை சந்தித்து பேசியதாகக் கேள்வி - எல்லாம் இந்த அமைச்சுப் பதவிகளுக்குத்தான். முஸ்லிம்களுக்கு சந்திரிகா என்ன தீர்வினை வைத்திருக்கிறார் என இவர்கள் கேட்பார்கள் என ஒருவரும் நம்பத் தேவையில்லை என்கிறது பொது ஜனம்.

* தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் காதர் அவர்கள் இப்போது ரொம்ப சூடாக இருப்பதாகக் கேள்வி - "இந்த ஆள் என்னை நடுரோட்டில் நிப்பாட்டிப் போட்டார் என்கிறாராம். மக்களை ஏமாற்றியது, ஏமாற்றிவருவது பற்றி இந்த ஆளுக்கு ஒருபோதும் அக்கறையில்லை. அந்த மனுசனை ஏமாற்றியதுதான் பெரிய விசமாக உள்ளது என்கிறார் அவரின் நண்பரொருவர்.

* அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் புலிகள் மீண்டும் ஈடுபட்டே ஆக வேண்டும், இப்போது அவர்கள் சும்மா முரண்டு பண்ணுகிறார்கள் என்ற கருத்தை எழுதியவர்கள் எல்லோரும் - சர்வதேச நெருக்கடியை கருத்தில் வைத்தே இந்த நம்பிக்கையை சொல்லி வந்தனராம்- ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதியான நிலைப்பாட்டை கண்டவுடன், மூக்கில் விரலை வைக்கின்றனராம். ஏன் விடுதலைப் புலிகளின் தலைமைபோல், எமது முஸ்லிம் அரசியல் தலைமைகளால் இப்படியான உறுதியான முடிவு எடுக்க முடிவதில்லை என யாரும் கேட்டு விடாதீர்கள்! பாவம் நமது அரசியல் தலைமைகள்.

* பேரியல் அஷ்ரஃப் சந்திரிகா அம்மையார், ஜே.வி.பியுடன் அரசியல் கூட்டு வைத்து வருகிறார். சந்திரிகாவும் ஜே.வி.பியும் வடக்கு கிழக்கு பிரிப்புக்கு தொடர்ந்தும் காய்களை நகர்த்தி வருகின்றன. அண்மையில் சேகு இஸ்ஸதீன் வடக்கு கிழக்கு பிரியக் கூடாது என்று தமிழ்ப் பத்திரிகைகளுக்கு மட்டும் அறிக்கை விட்டார். இதனைக் கண்ட பேரியல் - இவ் அறிக்கையை ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் அம்மையாருக்கு யாரும் மொழி பெயர்த்துக் கொடுத்தால் சந்திரிகா அம்மையாரிடம் எனது நிலைமை - எப்படி இருக்கும் தெரியுமா? என சேகு இஸ்ஸதீனிடம் கேட்டாராம்! அப்படி சந்திரிகா உங்களிடம் கேட்டால் - சேகு இஸ்ஸதீன் அப்படிச் சொல்லவில்லை, எல்லாம் பத்திரிகைக்காரர்களின் கட்டுக்கதை என்று சொல்லுங்க பேரியல் மேடம் என்றாராம் இஸ்ஸதீன். பேரியலும் இஸ்ஸதீனின் உள்ளுர் அரசியல் தனத்தை மெச்சினாராம்.

* சம்மாந்துறையில் அடுத்த முறை மு.காவில் எலக்சன் கேட்பது நான்தான் என்கிறாராம் பெரிய மன்சூர். இந்நாள் அன்வர் இஸ்மாயிலோ எனக்கு டிக்கட் கிடைக்காவிட்டால் சம்மாந்துறையை கலக்கிப் போடுவன் என்கிறாராம். ஊர் மக்களோ, இரண்டு அணிகளாக தொடர்ந்தும் பிரிந்து வருகின்றனராம். இந்த அரசியல் போட்டி சம்மாந்துறை பள்ளிவாசல்களின் தலைமைப் பதவி வெற்றிடத்தை நிரப்புவதில் பெரும் இழுபறியை தோற்றுவித்துள்ளதாம்.

புஷ்ஷால் வெல்லப்பட முடியாத யுத்தம்!

ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் பக்தாதைக் கைப்பற்றியதுடன் முடிந்துவிடவில்லை. அமெரிக்காவிற்கு எதிரான பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தம் உலகெங்கும் தொடர்கிறது. அமெரிக்கத் தலைமை மிகப்பெரும் தாக்குதல் அதிர்ச்சியில் தொடர்ந்தும் உறைந்து போயுள்ளது. றியாத், மொரோக்கோ எனத் தொடரும் தற்கொலைத் தாக்குதல்கள் - அமெரிக்காவுக்கு பெருத்த சவாலாக உருப்பெற்று வருகின்றன.

"ஆக்கிரமிப்புப் போர் முடிந்திருக்கலாம். அடிமைத்த னத்திற்கு எதிரான போர் தொடங்கி விட்டது. ஈராக்கின் மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கிறது அமெரிக்காவே வெளியேறு என்ற குரல்." இந்நிலையில் அமெரிக்கா ஈராக்கிற்கு வெளியேயும் உலகின் நாலாதிசைகளிலும் மிகப் பெரும்தாக்கு தலை எதிர்நோக்குகிறது. அச்சுறுத்தல் மிக்க நாடுகளிலுள்ள அமெரிக்க தூதர கங்களை அமெரிக்க அரசு தற்காலிகமாக மூடத் தீர்மானித் திருக்கிறது. தொடரும் தாக்குதலின் அச்சம் காரணமாக அமெரிக்காவின் நேச நாடுகள் கதிகலங்கிப் போயுள்ளன.

நீண்ட இலக்குடன் திட்டமிட்ட வகையில் நடாத்தப்படும் அமெரிக்காவுக்கு எதிரான யுத்தத்தில் ஒருபோதும் அமெரிக்காவாலும் அதன் நேச நாடுகளாலும் வெற்றியீட்டவே முடியாது! தொடரும் நாட்கள் அமெரிக்க ஆதிக்கத் திமிருக்கு நிறையவே

பாதிப்புக்களை உண்டு பண்ணக்கூடுமென மேற்குலக அரசியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யார் அந்த தீய சக்திகள்?
அவர்களை எப்படி முறியடிப்பது?

சமாதான முயற்சிகளைக் குழப்பும் விதத்தில் தீய சக்திகள் செயற்படுகின்றனவா? நிச்சயமாக. செயற்பட்டு வருகின்றன. அப்படியான தீயசக்திகள் யார்? நடைபெறும் அனைத்துக் குழப்பங்களுக்கும் கலவரங்களுக்கும் காரணம் இதே தீயசக்திகள் தானா?

சென்ற வருட ஜூன் மாத மூதூர், வாழைச்சேனை நிகழ்வுகளுக்கும் 'தீய சக்திகள் தான்' காரணம். இம்முறை மூதூர், பாலத்தோப்பூர் சம்பவங்களுக்கும் 'தீய சக்திகள்தான்' காரணம் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். இச்சம்பவங்கள் ஏற்படாதவாறு தடுத்து நிறுத்திமிருக்க முடியாதா? அவ்வாறு தடுத்து நிறுத்த 'புனித சக்திகள்' என்ன செய்திருக்க வேண்டும்? வாத்தைக்கு வாத்தை தீய சக்திகள் என்று உச்சரிக்கும் விடுதலைப் புலிகளுக்கு இவ் விடயத்தில் முதன்மையான கடப்பாடு உண்டு அல்லவா? அவ்வாறே முஸ்லிம், தமிழ் பொது ஜனங்களுக்கும் உள்ளது அல்லவா?

மூதூர் பகுதிக்கான விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் மீது முஸ்லிம்கள் நம்பிக்கையிழந்து விட்டனர். இதற்கு ஒரு நூறு சம்பவங்களை அடுக்கிச் செல்லலாம். (நிச்சயம் அடுத்த தடவை அனைத்து சம்பவங்களையும் தொகுத்து விலாவாரியாக வெளியிடத்தான் வேண்டும். அப்போதுதான் தமிழ் இனவாத சிந்தனையில் மூழ்கடிக்கப்பட்டிருக்கும் சில தமிழ்த் தரப்புகளால் உண்மை நிலைமையைப் புரிந்து கொள்ள முடியும்) இவ்வாறாக நம்பகத்தன்மை அற்றுப் போன பின்பு இதே உள்ளூர் விடுதலைப் புலித் தலைமையையும் வைத்துக் கொண்டு சமுக நிலைக்கான சமாதானப் பேச்சுவார்த்தையை எப்படி நடாத்த முடியும்? என்ற கேள்வி நியாயம் அல்லவா?

வன்முறைகள் உக்கிரம் பெறக் காரணமான விடுதலைப் புலிகளின் உள்ளூர்த்

தலைமையை வைத்துக் கொண்டு, அவர்களது ஆட்கள் புடைசூழ, அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடந்து முடிந்த வன்முறைகள் தொடர்பாக நியாயமான பரிசீலனையை எப்படிச் செய்ய முடியும்? சமாதானப் பேச்சுக்களை எப்படிச் சுதந்திரமாக நடாத்த முடியும்? உதாரணமாக, காஞ்சுரன்குடா நிகழ்வுபற்றிப் பேசுவதற்கு சிங்கள இராணுவமுகாமுக்குள் எஸ்.டி.எப் (STF) புடைசூழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்தி நீதியைத்தேட முடியுமா?

'மூதூரா கலவரம் தொடர்பான சமாதானப் பேச்சுக்களை புலிகளின் பிரதேசத்தில் நடாத்த முடியாது. பதிலாக இருதரப்பிற்கும் பொதுவாக திருமலை நகரத்தில் நடாத்துவோம்' என்ற முன்மொழிவினை முஸ்லிம்கள் தரப்பு முன்வைத்தது. இதனை விடுதலைப் புலிகளின் மூதூரா தலைமை திரிபுடுத்தி உத்தியோக அறிக்கையொன்றை விடுத்தார்கள். பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம்கள் வர மறுக்கின்றார்கள் என்பதாக. இதனைப் படிக்கும் சாதாரண தமிழ் மக்களால் என்ன கருத்துநிலைக்கு வரமுடியும். முஸ்லிம்கள் மீது மேலும் வெறுப்பும் தப்பெண்ணமும் அதிகரிக்கும் அல்லவா? இதனைத் தான் உண்மையில் விடுதலைப் புலிகளும் எதிர்பார்க்கின்றார்களா? இதுதானா விடுதலைப் புலிகளின் மூதூர் தலைமையின் நேர்மையும் நம்பகத்தன்மையும்? இவ்வாறாக முஸ்லிம்களைப் பற்றிய ஒரு தவறான பாரவை நிலையில் சொந்தத் தமிழ் மக்களை வைத்திருப்பதனால் விடுதலைப் புலிகளுக்கு கிடைக்கும் இலாபம்தான் என்ன? இதன் உண்மையான பின்னணிதான் என்ன?

உண்மைகள் இவ்வாறு திரிபுபடுத்தப்படுவதனால் சமாதானம், நல்லெண்ணம் என்பவற்றுக்கு முன்வரும் முஸ்லிம்களும் நம்பிக்கை இழக்கின்றனர். இவ்வாறான முயற்சிகளுக்கு முன்வரத் தயங்குகின்றனர். இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படவேண்டும் என்று எதிர்பார்த்தே விடுதலைப் புலிகள் அல்லது அவ்வமைப்பின் உள்ளூர்த் தலைமைகள் செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகம் இயல்பாகவே சராசரி முஸ்லிம்களுக்கு ஏற்படுகின்றது.

தமது காவல்துறைத் திறப்பு விழாவிற்கு பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர்களை அழைத்துப் பிரச்சாரப்படுத்துபவர்கள், கடத்தல் தொடர்பான விடயத்திலும் முற்கூட்டியே அதே பள்ளிவாசல்கள் சம்மேளனத் தவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதை விட்டு, தாம் கடத்தவில்லை என அவசர அறிக்கைகளை விட்டது ஏன்? முஸ்லிம் மக்களுக்கு தமது நிலைமையை விளக்குவது என்பதை விடவும், முஸ்லிம் இளைஞர்கள் இருவரையும் தாம் கைது செய்த உண்மையை தமிழ் மக்களுக்கும் உலகிற்கும் மறைப்பதற்கு இவ்வாறான அறிக்கை உத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றே சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது. ஆற்றைக் கடந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சம்பந்தப்பட்டவர்கள் சென்றார்கள் எனபது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மையாகும். இதன் பின்னணியில்தான் இவ்வாறான சந்தேகங்கள் முஸ்லிம்களிடம் எழுகின்றன.

→ 08

பிணந்தின்னிகளின் பானம்... பெப்சி-கொக் நமக்கு வேண்டாம்.

முஸ்லிம் தலைவர் எச்.எஸ். இஸ்மாயிலுக்கு புத்தளத்தில் ஞாபகார்த்த முத்திரை வெளியீடு!

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் புத்தளம் முஸ்லிம்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் பிரதிநிதி மாஹாம் எச்.எஸ். இஸ்மாயில் ஆவார். முதலாவது முஸ்லிம் சபாநாயகராக பணியாற்றிய பெருமையும் இவரையே சாரும். இவர் இந்த நாட்டின் முஸ்லிம் தலைவர்களான டொக்டர் எம்.சி. எம்.கலீல், அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்றவர்களுடன் முஸ்லிம் சமூகத்திற்காக உழைத்த பெருமகனாவார். ஏழை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் பைத்துல்மால் என்ற நலன் காப்பு நிதியத்தை ஆரம்பித்து வைத்தவரும் இவரே. கடந்த ஞாயிறன்று புத்தளம் நகர மண்டபத்தில் இப் பெருமகனுக்கு ஞாபக முத்திரை வெளியிட்டு கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள் ,வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடமிருந்து மனுக்கள்...

நடவடிக்கைக்காக...

கற்பிட்டி மீன்பிடித் தடை நீக்கப்படுமா?

கற்பிட்டியில் சுமார் 3000 இற்கும் அதிகமானோர் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். சுமார் 1200 மீன்பிடி படகுகள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கற்பிட்டி மக்களின் பொருளாதாரத்தின் அச்சாணியாக கடற்றொழிலே காணப்படுகின்றது. இதன் மூலம் நாட்டின் தேவைக்கு மேலாக வெளிநாட்டு செலாவணியும் இலங்கைக்கு கிடைகின்றது.

கற்பிட்டி மீனவர்களில் சுமார் 400 பேர் லைலா மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். வருடத்தில் 3 மாதங்களே இவ்வலையைப் பயன்படுத்தி முறையாக அவர்களால் மீன்பிடிக்க முடிகிறது. 120 மீன்பிடி படகுகள் இதற்காக ஈடுபடுத்தப்படுகின்றன. இத்தொழில் முயற்சியில் ஒருவர் 6 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் ரூபா வரையில் முதலீடு செய்வதுண்டு. சுழியோடிகளும் உதவிக்கு அழைத்துச் செல்லப்படுவது வழக்கமாகும்.

கற்பிட்டி கடற்றொழிலாளர்கள் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக பிரதேச கடற்றொழில் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு லைலா மீன்பிடி வலையைப் பயன்படுத்தி வருகின்றனர். அனுமதிப் பத்திரம் வருடாந்தம் புதுப்பிக்கப்படும் நடைமுறையும் பின்பற்றப்படுகிறது. இத்தொழிலின் மூலம் இம்மீனவர்கள் 80 வீதமான சந்தாப்பங்களில் இலாபம் ஈட்டுகின்றனர். சிலபோது ஒருநாளைக்கு 40 இலட்சம் ரூபா வரையில் சம்பாதிக்கும் வாய்ப்பும் கிடைத்து விடும்.

இந்நிலையில் அண்மைக்காலமாக இவர்களுக்கு இத்தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பத்தலங்குன்று பகுதி மீனவர்களின் எதிர்ப்பே இதற்கு காரணமாகும். பத்தலங்குன்று மீனவர்கள் சிறுவலைகளைக் கொண்டு மீன்பிடிப்பவர்கள். மேலும் இவர்கள் நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். பருவகால மீன்பிடியில் ஈடுபடும் நோக்கில் பத்தலங்குன்றில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் வெகு சொற்பத் தொகையினரைத் தவிர ஏனையோருக்கு கற்பிட்டியில் வாக்குரிமை கூட இல்லை.

கற்பிட்டி மீனவர்கள் லைலா வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்கும் முயற்சிகளை பத்தலங்குன்று மீனவர்கள் பல்வேறு வழிகளில் மேற்கொள்கின்றனர்.

பத்தலங்குன்று கற்பிட்டியிலிருந்து 30 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. கற்பிட்டி மீனவர்களோ பத்தலங்குன்றுக்கு அப்பால் 36 கிலோ மீற்றர் தூர ஆழ்கடற் பரப்புக்குச் சென்று மீன்பிடிக்கின்றனர். இதேவேளை கற்பிட்டி மீனவர்கள் அருகிலுள்ள கண்டல் குழிக்குச் சென்று கூட மீன்பிடிக்க இயலாது. ஆனால் பத்தலங்குன்று மீனவர்களுக்கு கற்பிட்டியிலும் மீன் பிடிக்கலாம். அதுபோல் நீர்கொழும்பிலும் மீன் பிடிக்கலாம்.

இந்நிலையில் கடற்றொழில் அமைச்சு கற்பிட்டி மீனவர்கள் லைலா வலைகளை பிரதேச கடற்றொழில் திணைக்களத்தில் கையளிக்குமாறு அறிவித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் பத்தலங்குன்று மீனவர்களுக்கு ஆதரவான நீர்கொழும்பு பிரதேச அரசியல்வாதிகளின் அழுத்தமாகும்.

கற்பிட்டி மீனவர்களோ தமக்காக குரல் கொடுத்து தமது பூர்வீகப் பிரதேசத்தில் சுதந்திரமாக தொழில் செய்யும் உரிமையை வென்றெடுத்து தருவதற்கு துணிச்சலான அரசியல் தலைமைத்துவம் இன்றி பரிதவித்துப் போய் நிற்கின்றனர். தமது ஜீவனோபாயத்திலே மண்ணை வாரிப் போடும் இந்நடவடிக்கைக்கு சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுப்பதை தவிர வேறு வழி கிடையாது என்றும் லைலா வலைகளை கடற்றொழில் அலுவலகத்தில் கையளிக்கப் போவதில்லை என்றும் கற்பிட்டி மீனவர்கள் தமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கியுள்ளனர்.

(புத்தளம் மாவட்ட செய்தியாளர்)

பாதை சீர்கேடு

அனுராதபுரத்தில் மேற்குத் தோதல் தொகுதியில் மத்திய நுவரகமபளாத்த பிரதேச செயலாளர் பிரிவுட்குட்பட்ட அஞ்சுக்கம், கம்பிரிகஸ்வெவ போன்ற கிராமங்களுக்கு அனுராதபுரத்தில் இருந்து செல்லும் பிரதான பாதை வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு பள்ளமும் படுகுழியுமாய் காணப்படுகின்றது.

இதனால் இப்பகுதிக்கு நடாத்தப்படும் போக்குவரத்து சேவையும் சீரான முறையில் நடைபெறுவதில்லை. இதனால் பாடசாலை மாணவர்களும் அன்றாடத் தேவைகளுக்காக அனுராதபுரம் செல்லும் பொதுமக்களும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு பலமுறை அறிவித்தும் இதுவரைக்கும் எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஏ. பிரதௌஸ், அனுராதபுரம்.

கண்டி அஷ்ரஃப் நினைவு மன்ற அகில இலங்கை திறந்த கவிதைப் போட்டி பரிசு வழங்கல் -2000

அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம்,
துறைமுகங்கள் கப்பல்துறை,
கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் விவகார அமைச்சர்.

மேற்படி போட்டியில் நாம் வெற்றி பெற்றோம். எமக்குத் தருவதாகக் கூறப்பட்ட பரிசுகளைப் பெற கண்டிக்கு வருமாறு அழைத்தனர்: போனோம். உங்கள் கைகளால் கேடயமும், பதக்கமும் பெற்றோம். தருவதாகக் கூறப்பட்ட காசோலையையும், சான்றிதழையும் அனுப்பிவைப்பதாக மேற்படி மன்றத்தினர் கூறினர். புதுவருடம் பிறந்தது. நாங்கு மாதங்களாகியும் அவை இன்னும் எம்மை வந்தடையவில்லை. எனவே, தாங்கள் மேற்படி மன்றத்தின் போட்டிகளுக்கான அனுசரணையாளராக விளங்கியமையினால் மறைந்த தலைவரின் பெயரில் நடத்தப்பட்ட கவிதைப்போட்டி பரிசு வழங்கப்படாமல் விடுபடுவதை தவிர்க்குமுகமாக எமக்கான காசோலையையும், சான்றிதழையும் பெற்றுத்தர ஆவண செய்யுமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஏ.எம். முகைதீன், ஏ.எஸ்.எம்அப்துல்லா மூதூர், எம். உஸனார் - ஏறாவூர்,

நோர்வே - ஐப்பானின் பாத்திரம

பொருளாதார ரீதியாகவோ, யுத்த பலத்தாலோ உலகில் பலமான இராட்சியமாக கருதப்படாத நோர்வே சாவதேச அரசியல் மூலமாகவாவது தனக்கென தனியானதோர் இடம் ஒன்றை வகுத்துக் கொள்ளும் நாடகமே நோர்வையின் இலங்கைப் பிரவேசமாகும் என சிலர் குறிப்பிடுகின்றனர். கிறிஸ்தவ அடிப்படை வாதத்தைத் தழுவிய நோர்வே தனது மதத்தைப் பரப்பும் ஒரு தந்திர நடவடிக்கையே இதுவென சிலரும் குறிப்பிடுகின்றனர். புலிகளின் ரகசிய தகவல் சேவை, கடல் புலிகளை பயிற்றுவிக்கும் ஒரு பயிற்சி நிலையம், அவர்களின் இரகசிய வங்கிக் கணக்கின் பிரதான தளமாக நோர்வேயே காணப்படுகிறது என இன்னும் சிலரும் குறிப்பிடுகின்றனர். அதேநேரம் இலங்கையை இரண்டு துண்டுகளாக்கும் மேற்கின் இரகசியத் திட்டத்தை அமுல் படுத்துபவர்கள் இவர்களேயென இனனுமொரு சாராரும் குறிப்பிடுகின்றனர். இவர்கள் இலங்கையின் பொருளாதார வளங்களை சூறையாடுவதில் ஈடுபட்டு வருகிறார்கள் என மற்றுமொரு சாராரும் குறிப்பிடுகின்றனர். இதற்காக அவர்கள் முன்வைக்கும் ஆதாரங்களாக இலங்கை செல் நிறுவனத்தில் கூடிய அதிகாரம் நோர்வேக்கு உண்டு. தேசிய லொத்தர் சபையை நோர்வே நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தன்தரி மலை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனித பிரதேசத்தின் 25,000 ஏக்கர் பகுதி புள்டோசர் மூலம் தரைமட்டமாக்கப்பட்டு, சுஜு பயிர் செய்கை மேற்கொள்ளப்படுவதற்காக வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அடுத்த போட்டியாளர் நோர்வே நிறுவனமாகும். இலங்கை கடற்கரையோர பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டு வரைபடம் தயாரிக்கும் பொறுப்பு இவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

இன்று நோர்வேயைத் தள்ளிவிட்டு அவ்விடத்தை நிரப்ப ஜப்பான் முயலுகிறது. உலகின் பிரதான பொருளாதார கேந்திர நிலையங்களாக ஐக்கிய அமெரிக்கா ஐரோப்பா என்பன ஆசியாவுக்கு ஒருவகையில் பயப்படுகின்றது. இன்று உலகில் தேசிய உற்பத்தி ரீதியாக ஐக்கிய அமெரிக்கா ஜப்பான் ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் பிரான்ஸ் என்பன முன்னணி வகித்தாலும் பொருள், சேவைகளை கொள்வனவு செய்யும் ஆற்றல் ரீதியாகப் பார்க்கும் போது ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஜப்பான், இந்தியா, ஜேர்மனி போன்ற நாடுகளே முன்னணி வகிக்கின்றன. இந்நிலை தொடருமாயின் 2020களில் உலகில் பொருளாதார பலம் வாய்ந்த முன்னணி நாடாக சீனா வளர்ந்து விடும் என்பதனை நன்கு உணர்ந்துள்ள மேற்கு உலகம் குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகள் சீனாவை கவிழ்ப்பதற்காக வேண்டி ஜப்பான், கொரியா போன்ற நாடுகளை தூசுப்புச் சீட்டுகளாக பயன்படுத்துகின்றன. எதிர்காலத்தில் இந்தியாவுக்கும் இதே போன்றதொரு நிலைமை ஏற்படும் என்பதில் சந்தேகம் கிடையாது.

உலகில் செல்வந்த நாடாக ஜப்பான் காணப்படுகிறது. 1999 இல் சாவதேச ரீதியாக வழங்கப்பட்ட கடன்களில் 27 வீதமானவை ஜப்பான் மூலமாகவே வழங்கப்பட்டுள்ளன. இலங்கை பெற்றுள்ள மொத்தக் கடன்களில் 45 சதவீதமானவை ஜப்பானிடமிருந்து பெறப்பட்டுள்ளன. கடந்த வருடங்களில் பொருளாதார அபிவிருத்தியானது கடந்த காலங்களை விட சற்று வீழ்ச்சி நிலையில் காணப்பட்டதனால் ஜப்பான் ஐரோப்பாவைப் போன்று ஒரு தீர்க்கமான முடிவை எடுத்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவைப் போல் அரசியல், பொருளாதார பலத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். இவைகள் பற்றி நாம் உணர்கிறோமா?

நான் பயங்கரவாதி அல்ல

(யூத நண்பனுக்கு ஒரு துறந்த கடிதம்)

25 மார்ச் 2003

எனது நண்பா... எனது எதிரி,
வாழ்த்துக்கள் :

நான் பயங்கரவாதி அல்ல,
உனது பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவள்.

நீ எனது வாப்பாவை கொலை செய்தாய்,
நீ எனது வீட்டை உடைத்துச் சேதப்படுத்தினாய்,
நீ எனது பழத்தோட்டத்தை நாசமாக்கினாய்,
நீ எனது சுவரை உடைத்தாய்
நடுச் சாமத்தில் திடீரென வந்து
எனது வீட்டைச் சோதனை செய்தாய்
எனது பிள்ளைகளை மிரட்டி பணிய வைத்தாய்,
எனது தளபாடங்களை நொறுக்கித் தூளாக்கினாய்
எனது தாயை அவமானப்படுத்தினாய்
எனது சகோதரனை சித்திரவதை செய்தாய்

நீ எனது பக்கத்து வீட்டுக்காரர் மீது
குண்டுகள் வீசினாய்,
எனது பாடசாலையை மூடினாய்
எனது ஆத்மாவையே பலவந்தமாக எடுத்துச் சென்றாய்
எனது எல்லையைச் சுருக்கினாய்
எனது சுயமரியாதைக்குப் பங்கமிழைத்தாய்
எனது கௌரவத்தை அவமதித்தாய்
நீ எனது சகோதரனைக் கொலை செய்தாய்

நீ எனது குடும்பத்தை இம்சித்தாய்,
எனது ஆட்டுக்கு நஞ்சூட்டினாய்,
எனது பாதையைத் தடுத்தாய்,
எனது நிலத்தைத் திருடினாய்
எனது ஒலிவ் மரத்தை வெட்டிச் சரித்தாய்

நீ எனது உருவத்தைச் சிதைத்தாய்
எனது அந்தஸ்தைத் இருட்டாக்கினாய்
எனது ஊரிலிருந்து விரட்டினாய்
ஒரு பயங்கரவாதியென்றே.

நீ என்னைக் கொலை செய்தாய்
ஒரு சிசுவாக, ஒரு குழந்தையாக,
ஒரு பிள்ளையாக, ஒரு சிறுவனாக, ஒரு சிறுமியாக,
ஒரு மனிதனாக, ஒரு மனிசியாக.

நீ என்னைக் கொலை செய்தாய்
ஒரு மாணவனாக, ஒரு தாதியாக,
ஒரு வைத்தியராக, ஒரு நோயாளியாக.

நீ என்னைக் கொலை செய்தாய்
துங்கும் போது, தொழும் போது,
விளையாடும் போது,
வீட்டில் தனிமையில் வைத்து.

நீ என் நெற்றியிலும், உள்ளங்கையிலும்
பச்சை குத்தினாய்
ஒரு ஆடாக அல்லது மாடாகக் கருதி.

ரோஷமில்லையா உனக்கு,
சென்றவற்றிலிருந்து ஒரு பாடமேனும்
படிக்கவில்லையா நீ!

நீ என் புனித இடங்களை
அசுத்தமாக்கி இறைவனின்
மாளிகைக்குப் போகும் பாதையைத் தடுத்தாய்
இன்னும் நீ
என்னைப் பயங்கரவாதியென்றா அழைக்கிறாய்?
உன்னிடம் நேர்மை, நியாயமே இல்லையா?

நான் பயங்கரவாதி அல்ல!
நான் சுதந்திரத்திற்காகப் போராடுபவள்,
சுதந்திரத்திற்காகவும் சமாதானத்திற்காகவும்
கஷ்டப்படுபவள்.

நீ என் வாழ்வை
நிலையான நரகமாக்கினாய்,
தினமும் கனவுகளை அடிக்கடி தந்தாய்,
ஊரடங்கிற்குள்,
வீதி மறியலுள்,
வீதி மூடலுள்,
வறுமையினுள்,
துயரத்தினுள் முடக்கி வைத்து
ஓயாத துயரத்தினுள் போட்டாய்

நான் எழுந்து
தாங்க முடியாத உன் கொடுமையிலிருந்து
விமோசனம் தேட,
நீ என்னைப் பயங்கரவாதியென்றாய்
நான் எப்படி பயங்கரவாதியாக முடியும்
உனது பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவளாக
இருக்கையில்!

வெட்கக் கேடு!
எனது சொந்த நிலத்தின் மீதான
உன் ஆக்கிரமிப்பு பலவந்தமானது.
பறிகொடுத்த எல்லோர் போலும்
எனக்கும் உரிமை உண்டு,
உண்மையில் அது கடமை,
எதிர்ப்பதற்கும்
எதிர்த்து நிலத்தை மீட்பதற்கும்.

'என்னைத் தூற்றாதே!'
உனது கட்டுக் கதைகளை அவிழ்த்து விடாதே,
பாதிக்கப்பட்டவனின் எதிர்ப்பும்
முறை தவறிச் செய்பவனின் தீங்கும் சமனில்லை.

எனது எதிர்ப்பு
உனது பயங்கரவாதத்தின் எதிரொலி மட்டும் தான்.

நீ
நான்
இந்த சனம் அறியும்,
பாடசாலைச் சிறுவர் என்ன படித்தனர் என்றும்
யாருக்குத் தீங்கு இழைக்கப்பட்டதென்றும்
மீட்டெடுப்புக்காக போராடுபவர் யாரென்றும்.

எமக்கும் மீண்டு வரும் வரை போராடுவோம்
சுதந்திரம் கிடைக்கும் வரையும்
சமாதானம் எங்கும் கிட்டும் வரையும்.

நன்றி : The Palestine time, April 2003.
ஆங்கில மூலம் : Shyama Amayreh
தமிழ் மூல : அமெரிகாஜ்
தமிழில் : கே. முனாஸ்

வாரமொரு உரைகல் - மருதூர் மெய்யொளி

யூதர்கள் முஸ்லிம்களின் விரோதிகளே!

"அரபிகளுக்கெதிராக நாம் மேற்கொண்டிருக்கும் போராட்டத்தில் எமது வெகுஜன தொடர்புச் சாதனங்களுக்கு முக்கிய பங்கிருக்கிறது என்பதை நாம் மறந்து விடலாகாது.

இஸ்லாமிய உணர்வு எந்த உருவகத்திலேனும் தலைதூக்கி விடாதிருக்குமாறு அவை பாத்துக் கொள்ள வேண்டும். இந்தப் புனிதப் பணிக்காக நாம் அடக்கு முறை, கெடுபிடிகள் எதனையும் கையாளத் தவறக் கூடாது. எம்மைச் சூழவுள்ள பகுதிகளின் நடப்புகள் சம்பந்தமாக நாம் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

முஸ்லிம் "பிடிவாதக்காரர்கள்" வெற்றி பெற்றால். இஸ்ரேல் சங்கடத்தில் சிக்க வேண்டியேற்படும். இந்தப் "பிடிவாதக்காரர்கள்" ஒரு யூதனைக் கொன்றால். அல்லது யூதனால் கொல்லப்பட்டால் தாம் சுவர்க்கம் புகுவதாக உறுதியாக நம்புகின்றனர்."

மேற்படி கருத்தை 18.03.1978 இல் வெளியான இஸ்ரேலியத் தினசரியொன்று வெளியிட்டிருந்தது.

(ஆதாரம்: ஜிஹாத் சஞ்சிகை)

முஸ்லிம்களையும். இஸ்லாத்தையும் இம்சிப்பதில் யூதர்களுக்கு அதிகரித்த விருப்பு இயல்பு இருந்து வருவது தெரிந்ததே. அதற்கேற்றவகையில் யூத மக்களை மூளைச் சலவை செய்வதில் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் முக்கிய பங்காற்றுவதற்கு மேற்படி செய்தி. தக்க சான்று. யூதர்களைப் பொறுத்தவரை இஸ்லாமும். முஸ்லிம்களும் அச்சத்திற்குரியவை. இவற்றினை பூன்டோடு கருவறுப்பதில் தீராத தாகமுடையவர்களாகவே அவர்கள் என்றும் இருந்து வருகின்றனர். இதையே யூதர்கள் பிறப்பின் இலட்சியமாகக் கொண்டிருக்கின்றனர். இஸ்லாமிய எழுச்சிகளோ அல்லது முற்று முழுதான இஸ்லாமிய அரசு நிலைகளோ உலகின் எந்தப் பாகத்திலும் இருக்கக் கூடாது என்கின்ற கொள்கை இலட்சியத்தில் கண்ணும் கருத்துமாக யூதர்கள் இருந்து வருகின்றனர். இந்நோக்கினை அடைந்து கொள்வதில் யூத அதிகார சக்திகள் மிகவும் மும்முரமாக செயற்பட்டுக் கொண்டிருப்பது பகிரங்கமானது. யூதர்களை முஸ்லிம்கள் வெற்றி கொள்வதும். முஸ்லிம்களினால் யூதர்கள் கொல்லப்படுவதும். யூத சாம்ராஜ்யங்கள் முஸ்லிம்களினால் அழித்தொழிக்கப்படுவதும் நிகழாதவரை இவ்வுலகம் அழிந்து. மறுமை நாள் தோன்றாது என்கின்ற இஸ்லாத்தின் தீர்க்க தரிசனம் மெய்ப்பிக்கப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்கின்ற உறுதி மனோநிலையில் நாமொவ்வருவரும் தொழிற்படுவதே வெற்றிக்குரியதாக அமையும்.

அரசியல் ரீதியிலான பலத்தினால் பலவீனப்பட்டுள்ள முஸ்லிம்கள்

இனரீதியிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் அவ்வப்போது சமூகமானதொரு தோற்றப்பாட்டைக் காண்பித்தாலும் பின்னர் காலப்போக்கில் மீண்டும் பழைய நிகழ்வுகளையே ஏற்படுத்தி இன அழிவுகளுக்கும். பொருட் சேதங்களுக்கும். குரோதமனப்போக்குகளுக்கும் காரணமாகி மிகவும் மோசமானதொரு முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றது.

பிரச்சினைகள் தோற்றம் பெறும் போதெல்லாம் அரசியல் ரீதியிலாகவும் கட்சி நிலை சார்பாகவும் தீர்வுகளைக்காண முன்னெடுக்கும் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைவதற்கு எந்தளவு ஏற்புடையதாகவுள்ளதென்பதை சம்பந்தப்பட்டவர்கள் அவசியம் உணர்ந்துகொள்ளல் வேண்டும். இனரீதியிலான முரண்பாடுகள் தோற்றம் பெறும் போதெல்லாம் முஸ்லிம்கள் சார்பான பேச்சுவார்த்தைக் குழுவில் எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கின்றதோ அக்கட்சி சார்பான அல்லது அரசுக்குச் சார்பான முஸ்லிம்களின் அரசியல் தலைமையும் அவர்கள் சார்பு நிலைகொண்ட காலத்திற்குள் நிரந்தரமான தீர்வுக்கு வழியமைத்துவிட வேண்டும் என்ற அரசியல் மையப்படுத்தல் நிலைப்போக்குடன் செல்வாக்கிற்காக செயலாற்றுவதையே அவதானிக்க முடிகின்றது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில். சமூக ரீதியிலான ஒற்றுமையும் சமூகக் கட்டுப்பாடுகளும் பாராட்டத்தக்கதாக அவதானிக்கப்பட்டாலும். தமிழ் சமூகத் தவர்களுடனான முரண்பாட்டிற்கான சமரசத் தீர்வு விடயத்தில். முஸ்லிம்கள் சார்பான குழு அமைப்பு சிக்கல் நிலை கொண்டதாகவே உள்ளது. கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அதிகளவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். ஐக்கிய தேசிய கட்சி. (ச.கட்சி) பொ.ஐ.முன்னணி என்ற பிரதான கட்சிகளின் பலத்துடன் பலவீனப்பட்ட நிலைமையில் உள்ளனர். இதற்குள் மு.கா. கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்முரண்பாடுகள். அரசியல் மாமேதை மாஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் என்ற சமூகத்தின் மூச்சு வளர்த்தெடுத்த 'பேரம் பேசும் சக்தி' என்ற மாபெரும் பலத்தை இழந்து பரிதாப நிலையில் காணப்படுகின்றது.

முஸ்லிம்கள் சார்பாக எதிர்கால சமூக அபிவிருத்தியை நோக்காகக்கொண்ட குழு முற்றிலும் அரசியல் ரீதியிலாகவே அடையாளப்படுத்தப்பட்டிருப்பது முஸ்லிம்களைப் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கு. அதுவே மறுதரப்பாருக்கு நல்லதொரு வாய்ப்பாகவும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அரசியல் ரீதியிலாக பிளவுபட்டுள்ள முஸ்லிம்கள் அடுத்தவர்களுடன் சமாதானம் பேச முந்திக்கொள் வதைவிட அவர்களுக்கிடையே அவசியம் ஆற்ற வேண்டிய சமூகத்திற்கான பணிகள் ஏராளம் என்பதை தெரிந்து கொள்ளும் நாள் எப்போது?

சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து சகஜ நிலைமையைத் தோற்றுவிப்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தை என்பது உறுதிப் படுத்தப்பட்ட நிலைமையில் சமூக ரீதியிலா னதும். எதிர்கால சமூக அபிவிருத் திகளையும் அடிப்படை நோக்காகக் கொண்டதென்பது நிஜம் என்றால் முஸ்லிம்கள் சார்பானவர்கள் தங்களுக்குள் ஆற்றவேண்டிய அவசியப் பணிகளை இனம்காணல் வேண்டும். அரசியலுக்கும் அப்பாற் சமூகம் என்ற ரீதியிலாகவே சிந்தித்து சகல அரசியற் கட்சிகளின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் இணைந்த முன்னெடுப்புக்கொண்ட 'நிய்யத்'டன் களத்தில் தம்மை நிலைப்படுத்திக் கொண்டால் உறுதியான தொரு சக்தியை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

- அ.முஹம்மது அனஸ், திருமலை

முஸ்லிம் விவசாயிகள் கப்பம் கொடுப்பது தொடர்கிறது!

வடக்குக் கிழக்கின் ஏனைய பிரதேசங்களைப் போலவே, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்களது வரலாறும் பல நூற்றாண்டுக்கும் மேலானது. அவர்களது வாழ்விடங்கள் அவர்களது பூர்வீக நிலங்கள் இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. சட்ட ரீதியாகவும் சரி, தாமீக அடிப்படையிலும் சரி. இதனை மறுத்துரைக்க எந்த மடையனும் துணிய மாட்டான்.

கடந்த 27.03.2003 ஆம் திகதி வவுணதீவில் விடுதலைப் புலிகள். முஸ்லிம் தூதுக் குழு. இலங்கை கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் நடாத்திய பேச்சுவார்த்தையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகக் குறுகிய அளவில் தற்போது முஸ்லிம்கள் வாழ்ந்து வரும் நிலங்கள் கூட, அவர்களுக்குரித்தான வை அல்ல என்றும் அவை தமிழ் மக்க ளது பூர்வீக நிலங்கள் எனவும் புலிகள் அங்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இதில் விவசாயக் காணிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சென்றிருந்த பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத், யூஎல்எம். என் முபீன், எம்.எல். ஆதம்லெப்பை, எம்.டீ.எம். பரீத், எம்.எல்.எம். ஹுஸைஸன், எஸ்.எச். அழகுனியா ஆகியோர், விவசாயக் காணிகளுக்கான பிரச்சினை களை எந்தளவு தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதை இன்று வரை கப்பம் செலுத்துகின்ற ஒவ்வொரு முஸ்லிம் விவ சாயக் குடிமகனும் யோசித்துக் கொண்டிருக்கிறான். கப்பம் கொடுக்கிறது. தொடாகிறது.

அதே சமயம் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டது போக. பூர்வீக குடியிருப்புக் காணிகளும் முஸ்லிம் களுக்குச் சொந்தமில்லை என்று சொல் லும் போது. இதில் கலந்து கொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள் என்ன செய்தார் கள்? இந்தக் குற்றச்சாட்டுக்கு அவர்களது என்ன பதில் கூறப்போகிறார்கள்? இதற்கு அந்த உரிய இடத்திலே பதில் சொல்லத் திராணியற்றவர்கள் எந்த விதத் தில் முஸ்லிம் மக்களது தலைவிதியை மாற்றப் போகிறார்கள்?

பூ. அஹமட் - வாழைச்சேனை

முஸ்லிம் குரலின் பணி ஆரோக்கியமானது

ஒரு சமூகத்தின் விடுதலையின் உயிர்ப்பை அடிநாதமாகக் கொண்டு சமூகத்தின் மீதான இனசங்காரத்தை துணிவுடனும், தெளிவுடனும், முஸ்லிம் குரல், முன்வைப்பது ஆரோக்கியமான சமூக மற்றுதலின் சிறந்த அடித்தளமாகவும் வழிகாட்டுதலாகவும் உணர முடிகிறது.

தடைகளையும் தாண்டி முஸ்லிம் தேசமெங்கும் முஸ்லிம் குரலின் நாதம் ஓங்கி ஒலிக்க வேண்டும். அல்லாஹ் உங்கள் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பான்.

உக்குவளை அக்ரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் அரசியலில் தலைமைத்துவ பிரச்சினை தீர தகுந்த வழி என்ன?

இலங்கை நாட்டின் பெரும்பான்மை இன அரசியல் அதிகாரங்கள் சிறுபான்மைத் தமிழ் சமூகத்திற்கு இழைத்த அட்டூழியங்களும். உரிமை மறுப்புக்களும்தான் தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு வழி வகுத்தது என்பது எவ்வளவு உண்மையோ, அதேயளவு உண்மைதான். சிங்கள. தமிழ் ஆகிய இரு இன அரசியல் அதிகாரங்களும் ஆயுதக்குழுக்களும் முஸ்லிம் சமூகத்திற்கு இழைத்த அட்டூழியங்களும். உரிமை மறுப்புகளும்தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி உருவாவதற்கும் காரணமாக இருந்தது என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

இந்தக் கட்சியை உருவாக்கி வளர்த்தெடுப்பதில் இதன் ஸ்தாபகர் மறைந்த எம். எச். எம். அஷ்ரப் அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள், சதிகள், கழுத்தறுப்புக்கள், காலை வாரிவிடும் கயமைத் தனங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இத்தனை இடையூறுகளையும் முறியடித்து முன்னேறுவதற்குக் காரணமாக மக்கள், போராளிகள், அவருக்குப் பக்கத்துணையாக இருந்தார்கள் என்பதைவிட தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்பதே மிகப் பொருத்தமானதாகும்.

காடு வெட்டினர் சிலர். கழனி திருத்தினர் சிலர். நீர் பாய்ச்சினர் இன்னும் சிலர். தங்களையே பசளையாக்கினர் மற்றும் சிலர். வீணர்களால் விபரீதம் ஏற்பட்டு விடாமல் வேலியாக இருந்து பாதுகாத்தனர் வேறு சிலர். இத்தனைபேர்களின் தியாகத்தினால் அஷ்ரப் என்ற சமூகத்தோட்டக்காரன் ஊன்றிய அரசியல் விதை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற மரமாக வளர்ந்து, இலைவிட்டு, கிளைவிட்டு, பூத்து, காய்த்து, கனிதர தொடங்கிய பிறகு பழம் தின்ன வந்தவர்களில் வௌவால்களும் உண்டு. வண்ணக்கிளிகளும் உண்டு. மரம் உண்டாக்கியது நட்டவர்கள் மாத்திரம் கனி தின்பதற்காக அல்ல. மற்றவர்களுக்காகவும்தான். தின்னட்டும். நன்றாகத் தின்னட்டும். ஆனால் சாமானியர்கள் என்பதற்காக மரத்தை வளர்ப்பதற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களை எல்லாம் ஓரங்கட்டிவிட்டு. ஒரு புறந்தள்ளி வைத்துவிட்டு இடையில் கனி தின்ன வந்தவர்களில் மரத்தினுடைய முழு உரிமையையும் அபகரிக்க நினைப்பதும். வௌவால்கள் அதற்குத் துணைபோவதும் அநியாயம், அட்டூழியம். அடாத செயல். வண்ணக்கிளிகளின் வனப்பிலே மயங்கி. வாய்ப்பேச்சில் ஏமாந்து. வாக்குறுதிகளை நம்பிய அப்பாவி முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பரிதாபம். பயங்கரம். படுமோசம். அஷ்ரப் உருவாக்கிய முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சியின் தலைமை பற்றிய விவகாரத்தில் தன்னையே அடிப்படையாக வைத்து யாப்பு எழுதியிருந்தார் என்பது யாவரும் அறிந்த உண்மை. அஷ்ரப் அவர்கள் எழுதிய யாப்பு திருத்தக்கூடாத தீர்ப்புமல்ல. திருத்தமுடியாத வார்ப்புமல்ல. ஆனால் அவர் எழுதிய "நான் எனும் நீ" கவிதை நூலில் தனக்குப்பிறகு போராளிகள் அனைவரும் தலைவர்கள் தான் என்ற குறிப்பு அவருக்குப்பின் தனித்தலைவன் இல்லை என்பதையும். அரசியல்வாதியாக எவரையும் அடையாளப்படுத்தவில்லை என்பதையும் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

நியாயப்படியும் நீதியின்படியும் அஷ்ரப் அவர்களின் மறைவுக்குப்பிறகு மரத்தை வளர்த்தெடுக்க அரும்பாடுபட்ட ஆரம்பப்போராளிகளில் ஒருவருக்கு அதன் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்குத் தகுதியானவர்கள் இல்லை என்று கட்சியின் உயர்மட்டக்குழு கருதினால் ஆரம்பப் போராளிகளும் இடையில் வந்த ஆற்றல் மிக்கவர்களும் கலந்த ஒரு கூட்டுத் தலைமையிடம் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். பெருமானார் (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பிறகு இடைக்காலத்தில் இஸ்லாத்தில் இணைந்து கொண்ட உமர் (ரலி) போன்ற அறிவும் ஆற்றலும், வீரமும் கொண்டவர்கள் இருந்தபோதும் ஆரம்பத் தோழரான வயது முதிர்ந்த அபூபக்கர் (ரலி) அவர்களே கலீபாவாக தெரிவு செய்யப்பட்டார் என்பது வெறுமனே வரலாறு மட்டுமல்ல வையகத்தார் அனைவருக்கும் ஒரு வலுவான படிப்பினையும் தான்.

இணைத் தலைமை இருந்தால் கட்சி இரண்டு பட்டுவிடும் என்று காரணம் சொன்னவர்கள் இன்றைய தனித்தலைமை என்ற கொள்கையால் கட்சி மூன்றாக, நான்காக சிதறுண்டு சமூகத்தை சீரழிவுப்பாதையிலே இட்டுச் செல்வது இந்தச் சந்தர்ப்பத்திலாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அஷ்ரப் அவர்கள் இருந்த காலத்தில். கட்சிக்குள் கருத்து

வேறுபாடுகள் இருக்கவே செய்தன. குறிப்பாக ஹிஸ்புல்லாஹ் அவர்களுக்கும் அஷ்ரப் அவர்களுக்கும் இடையே நிலவிய முரண்பாடுகள் அனைவரும் அறிந்ததே. அஷ்ரப் நினைத்திருந்தால் அப்போதே ஹிஸ்புல்லாஹ்வை கட்சியை விட்டு வெளியேற்றியிருக்க முடியும். ஆனால் ஆரம்பப் போராளியான அவரையும் அணைத்துச் சென்று பிரதியமைச்சர் பதவியும் வழங்கி கட்சியின் தனித்துவத்தைக் காப்பாற்றி தலைமைக்கு தகுதியானவன் தான் என்பதை நிரூபித்தார். விட்டுக்கொடுத்தவர்கள் கெட்டுப்போவதில்லை. கெட்டுப்போனவர்கள் விட்டுக்கொடுப்பதில்லை. என்பது அப்போதைய தலைமையையும் இப்போதைய தலைமையையும் நினைவுபடுத்துகிறது.

தலைமைக்குரிய தகுதி என்பது பிரச்சினைகள் தோன்றும் போது விட்டுக்கொடுத்து அதன் மூலம் ஒற்றுமையை ஏற்படுத்துவதே தவிர கட்சியை விட்டு எல்லோரும் விலகினாலும் நானே தலைவன் நான் சொல்வதே வேதவாக்கு என்ற இறுமாப்பு அல்ல.

தலைமைக்குத் தகுதியானவர் இவர்தான் என்பவர்கள். இவரிடம் தான் ஆற்றல் இருக்கிறது என்று நம்புபவர்கள். கட்சி சிதறுண்டு செல்லாமல் அதை தடுத்து நிறுத்துகின்ற பொறுப்பும் இவருக்குத் தான் உள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அதைச் செய்யத் தவறிய இவர் தனித் தலைமைக்கு தகுதியற்றவர் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தேர்தலிலே வெற்றி பெறுவது என்பது கட்சித் தலைமைக்கு வேண்டிய ஒரு தகுதியல்ல. காமராஜர், அறிஞர் அண்ணா போன்றவர்கள் கூட தேர்தலிலே தோற்றவர்கள் தான். கட்சியின் தலைமையையோ. அதன் உரிமையையோ ஆரம்பப் போராளிகளுக்கும் அதற்காகத் தம்மை அர்ப்பணித்தவர்களுக்குமே உண்டே தவிர இடையிலே வந்து தேர்தலிலே வெற்றி பெற்றவர்களுக்கு அல்ல. காலமெல்லாம் வேறுகட்சிகளுக்கு ஆதரவு அளித்து விட்டு முஸ்லிம் காங்கிரஸிலே இணைந்ததால் வெற்றி பெற்றவர்கள் நாளை தேர்தலிலே தோல்வியடைந்தால் மீண்டும் வேறு கமட்சிகளுக்கு தாவக்கூடியவர்கள். தேர்தலில் வெற்றி பெற்றதனால் எம்.பியாக இருந்து விட்டுப்போகட்டும். ஆனால் கட்சியை உருவாக்கிய போராளிகளை விட, தியாகிகளை விட கட்சியில் தாங்களே அதிகாரம் பெற்றவர்கள், உரிமை பெற்றவர்கள் என்ற எண்ணம் ஏற்புடையதல்ல. காலம் பதில் சொல்லும்.

மூன்று மொழிகளும் தெரிந்தவரே தலைமைக்குப் பொருத்தமானவர் என்ற சுருத்து சில பாமர மக்களை கவர்ந்துள்ளது. மூன்று மொழிகளும் தெரிந்தவர்கள் கட்சியில் வேறு யாரும் இல்லை என்று சொல்வதற்கில்லை. தெரிந்திருக்கும் மொழிகளின் எண்ணிக்கை தலைமைக்கான ஒரு தகுதியல்ல. அப்படியானால் முஸ்லிம் காங்கிரஸ் உயர் மட்டக்குழு உறுப்பினரான அல்ஹாஜ் ஹுஸைன் பைலா அவர்கட்கு உருது உட்பட நான்கு மொழிகள் தெரியும் என்பதால் மூன்று மொழி தெரிந்தவரை விட நான்கு மொழி தெரிந்த ஹுஸைன் பைலா தலைமைக்கு தகுதியானவர் என்று ஏற்றுக்கொள்ளலாமா? தலைமைப் பதவிக்கு மொழியோ. பட்டப்படிப்போ முக்கியமான ஒன்றல்ல. பட்டம் பெற்றவர்கள், பேராசியர்கள், வக்கீல்கள், நீதிபதிகள், டாக்டர்கள், வர்த்தகப்பிரமுகர்கள், புத்திஜீவிகள் எல்லாம் அங்கம் வகித்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிக மிகச் சாமானியரான திரு. ஆர். பிரேமதாஸ அவர்கள் தலைமை வகித்து அற்புதமாக செயலாற்றினார் என்பது ஓர் உதாரணம்.

அஷ்ரப் அவர்கள் மறைவுக்கு பிறகு முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. வளர்ச்சி என்பது சமூகத்தின் உரிமைகள் பெறப்படுவது. கட்சியின் ஒற்றுமை பேணப்படுவதுமே அன்றி பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அல்ல.

12 எம்.பி.க்களை வைத்துக் கொண்டு இப்போது செய்ய முடியாததையெல்லாம் 8 எம்.பிக்களை வைத்துக் கொண்டு அஷ்ரப் அப்போது செய்து காட்டினார் என்பது பாலர் பாடம்.

அஷ்ரப்பின் தலைமையில் 8 எம்.பிக்கள் தான். ஆனால் தற்போதைய தலைமையில் 12 எம்.பிக்கள் என்று சிலர் பெருமையடித்துக் கொள்வது பேதமைத்தனம்.

ஹக்கீம் ஒரு புதிய கட்சியை ஆரம்பித்து 12 எம்.பிக்கள் வெற்றி பெற்றிருந்தால் அது சாதனைதான். மரம் வைத்தவுடன் பழம் தருவதில்லை. கடுமையான உழைப்புக்குப் பின்னர் முதலில் நான்கு கனிகள் பிறகு இருமடங்காகி 8 கனிகள். இப்படி இரட்டை மடங்காக கனிகள் தரும் அற்புத மரம் தான் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அஷ்ரப் இருந்திருந்தால் 8 இருமடங்காகி 16 கனிகள் தந்திருக்கும் ஆனால் இவரின் தலைமையால் 12 கனிகளாக குறைந்தன என்பதே யதார்த்தம்.

அஷ்ரப்போடு ஒப்பிட்டுப் பேசுவதற்குக் கூட எவரும் இலாயக்கற்றவர்கள் தான். ஆனால் ஹக்கீம் அதிஷ்டக்காரர். ஏனெனில் அஷ்ரப்பின் மரணமே இவரின் யோகம் தான். ஆனால் முஸ்லிம் சமூகம் பாவம்தான். உயர்மட்டக்குழு உறுப்பினர்களுக்கும் இப்போது யோகம் அடித்து இருக்கிறது. கட்சி வெற்றிபெற்று அமைச்சர் பதவிகள் கிடைத்த பின்னர் ஹக்கீமைச் சந்திப்பதற்கு மாதக்கணக்கில் உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் தவம் கிடந்தார்கள். கட்சியை வளர்த்த அவர்கள் செல்லாக்காசாகவே கருதப்பட்டார்கள். இன்று கட்சி பிளவு பட்டிருப்பதால் ஒவ்வொரு உறுப்பினரையும் தம் பக்கம் இழுக்கும் முயற்சியில் இன்று பாராளுமன்ற உறுப்பினரின் ரேட் அளவுக்கு உயர்மட்டக் குழுவினரின் ரேட்டும் உயர்ந்துள்ளது. மேடைகளில் இடம் கிடைக்கிறது. தலைமையால் வானளாவ புகழப்படுகிறார்கள். சமூகத்திற்காற்றும் தொண்டு முக்கியமல்ல. தலைமக்குச் சாதகமான தலையாட்டலே தகுதியாகக் கருதப்படுகிறது. இத்தனை இழிவுக்கும் காரணம் தலைமைப் போட்டிதான். இதற்கு உண்டான ஒரே தீர்வு.

ஏக போக அதிகாரங்களைக் கொண்ட தனித்தலைமை இருக்கலாம். தப்பில்லை.அவர் கட்சியின் சகல அதிகாரங்களையும் கொண்டிருக்கலாம். தவறில்லை. ஆனால் தலைமைப் பொறுப்பை ஏற்பவர்அமைச்சுப் பதவிகளை பெறக்கூடாது. இந்தக் கோட்பாட்டை கொள்கையாகக் கொண்டால் தலைமைப் பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும்.

இது நடைமுறையில் இல்லாத ஒன்றல்ல. அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த கே. காமராஜர் அமைச்சு பதவிகள் எதனையும் பெறாமல் கட்சியின் தலைவராக இருந்து திறம்படச் செயலாற்றினார். இதற்கு இவர் முன்வருவரானால் அவர் தனித் தலைவராக இருப்பதில் சமூகத்திற்குக் கேடில்லை. முஸ்லிம் காங்கிரஸ் முழுமையாக ஒன்றுபடுவதற்கு இதுவே சிறந்த வழி. ஹக்கீமும் அதாவுல்லாவும் அமைச்சராக இருந்துவிட்டுப் போகட்டும். அமைச்சர் பதவி தேவையில்லாத ஒருவர் தலைவராகட்டும்! அனைத்துக்கும் காரணம் இந்த அமைச்சர் பதவிதான்.

ஆர்ஜேஎஸ்

நம்மில் உருவாகும் மௌலவிகளுக்கு பொது அறிவின் அவசியம் உணர்த்தப்பட வேண்டும்!

நம்மிடையே அரபு மத்ரசாக்களுக்கு குறைவில்லை. பள்ளிவாசல்களில் கத்தீப் பேஷ் இமாம் நியமனம் கிடைக்காத உலமாக்களில் பலர், பத்து-பதினைந்து மாணவர்களை வைத்துக் கொண்டு சிற்சிறு அரபு மத்ரசாக்களை நடத்துவதையும் "முல்லா" அறிந்து வைத்துள்ளேன்.

அரபு மொழி - இலக்கியம் - பிக்ஹ் என்னும் மார்க்கச்சட்டம் எனப்பயிலும் பிரஸ்தாப அரபுக்கல்லூரி மாணவர்கள் ஆறாண்டு கால (சில கல்லூரிகளில் ஏழாண்டு, எட்டாண்டு) பாடநெறியை முடித்துக் கொண்டு, பரீட்சை எழுதி "ஸனது" பெற்று, வருடந்தோறும் வெளியேறிக் கொண்டுதான் இருக்கின்றனர். இன்று நம் சன்மார்க்க சமூகத்தில் கணிசமான அளவு மௌலவிகள் இருக்கவே செய்கின்றனர் என்பதை முல்லாவினால் உறுதியாகக் கூற முடியும். அல்ஹம்துலில்லாஹ்!

ஆனால் - இவ்வாறு சமுதாய அரங்கிற்கு வரும் புதிய மௌலவிகள் பலருக்கு வெளியுலகமே இன்னதென்று அறியாத, பொது அறிவில் பூச்சிய நிலையும் ஒரு தகுதியாக இருப்பது விசனிக்கத்தக்கது மட்டுமல்ல, பிரயோசனமற்றதுமாகும். அரபு மத்ரசாக்களிலிருந்து ஆண்டுதோறும் மௌலவி உலமாக்கள் இப்படியே இருப்பது சரியா?

வெளிவரும் மௌலவிகள் தாம் பயின்ற துறைகளில் - மார்க்கக் கல்வியில், அரபு மொழி, இலக்கியத்தில் நிரம்ப தகுதி பெற்றவர்களாக பாண்டித்தியம் மிக்கவர்களாக இருக்கலாம். தாம் பெற்ற "இந்த" அறிவுப் பொக்கிஷத்தை சமூகத்திற்குப் பயன்படுத்த வேண்டாமா? சமூக மஜ்லிஸில் முன்வைக்க வேண்டாமா? ஒவ்வொரு மௌலவியும் அரபு வழி மார்க்கத்தை துறைபோகக் கற்று தன் மட்டில் பேரறிவில் பெட்டகமாக இருந்து விட்டால் போதுமா? தான் கற்ற கல்வி - அதுவும் இஸ்லாமிய சரீஆ கல்வி பிறருக்கு சமூகத்திற்கு பயன்பட பயன்படுத்த வேண்டாமா?

சன்மார்க்க நெஞ்சங்களே - சமுதாயக் கரைகளில் பிரச்சினைகள் அலைமோதும் வேளைகளிலெல்லாம் "மௌலவிகள் - உலமாக்கள் சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டும். அரசியல்வாதிகளை நம்பிப் பிரயோசனமில்லை - உலமாக்கள் சமூகத்திற்கு தலைமை ஏற்க வேண்டும்" என்றெல்லாம் குரல் எழுப்பப்படுகிறது கோஷமிடப்படுகிறது.

இந்தக்குரலும் - கோஷமும் இன்று வரை செவியேற்கப்பட்டதாகவோ, செயல் வடிவம் பெற்றதாகவோயில்லை. இது ஏன்...?

நம் மௌலவிமார் பலருக்கு நாட்டு நடப்புக்கள் என்னவென்று தெரிவதில்லை. தேசம் எந்தளவு பிரச்சினைகளில் மூடிக்கிடக்கின்றது? எந்தத்திசை நோக்கிச் செல்கின்றது? என்று எதுவும் புரிவதில்லை. உள்நாட்டு அரசியலே புரியாதபோது, வெளிநாட்டு அரசியல் - உலக அரசியல் எங்கே புரியப்போகின்றது.

இன்னும் சில மௌலவிகளுக்கு கேட்டார் பிணிக்கும் வகையில் பயான் பண்ணவே தெரிவதில்லை. தான் சொல்ல விரும்புவதை - சரீஆவின் சாற்றினை உரிய முறையில் சபைப்படுத்த தாய்மொழி தமிழிலே கூட, மொழிவளம் கைகொடுப்பதாக இல்லை. இன்னும் "இருக்குகின்றனர்" என்றும் "மக்கள்கள்" என்றும் சொல்லும் மௌலவிகளும் இருக்கவே செய்கின்றனர். தமிழிலே இந்த நிலை என்றால், சிங்களம், ஆங்கிலம் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

இதற்குக் காரணம் என்ன?

இப்போதும் சில அரபு மத்ரசாக்களில் தமிழ் பத்திரிகை படிக்கவிடுவதில்லை. கல்லூரி நூலகங்களில் தமிழ் நூல்கள் இல்லவே இல்லை. அரபு மொழி பாண்டித்தியத்தை - அரபு தாய்மொழி அல்லாத நம் மாணவர்களிடையே கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காக. பிற மொழி (தமிழ் உட்பட) வாசம் சற்றேனும் உள்நுழைவதை சட்டம் போட்டுத் தடுத்து வைத்துள்ளனர். விதிவிலக்கான மத்ரசாக்கள் விரல் விட்டு எண்ணத்தக்களவும் உண்டென்பதை முல்லா அறியாமலில்லை.

ஒரு குறிப்பிட்ட மொழியில் மாணவர்கள் ஆர்வப்பட வேண்டுமானால், அதில் திசை திரும்பி விடாமல் இருப்பதற்கு இப்படியெல்லாம் கட்டுப்பாடு விதிப்பது புதிய விடயமல்ல. அந்தக்காலத்தில் இங்கிலீஸ் கிளாசில் தமிழில் பேசி, வார்த்தைக்கு இவ்வளவு என்று பைஃன் கட்டிய அனுபவமெல்லாம் நம்மில் பலருக்க இருப்பதுபோல, முல்லாவுக்கும் உண்டு.

குட்டிக்குட்டி மத்ரசாக்களில் நூலக வசதிகள் - போதியளவு பாட நூல்கள் கூட இல்லாதிருப்பதையும் "முல்லா" இவ்விடம் சுட்டிக்காட்ட வேண்டும். 10-15 சிறுவர்களை வைத்து ஆரம்பிக்கப்படும் இப்படியான "குட்டி மத்ரசாக்கள்" பல நாளடைவில் பணமுடை காரணமாக மூடுவிழா கண்டதுமுண்டு. இப்படி மூடுப்பட்ட மத்ரசா மாணவர்கள் இக்கரையும் இன்றி அக்கரைறயுமின்றி வெறுமனே வீதியுலா வருவதையும் வேதனையோடு வெளிச்சமிட்டுக்காட்ட வேண்டும்.

மௌலவி மாணவர்களின் தரக்குறைவுக்கு இப்படியெல்லாம் குறைபாடுகள் பல நிலவியபோதும், சமுதாயத்தின் எதிர்காலம் புரியாத இன்றைய தடுமாற்ற நிலையில், முன்னணி அரபு மத்ரஸா நிர்வாகங்களும், மூத்த உலமாக்களும், சமுதாய கல்விமான்களும், சமுதாயத்தலைவர்களும் சிந்தித்தாக வேண்டிய ஒரு விசயத்தை "முல்லா" சமுதாய நலன்கருதி தொட்டுக்காட்டுவதே சாலச்சிறந்த தொன்றாகும். அதாவது....

நம்மிடையே இன்று உருவாகிவரும் உலமா மாணவர்களுக்கு பொது அறிவில் நாட்டத்தையும், தேட்டத்தையும், தெளிவையும் ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக தேசிய, விதேசிய, உலக நடப்புக்களையும், நிலவரங்களையும், செய்திகளையும், அறியும் வாய்ப்பை உருவாக்க வேண்டும். உலமா மாணவர்கள் கலாசாலையை விட்டும் வெளியேறி, சமூக அரங்கிற்கு வரும் நிலையில் அவர்கள் அந்த சமூகத்திற்கு அறிவு, சமயப்பணிகளை ஆற்றுவதற்கு, தாய்மொழியிலேனும் ஓரளவு மொழி வளத்தை உண்டாக்க வேண்டும். முடிந்தால் சிங்களம் ஆங்கிலம் அறிவையும் போதிக்க வழிசெய்ய வேண்டும். நூலக வசதிகளை இது விடயத்தில் அவசியம் ஏற்படுத்த வேண்டும்.

மொழி வளமும் பொது அறிவும் நம் உலமா மாணவல்களுக்கு மேலதிக தகைமையாக ஏற்படுத்தும் நன்னோக்கில், மத்ரஸா. பாடத்திட்டங்களும், நேரசூசியும் சாதகமாக்கப்பட வேண்டும். இவ்வாறு மேலதிக தகைமைகளை ஏற்படுத்தினாலே, எரியும் பிரச்சினைகளின் நடுவே. தடுமாறும் சன்மார்க்க சமுதாயத்திற்கு மிம்பர்களை முறைப்படி பயன்படுத்தி, பயான் பண்ண முடியும் சமூகமும். உலமாக்களால் உருப்படியான பயனைப் பெறமுடியும். இன்றேல்... பலன் என்றும் அரைகுறைதான். சிந்திப்போமாக.

இந்தப்பத்திரிகை யாரை ஆதரிக்கிறது?

சென்ற ஞாயிற்றுக்கிழமை பத்திரிகை வேண்டுவோம் என்ற எண்ணத்தில் பத்திரிகைக் கடையில் நுழைந்தேன். புளித்துப்போன தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகளை கண்டுவிட்டு வெறுமே திரும்ப எத்தனித்த என்னை "மாஸ்டர்! 'முஸ்லிம் குரல்' இருக்கு, தரவா?" என்று கேட்ட முதலாளியை திருப்திப்படுத்த 16-05-2003 திகதியிட்ட உங்களது பத்திரிகையை வாங்கி வந்தேன். இதுவரை "அல் ஹஸனாத்" தை மட்டும் பக்கம் பக்கமாகப் படித்த எனக்கு, உங்களது பத்திரிகையும் அதே ஆர்வத்தை ஊட்டியது. இந்தப்பத்திரிகை யாரை ஆதரிக்கிறது? என்ற கேள்விக்கு விடை காண முயன்று நான் தோற்றுப் போய்விட்டேன். அதன் முடிவு இனி உங்கள் பத்திரிகையின் நிரந்தர வாசகர்களுள் ஒருவனாக நானும் சேர்ந்து விட்டேன் என்பதே. அந்த முடிவை நிலைத்து நிற்க வைப்பது உங்களது கையில் தான் இருக்கிறது. "முஸ்லிம் குரல்" இன்ஷா அல்லாஹ் பிரமாதமாக வளரும் என்பதாகத் உணரக்கூடியதாக உள்ளது. ஆனால் புகழ் மணம் பரப்பும் போது எமது சமூகத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு பிரபல்யம் தேடித்திரிகின்ற பேரின வாதிகளின் காலடி அழுக்கை நக்கித் திரிகின்ற அரசியல் கோமாளிகள் தலையை நுழைத்து நாசமாக்கி, நாற்றமடிக்க வைத்துவிடுவார்கள். கவனம், அல்லாஹ் பாதுகாப்பானாக.

எம்.எல். ஹாஜா சஹாப்தீன்
புத்தளம்.

எப்படியொரு பத்திரிகை முஸ்லிம்களுக்காக வெளிவர வேண்டுமென கனவு கண்டு கொண்டிருந்தேனோ - என் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பூர்த்தி செய்து, மனநிறைவை தரக்கூடிய முஸ்லிம்களின் குரலாக பத்திரிகையாக 'முஸ்லிம் குரல்' இருக்கிறது. உங்கள் அரசியற் பார்வை தனிச்சிறப்பானது.

ஏ.எல்.சலீம்
மருதானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பிரதேசங்களில் விவசாயம் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி

முஸ்லிம்களின் காணிப்பிரச்சினைக்கு தீர்வு என்ற போர்வையில் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்களை ஆக்கிரமிப்பாளர்களாகக் காட்டப் புலிகள் தரப்பு முயன்று வருவதைக் கடந்த இதழில் சுட்டிக் காட்டியிருந்தோம். இக்கருத்துக்கு வலு சேர்க்கும் வகையில் ஈழநாடு பத்திரிகையில் மட்டக்களப்பிலிருந்து எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட கட்டுரையை நமது மக்களுக்கு மீள் பிரசுரம் செய்கிறோம்.

தமிழ்ப் பிரதேசங்களும் முஸ்லிம்களும் தொடர்பான இரண்டு முக்கியமான விடயங்களை இந்த இடத்தில் நாம் ஆராய வேண்டியுள்ளது.

1. கிழக்கு மாகாணத்தில் தமிழ் பிரதேசங்களினுள் முஸ்லிம்கள் விவசாயம் பண்ண முடியாமல் போனதற்கான காரணங்கள்.

2. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அபகரித்துள்ள தமிழர்களது பாரம்பரிய நிலங்கள்.

இந்த இரண்டு விடயங்களின் அடிப்படையில்தான் முஸ்லிம்களது காணிப் பிரச்சினையை நாம் அணுக வேண்டியவர்களாக உள்ளோம். சிங்கள அரசுக்கும் தமிழ் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் உக்கிரம் அடைந்து வந்த அதேகாலப் பகுதிகளில் முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்குமான உறவுகளிலும் பாரிய விரிசல்கள் ஏற்பட ஆரம்பித்திருந்தன.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமித்து தமிழ் மக்களை அழித்தொழிக்கவென வந்த ஸ்ரீலங்காப் படைகளுக்கு கிழக்கு மாகாண முஸ்லிம்கள் நூற்றுக்கு நூறு வீதம் ஆதரவு வழங்க ஆரம்பித்தார்கள். ஸ்ரீலங்காப் படைகளிலும் ஊர்காவற்படையிலும் தம்மை இணைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு மேற்கொண் டிருந்த அனைத்து இன அழிப்பு நடவடிக்கைகளிலும் முஸ்லிம்கள் தங்களையும் ஈடுபடுத்திக் கொண்டார்கள். வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடி யேற்றங்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்த காலங்களில் அந்த குடியேற்றங்களை மேற்கொண்ட அரசுக்குக்கே கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தொடர்ந்து ஆதரவு வழங்கி வந்திருந்தார்கள். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள், கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றங்களை எதிர்த்ததாகவோ கண்டித்ததாகவோ, வரலாறு கிடையாது. ஏதோ ஒரு வகையில் இக்குடியேற்றங்கள் அனைத்துக்கும் முஸ்லிம்கள் துணையாகவே இருந்து வந்துள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் புலிகள் பாரிய நிலப்பகுதிகளை கைப்பற்றி தக்க வைத்துக் கொண்டிருந்த காலப்பகுதியில் கூட, அப் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளில் விவசாயம் செய்வதற்கு முஸ்லிம்களை புலிகள் அனுமதித்தே வந்தார்கள். ஆனால் பெரும்பான்மையான முஸ்லிம்களோ புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் விவசாயம் மேற்கொள்ளும் போர்வையில் உள்நுழைந்து புலிகளின் நடமாட்டங்கள் பற்றிய தகவல்களை ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு வழங்கும நடவடிக்கையில்தான் ஈடுபட்டு வந்தார்கள். ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த சில முஸ்லிம்களும் விவசாயிகள் என்ற போர்வையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நுழைந்து 'வாடி' அடித்துத் தங்கியிருந்து உளவு வேலைகளில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன. புலிகளின் நடமாட்டம் பற்றிய தகவல்கள் புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் பற்றிய தகவல்கள் போன்றவற்றை இவர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு வழங்கியதுடன் சிலர் புலிகளுக்கு எதிராக நேரடியாகவே நடவடிக்கைகளில் இறங்கியிருந்த சந் தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக வாகநேரிக் குளத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடவெனச் சென்ற முஸ்லிம்கள், ஒருநாள் மியான்குளம் இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினரைத் தம்முடன் அழைத்துச் சென்று புலிகள் நடமாடும் வழியில் அவர்களை பதுங்கியிருக்கச் செய்து இரண்டு வேவுப் புலிகளை சுட்டுக் கொல்வதற்கு உதவியிருந்தார்கள். இதே போன்று பொண்டுகன்சேனை பிரதேசத்தில் புலிகளின் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்குள் வியாபார நடவடிக்கைகளுக்காக சென்று வந்து கொண்டிருந்த சில முஸ்லிம் விவசாயிகள், அப்பிரதேச நிதிப்பொறுப்பாளராக இருந்த 'ராஜு' என்பவரது நடமாட்டம் பற்றிய தகவல்களை ஸ்ரீல ங்கா இராணுவத்தினருக்கு வழங்கிய துடன் ஒருநாள் இராணு வத்தினரை தம்முடன் அழைத்துச் சென்று ராஜீவை சுடுவதற்கு உதவி புரிந்தார்கள். இதேபோன்று வியாபார மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் சென்று வந்த முஸ்லிம்கள் மேற்கொண்ட பல காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகளால் விடுதலைப் புலிகள் ஏராளமான தமது போராளிகளை இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக 2001ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் "ஆழ ஊடுருவித் தாக்கும் அணி" கிழக்கு மாகாணத்தில் மேற்கொண்ட பல நடவடிக்கைகளுடன் கிழக்கு - மாகாணத்தைச் சேர்ந்த பல முஸ்லிம்களும் சம்பந்தப்பட்டிருப்பது வெளிப்படையான ஒரு உண்மை. புலிகளின் இராணுவப் புலனாய்வு பொறுப்பாளர் நிசாம் மீதான தாக்குதல், மட்டு - அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் மீதான தாக்குதல் முயற்சி போன்றனவற்றிற்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வியாபார நடவடிக்கைகளுக்காக அடிக்கடி சென்று வரும் முஸ்லிம்கள் உதவிய விடயம் அனைவருக்கும் தெரியும்.

இதேபோன்று மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத்தில் மற்றும் அம்பாறை மட்டக்களப்பு தமிழ்க் கிராமங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அநேகமான படுகொலைகளில் ஏதோ ஒரு வழியில் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. தமிழ் கிராமங்கள் மீதான படுகொலைகளை மேற்கொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அந்த கிராமங்களுக்கு வருவதற்கு முஸ்லிம்களே வழி காண்பிப்பவர்களாக இருந்து வந்துள்ளார்கள்.

உதாரணமாக உடும்பன்குளப் படுகொலைகளுக்கு இராணுவத்தினருக்கு வழி காண்பித்து வந்தவர்கள் முஸ்லிம்களே எனபது விசாரணைகளின் போது வெளிப்பட்டிருந்தது. முஸ்லிம்கள் தமிழ் கிராமங்களில் அதுவும் குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ் கிராமங்களில் விவசாயம் செய்யவோ, அல்லது வியாபாரம் செய்யவோ அனுமதிக் கப்படாததற்கு அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்களை காட்டிக்கொடுத்ததே காரணம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக முஸ்லிம்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு சொந்தமான பாரம்பரிய நிலங்கள் பற்றியும் நாம் இந்த இடத்தில் அக்கறையைச் செலுத்தியேயாக வேண்டும். கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு சொந்தமான பல பாரம் பரிய பிரதேசங்கள், தற்பொழுது முஸ்லிம்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இந்த நிலங்கள் தமிழ் மக்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்படாத நிலையில் முஸ்லிம்கள் மட்டும் தமது நிலங்களின் பயனை பெற முயலுவதென்பது நிச்சயம் ஒரு நேர்மையான விடயமல்ல.

> "கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு சொந்தமான பல பாரம் பரிய பிரதேசங்கள், தற்பொழுது முஸ்லிம் களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இந்த நிலங்கள் தமிழ் மக்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்படாத நிலையில் முஸ்லிம்கள் மட்டும் தமது நிலங்களின் பயனை பெற முயலுவதென்பது நிச்சயம் ஒரு நேர்மையான விடயமல்ல."

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் மரபு வழியாக வாழ்ந்து வந்த பல பிரதேசங்களில் இருந்து அவர்கள் முஸ்லிம்களால் அடித்து விரட்டப்பட்ட சம்பவங்கள் பற்றியும் முஸ்லிம்களின் நெருக்குதல்கள் காரணமாக தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறிய தமிழ் மக்கள் மீளவும் தமது இருப் பிடங்களில் குடியேற்றப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காண்பிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது.

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகி ஸ்ரீ லங்காவின் ஆக்காமிப்புப் படைகள் கிழக்கு மாகாணத்திற்குள் நுழைந்ததைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு இன அடக்குமுறைப்போரை அது கட்டவிழ்த்து விட்டிருந்தது. சிங்களப் படைகளின் இந்த இன அடக்குமுறைப்போரை தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு "இன அழிப்பு" அல்லது "இனச் சுத்திகரிப்பு" போராக மாற்றிய பெருமை கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களையே சாரும்.

ஸ்ரீ லங்காப்படைகளின் ஆசியுடன் நடைபெற்ற அம்பாரை மாவட்டத் தமிழ் மக்களுக்கு எதிரான இந்த இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் தமிழ் கல்விமான்கள் பலர் கொல்லப்பட்டார்கள். இந்து ஆலயங்கள் பல தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. தமிழ் மக்கள் நமது விளை நிலங்கள், வீடுகள், உடைமைகள் என்பனவற்றை இழந்தார்கள். தமிழர்கள் நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த தமது கிராமங்களை கைவிட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டார்கள்.

பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அம்பாறை மாட்டத்தில் மிகவும் பலம் பெற்றுக் காணப்பட்ட முஸ்லிம்கள், போரின் கொடூரம் காரணமாக ஒடுக்கப்பட்டிருந்த அப்பகுதி தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட ஒரு அரசியல் ஆக்கிரமிப்பை மிகவும் கட்சிதமாக மேற்கொண்டிருந்தார்கள்.

இதனால் அம்பாறை மாவட்டத்தில் இருந்த தமிழர்களின் பாரம்பரிய கிராமங்கள் தமிழர்களுக்கு அந்நிய பூமிகளாகின. தமிழர்களின் வளமான வாழ்க்கைக்கு கட்டியம் கூறியபடி நிமிர்ந்து நின்ற நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த இந்து ஆலயங்கள், இருந்த சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டன.

உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் பரம்பரை பரம்பரையாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பாலமுனை, பாணமை, மீனோடைக் கட்டை, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, காரவாகு, தீகவாவி, மாந்தோட்டம், கொண்ட வெட்டுவான், கூரணி, செம்மணிக்குளம், தங்க வேளாயுதக்புறம் உடும்பன் குளம் போன்ற தமிழ் கிராமங்கள் தற்பொழுது தமிழர்கள் "புதினம் பார்ப்பதற்கு" கூட செல்ல முடியாத தனி முஸ்லிம் கிராமங்களாக மாற்றப்பட்டு விட்டன.

அதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் முற்றிலும் தமிழர்களே வாழ்ந்து வந்த அட்டப்பள்ளம், சவளக்கடை, திராய்கேணி, சொரிக்கல்முனை, வீரச்சோலை போன்ற தமிழ் கிராமங்கள் படிப்படியாக முஸ்லிம்களின் அரசியல் மற்றும் பொருளாதார ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாகி, எந்நேரமும் தமிழ் மக்களால் கைவிடப்படக் கூடிய நிலைமைக்கு வந்துள்ளது.

இப்பிரதேசத்திலிருந்த தமிழ் மக்கள் மீதும் அவர்களுக்கு பொருளாதார இலக்குகள் மீதும் இராணுவம் அடக்குமுறையை முற்று முழுதாக கட்ட விழ்த்து விட்டு அவற்றின் விளைவுகளை முஸ்லிம்கள் தமதாக்கிக் கொண்டார்கள். இப்பிரதேச வாழ் மக்கள் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டார்கள். விவசாயம் செய்ய முடியாத, செய்த விவசாயத்தின் விளை பொருட்களை விற்க முடியாத சுதந்திரமாக பிரயாணம் செய்ய முடியாத நிலை என்பன இப்பிரதேச வாழ் தமிழ் மக்கள் அவர்களது கிராமங்களை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.

இப்பிரதேசங்களில் ஆண்டாண்டுக் காலமாக இருந்து வந்த இந்து ஆலயங்களை அழித்து விடுவதும் தமிழ் மக்களை இப்பிரதேசங்களிலிருந்து விரட்டி விடுவதற்கும் அப்படி விரட்டியடிக்கப்பட்ட மக்கள் மீண்டும் திரும்பி வர முடியாமல் பண்ணுவதற்குமான ஒரு ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது.

சம்மாந்துறையில் இருந்த காளிகோவில், காரைதீவு கண்ணகி அம்மன் கோவில், அட்டைப்பழத்தில் உள்ள மீனாட்சி அம்மன் கோவில் போன்றன முஸ்லிம்களால் சேதமாக்கப்பட்டன.

கரவாகு என்ற கிராமத்தில் இருந்த பல வருடங்கள் பழமை வாய்ந்ததும், மிகவும் பிரசித்தி பெற்றதுமான கரவாகு காளி கோவில் முஸ்லிம்களால் முற்றாக உடைக்கப்பட்டு கோவில் இருந்த இடத்தில் தற்பொழுது ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று மீனோடைக்கட்டு பிள்ளையாரடி கோவிலும் முஸ்லிம்களால் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு பின்னர் கோவில் இருந்த இடத்தில்

முஸ்லிம் அரசியல் தலைமைகளே இதற்கு பதில் சொல்வீர்களா?

முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டார்கள். ஒட்டமாவடி என்ற கிராமத்தில் இருந்த பிள்ளையார் கோவில் முஸ்லிம்களால் ஆக்கிரமிக்கப்பட்டு கோவில் மூலஸ்தானம் இருந்த இடத்தில் தற்பொழுது மாட்டி றைச்சிக் கடை நிறுவப்பட்டுள்ளது.

நிந்தவூர் முருகன் கோவிலும், முஸ்லிம்களின் கோரத்தாண்டவத்திற்கு இலக்காகி முற்றாக தரைமட்டமாக்கப்பட்டு, தமிழர்கள் எவரும் செல்ல முடியாத தனி முஸ்லிம் பிரதேசமாக தற்போது மாற்றப்பட்டுள்ளது. இது போன்று பல பிரதேசங்கள் முஸ்லிம்களால் அழிக்கப்பட்டு அபகரிக்கப்பட்ட நிலையில் தற்பொழுது உள்ளன.

கொடுமையான யுத்தத்தை தமிழ் மக்கள் எதிர்கொண்ட காலத்தில் முஸ்லிம்களால் நயவஞ்சகமாக அபகரிக்கப்பட்ட தமிழர்களுக்குச் சொந்தமான பல பிரதேசங்கள் தற்பொழுதும் தமிழர்கள் செல்ல முடியாத பிரதேசங்களாக காட்சி தந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருக் கையில் முஸ்லிம்களின் நிலங்கள் பற்றி ஒப்பாரி இடுபவர்கள் தாங்கள் அபகரித்து வைத்துள்ள தமிழர்களின் நிலப்பிரதேசங்கள் தொடர்பிலும் சரியான அக்கறை காண்பிக்க முன்வரவேண்டும்.

இதுவே தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையில் ஒரு சமாதானம் ஏற்படவும் அது நிலைத்து நிற்பதற்கும் வழி சமைக்கும்.

ஆனால் தற்போது தமிழ் தரப்பிற்கு ஏற்பட்டுள்ள சாவதேச அழுத்தத்தை பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம்கள் மேலும் தமது நில ஆக்கிரமிப்பை தொடர்வாகளேயானால் யுத்தம் மீண்டும் மூண்டு விடும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் அவர்கள் அதற்கு நிச்சயம் பதில் சொல்ல வேண்டியவர்களாகவே இருப்பார்கள்.

-இழஞ்செழியன்
ஈழநாடு-04 ஏப்ரல் 2003

நடந்த கதையின் நகல்

சோகத்தின் சொந்தக்காரி - ராசிதா

தகவல் : அபூ ருஸைக்

ராசிதா - தன் வாழ்க்கையில் இப்படி நடக்குமென்று கனவில்கூட நினைக்கவில்லை. அதுவும், தன் இல்லற வாழ்வின் ஆரம்பத்தில் மணவிழா நடைபெற்ற அன்றைய தினம் இப்படி ஒருநிகழ்ச்சி நடக்குமென்று அவள் எண்ணியிருக்கவுமில்லை, எதிர்பார்த்திருக்கவுமில்லை.

ஒரு இளம்பெண்ணுக்கு திருமணம் என்றால் சந்தோஷத்திற்கும், மகிழ்ச்சிக்கும் சொல்லவா வேண்டும். அந்த மகிழ்ச்சி சந்தோசமெல்லாம் அந்த "காட்சி" யோடு கண்ணுக்குத் தெரியாமல் மறந்தே போய்விட்டது.

ராசிதா-கொழும்பு கிறேன்பாலைச் சேர்ந்தவள். கிறேன்பாஸில் மெல்வத்தப் பகுதியைத் தெரியாதவர்கள் எவருமிருக்கமாட்டார்கள். வசதி கொஞ்சம் உள்ளவர்கள் "புளொக்" கல்லால் கட்டிய வீடுகளை தவிர்த்தால், எஞ்சியுள்ள வீடுகள் யாவும் பெட்டி வீடுகளே! சுகாதார கெடுதல்களுக்கு கட்டியம் கூறும் சேரிப் பகுதியேதான்!

ராஸிதா, அப்படியொரு "பெட்டி வீட்டில்" பிறந்து வளர்ந்து பெரியமனுஷியானவள்தான். கிறேன்பாஸிலுள்ள ஒரு முஸ்லிம் பாடசாலையில் ஏழாம் வகுப்புவரை பயின்றாள். தகப்பனோ, புறக்கோட்டை பஸாரில் "பேவ்மண்ட்" வியாபாரத்தில் துணைநிற்பவர். போனால் ஊதியம், போகாவிட்டால் போர்த்திப் படுக்க வேண்டியதுதான்! மழை பெய்தாலோ நிலை சொல்லவேண்டியதில்லை!

ராஸிதாதான் மூத்த மகள். இருகுட்டித்தங்கைகள், ஒரு தம்பி. உம்மாவோ கைச்செலவுக்கு இந்தியச் சாரிகளை கடனுக்கு விற்று தினமும் வசூலுக்காக மாளிகாவத்தை முழுதும் அலைந்துதிரியும் ஓர் அபலை. இந்நிலையில் ராஸிதா எப்படி தொடர்ந்து படிக்க முடியும்?

பெரிய மனுஷியானதோடு பெட்டி வீடே தஞ்சமென வீட்டுச் சிறைக்குள் தள்ளப்பட்டாள். ராஸிதாவின் நாட்கள் நடக்கவில்லை, ஓடின. மக்கள் செறிந்து வாழும் மெல்வத்தப்பகுதி .. சன சந்தடிக்குக் குறைவேயில்லை. வாப்பா பஸாருக்குப்போனால் உம்மா சேலை சல்லி பிரிக்கப்போய்விடுவாள். தம்பி தங்கையரோ பாடசாலைக்குப் போய்விட்டால் வீட்டில் தனித்திருப்பது ராஸிதா மட்டுமே! லெப்பம்மா ஓதிக்கொடுக்க வந்த நாளே மறந்துவிட்டது ராஸிதாவுக்கு.

பெண் பிள்ளை பெற்றவர்கள்-பிள்ளை பெரிய மனுஷியாகிவிட்டால், ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்கும் வரை நெருப்பை மடியில் கட்டிக்கொண்டு இருப்பது போலத்தான்! ராஸிதாவின் உம்மாவுக்கும் இதே நெருப்பைக் கட்டிக்கொண்ட தவிப்பு. எப்படியும் ஒருவனின் கையில் பிடித்துக்கொடுத்துவிட வேண்டும் என்ற நினைப்பை, ராஸிதாவின் வளர்ச்சி ஏற்படுத்திக் கொண்டேயிருந்தது.

இந்தாங்க..... நாலுபேர் கிட்டே சொல்லி வைங்க... நல்ல மாப்பிள்ளை அகப்பட்டா... நம்ம ராஸிதாவை கைப்பிடிச்சி கொடுத்திடலாம். மெத்தனமா இருக்காதீங்க... பொல்லாத காலம் என்று, உம்மா சதாவும் வாப்பாவுக்கு சொல்லும் வாசகங்கள் ராஸிதாவிடம் சராசரி ஆசைகளை வளர்த்துவிட்டதில் வியப்பில்லையே!

ஒரு நாள் - ஒரு கல்யாண புரோக்கர் பெண், முஸ்லிம்தான் - ராஸிதாவின் உம்மாவுடன் தெருவோரம் நின்று பேசிக் கொண்டிருக்கக் கண்டாள் ராஸிதா. சில நாட்களில் அந்த புரோக்கர் பெண் ராஸிதா வீட்டினுள் நுழைந்தாள். மாளிகாவத்தையிலுள்ள 'கெத்தாராம' ஸ்டேடியத்திற்கு பக்கத்தில் வாழும் ஒரு மாப்பிள்ளை இளைஞனாம்! பெயர் பர்ஸான், வயது 27 இருக்குமாம். சீதனம் எதுவும் வேண்டாமாம். பெண் வீட்டில் வைத்துக்கொண்டால் போதுமாம். கட்டட வேலைகளுக்கு சித்தாளாக - கல், மண், தூக்கும் எடுபிடியாக வேலை செய்தால், நாளொன்றுக்கு 250 ரூபா சிலவேளை 300 ரூபா வரை கிடைக்குமாம்!

இரு வீட்டாரும் பேசினர். பெண் பார்க்கும் படலம், மாப்பிள்ளை பார்க்கும் படலம் எல்லாம் நடந்தது. யார் கண்ணை யார் மறைத்தாரோ? குறைகள் எதுவும் தென்படவில்லை. சிறு சிறு குற்றங்குறைகள் கல்யாண விஷயங்களில் வரத்தான் செய்யும். அப்படியே வந்தாலும் ..... நாளடைவில் அவை சரியாகிவிடும் என்ற சமாளிப்போடு, விஷயங்கள் படிப்படியாக முன்னேறிக் கொண்டே போயின.

திருமணத்திற்கான திகதி தீர்மானிக்கப்பட்டுவிட்டது. ராஸிதா கல்யாணக் கற்பனைகளில் மிதக்கலானாள். ராஸிதாவின் பெற்றோர் கடன் பெற்று அங்கும், இங்கும் சென்று வசூலித்து எப்படியோ விஷயத்தை முடித்துவிடும் 'பெற்ற கடன் ஆரவத்தில்' பகீரதப்பிரயத்தனம் செய்யலாயினர்.

"அந்த நாளும்" வந்தது. ஆம்... இரு வீட்டாரும் இணங்கித் தீர்மானிக்கப்பட்ட திருமணநாள் வந்துவிட்டது. விரலுக்கேற்ற வீக்கம் போல வசதிக்கேற்ப கல்யாண ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. முனிஷிபல் மண்டபம் ஒன்றில், "ராஸிதா - பர்ஸான்" திருமணம் எப்படியோ நடந்து முடிந்தது. இராச்சாப்பாடு விருந்து இடம்பெற்றது. அழைக்கப்பட்டவர்கள் எல்லோரும் வந்திருந்தனர். பலர் "மொய்" எழுதி கவர் கொடுத்துச் சென்றனர்.

வந்த விருந்தாளிகள் கொஞ்சம், கொஞ்சமாக விடைபெற்றுச் செல்லலாயினர். படிப்படியாக திருமண வீட்டிற்குரிய சந்தடிகள் குறையலாயின. முக்கிய உறவினர்கள் சிலபேர் மட்டும் அன்றிரவு தங்கிச் செல்ல வற்புறுத்தப்பட்டனர். மறுதினம்தான் மண்டபம் பாரம் கொடுக்கவேண்டும் என்பதால் திருமணம் நடந்த அன்றிரவு பெண்வீட்டார் புதுமணத் தம்பதிகளுடன் தங்கலாயினர்.

இரவு, 11 மணி பிந்தி சில நிமிடங்கள் சென்ற பின் அந்த இம் தம்பதியர் ஒழுங்கு செய்யப்பட்ட அறையில் தனித்து விடப்பட்டனர். ராஸிதா ஆயிரம் கற்பனைகளை கல்பிலே சுமந்து வெட்கித்து நின்றாள். மாப்பிள்ளை பர்ஸானோ கட்டிலின் மூலையில் அமர்ந்தவாறு யோசனையில் மூழ்கியிருந்தான்.

சற்றைக்கெல்லாம் எழுந்துசென்று, கதவு ஒழுங்காகத் தாழிடப்பட்டுள்ளதா என உறுதி செய்துகொண்டு, ராஸிதாவின் அருகில் வந்தான். நேரம்... 11.35 அப்போது ...

"இங்க ... நான் ஒரு விஷயம் சொல்வேன் ... யாருக்கிட்டேயும் சொல்லாதீங்க... எனக்கொரு கெட்ட பழக்கம் இருக்கு ... உங்களைக் கல்யாணம் செஞ்சிட்டதாலே ... இனித் திருந்திடுவேன் ... இன்றைக்கு மட்டும் கடைசித் தடவையாகக் குடிக்கிறேன். என்னை மன்னித்துவிடுங்க..." என்ற மாப்பிள்ளை தன் பெட்டியில் எதையோ துலாவி எடுத்து நெருப்புப் பெட்டியுடன் மூலையில் அமர்ந்தான். ஆம் ... அவன் குடு போதைப் பொருளுக்கு ஆளான அடிமை. ராஸிதாவுக்கு திக்கென்றது. கற்சிலையாக மாறிவிட்டாள்.

கற்சிலையான ராசிதாக்கள் நம் சமுதாயத்தில் இன்னும் எத்தனையோ?

(பெயர்கள் மட்டும் கற்பனை)

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) - 180/
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 360/
1 வருடம் - (48 இதழ்கள்) - 720/

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பிவைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தக் குற்றவாளி பிரபாகரன்

சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும்

ஒரு முஸ்லிம் பார்வை

வே. பிரபாகரனும் முஸ்லிம் மக்கள் மீது யுத்தக் குற்றங்களை புரிந்துள்ளாகள் என்பது நிரூபணமாகின்றது.

பின்வரும் யுத்தக்குற்றங்களை தமிழீழ விடுதலைப் புலிகளும் அரைகுறை தமிழீழ அரசின் தலைவருமான வே. பிரபாகரனும் கிழக்கு - வடக்கு முஸ்லிம் மக்களின் மீது புரிந்துள்ளாகள்.

(அ) 1. 1990.10.28 - 1990.11.01 வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாணம், மன்னாரா, கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய நகரங்களில் இருந்து முஸ்லிம் மக்களை சகல சொத்துக்களும் பறிக்கப்பட்ட நிலையில், உடுத்த உடுப்புகளுடன் மாத்திரம் பலாத்காரமாக வெளியேற்றியமை.

வெளியேற்றப்பட்ட மக்களின் தொகை : 86,763

✦ இக்குற்றம் மனித குலத்திற் கெதிரான யுத்தக் குற்றத்தின் கீழ்வரும். நாடு கடத்தல், இன சம்ஹாரம் என்ற குற்ற வகையில் பட்டியலடுத்த முடியும்.

2. (அ) 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் பின் மட்டக்களப்பு - அம்பாறை - திருகோணமலை ஆகிய கிழக்கு மாகாணத்தில் இருந்த 50 க்கு மேற்பட்ட சிறிய முஸ்லிம் கிராமங்களில் இருந்து முஸ்லிம் மக்களை பலாத்காரமாக வெளியேற்றியமை.

இக்குற்றமும் மனித குலத்திற்கெதிரான நாடு கடத்தல் இன அழிப்பு குற்ற வகையின் கீழ் வகைப்படுத்த முடியும்.

(ஆ) 1990.06.21 அன்று ஒன்றும் அறியாத வவுனியா, பாவற்குளம், யூனிட், இரண்டில் உள்ள அப்பாவிகளான ஆண், பெண், குழந்தைகள் உட்பட 9 பேர் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர்.

(இ) 1. 19.07.1990 அன்று அம்பிளாந்துறையில் வைத்து ஹஜ் கடமைக்கு சென்று திரும்பிய 210 பேர் ஆண்கள், பெண்கள் உட்பட வாகனங்களுடன் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

2. 11.08.1990 அன்று ஏறாவூரில் தூக்கத்தில் இருந்த அப்பாவி முஸ்லிம்கள் (பெண்கள், ஆண்கள், குழந்தைகள், கருவறையில் இருந்த குழந்தை உட்பட) 122 பேர் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்.

3. 03.08.1990 அன்று காத்தான் குடியில் இரண்டு பள்ளிவாசல்களான மீராஜும்மா பள்ளிவாசல், ஹுசைனியா பள்ளிவாசல் ஆகியவற்றில் இறை வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் 103 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

4. 07.07.1990 அன்று பொலநறுவை எல்லைக் கிராமமான புத்தூர் முஸ்லிம் கிராம மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைத் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

5. 15.07.1992 அன்று கிரான்குளத்தில் வைத்து வேனில் சென் ற முஸ்லிம் பிர யாணிகள் மீது (ஆண், பெண் உட்பட) துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டு 20 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

6. 21.07.1992 அன்று கிராமங்களில் வைத்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதத் தினை நிறுத்தி அப்பாவி முஸ்லிம்களை தனியாக இனம் பிரித்து மேற்கொள்ளப்பட்ட படுகொலைத் தாக்குதல். இப்படுகொலையில் 06 பேர் கொல்லப்பட்டனர்.

7. 05.08.1990 இல் அட்டாளைச்சேனையில் 15 முஸ்லிம்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை.

8. 12.08.1990 அன்று சம்மாந்துறையில் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் 04 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

✦ 9. 02.06.1992 அன்று பொத்துவிலில் பிரயாணிகள் பஸ் தாக்குதல். இதில் பிரயாணம் செய்த 1 தமிழர் உட்பட 59 முஸ்லிம் பிரயாணிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

10. 08.09.1991 அன்று காத்தான்குடி பிரதான வீதியில் வைத்து வேன் குண்டு வெடித்ததில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

11. 30.01.1992 அன்று காத்தான்குடி, கல்முனை ஆகிய நகரங்களில் சைக்கிள் குண்டு வெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

✦ 12. அன்று பொலநறுவை பள்ளிய கெல்ல, அழிஞ்சிப் பொத்தானை படுகொலையில் 16 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

13. 01.09.1992 அன்று சாய்ந்தமருது சந்தையில் மீன் தொட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

14. 15.10.1992 அன்று பொலநறுவை எல்லைக் கிராமங்களான பங்கிரான, பள்ளித்திடல், அக்பர் புர, அகமட்புர தாக்கியழிக்கப்பட்டதில் பெண்கள் உட்பட 200 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

15. 26.12.1992 அன்று அரச அதிபர் வை. அகமட், உதவி அரச அதிபர் உதுமான் ஆகியோர் மீது புனானையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 05 பேர் கொல்லப்பட்டனர்.

16. 27.06.2002 அன்று வாழைச்சேனை முஸ்லிம்கள் மீதான தாக்குதல். இத்தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

17. 28.03.2003 அன்று மூதூர் முஸ்லிம்கள் மீதான தாக்குதலில் 2 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

இப்படுகொலைகள் அனைத்தும் முஸ்லிம் தேசத்தின் மனித குலத்திற்கு எதிராக புலிகள் - அரசு கட்டமைப்பான தன் பின்னர் புரிந்த யுத்தக் குற்றங்களாகும்.

புலிகள் 1990 க்கு முன்னர் கெரில்லா இயக்கமாக இருந்த காலங்களில் புரிந்த முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களும் படுகொலைகளும் மிக மிக அதிகமாகும். இவற்றையும் யுத்தக் குற்றங்களுக்குள் உள்ளடக்க வேண்டும்.

மேற்கூறிய யுத்தக் குற்றங்கள் தமிழீழ அரைகுறை அரசின் தலைவர் வே. பிரபாகரன் மீதும், அவரது இராணுவ அதிகாரிகள் மீதும் சுமத்தப்பட்டு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்ப வேண்டும். இதற்காக, திறமையுள்ள, முஸ்லிம் இனப் பற்றுள்ள பயமற்ற வழக்கறிஞர்கள் முன் வரவேண்டும். சர்வதேச மனிதாபிமான முள்ள வழக்கறிஞர்கள் உதவிக்கரம் நீட்ட காத்திருக்கின்றனர்.

சர்வதேச நீதிமன்றத்தின் 06 நீதிபதிகளுள் ஒருவரான தென்னாபிரிக்க நீதிபதியின் கூற்று இங்கு நினைவு கூறத்தக்கது. வறிய மூன்றாம் உலக நாடுகளில் உள்ள ஒரு தனி மனிதனுக்கும், சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாக நீதி கிடைக்க வேண்டும். அப்போதுதான் சர்வதேச நீதி மன்றத்தை தோற்றுவித்த தன் நோக்கம் நிறைவேறும். இக்கூற்றின் அடிப்படையில் வே. பிரகாரனின் யுத்தக் குற்றங்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

-இப்னு அலி உதுமான்.

உள்ளூராட்சித் தேர்தலும் முஸ்லிம் சமூகமும்!

1994ம் ஆண்டு கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நோக்குவோமேயானால் அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசம். குறிப்பாக முஸ்லிம் பிரதேசத்தினை எடுத்துக் கொள்வோமேயானால் நிந்தவூர். பொத்துவில் பிரதேசங்களை ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்ற கல்முனை, சம்மாந்துறை. அட்டாளைச்சேனை அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கைப்பற்றிக்கொண்டது. இந்த தேர்தல் அப்போது பெரும் சவால் நிறைந்த தேர்தலாகவும் காணப்பட்டது.

அப்போது அம்பாரை மாவட்டத்தில் யூஎன்.பி யின் மூன்று அமைச்சர்கள் இருந்தார்கள். அதில் இரண்டு பேர் முஸ்லிம்கள். ஒருவர் ஏ.ஆர் மன்சூர், மற்றவர் பி.ஏ மஜீட். இந்த அமைச்சர்களை எதிர்த்து தேர்தலை நடத்தவேண்டிய நிலையில் அப்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம் அஸ்ரப் காணப்பட்டார். என்னதான் அமைச்சர்கள் இருந்தாலும் மக்கள் என் பக்கம்தான் என்பதை அஷ்ரஃப் ஆணித்தரமாக நம்பினார். அதனால் நாடாளுமன்றத்தில் ஒரு சவாலினையும் விடுத்தார். அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேச சபை ஆறில் ஒன்றிலேனும் முஸ்லிம்காங்கிரஸ் தோற்குமானால் நான் எனது நாடாளுமன்ற பதவியை ராஜினாமா செய்வேன் என்றார். பொத்துவில் பிரதேசசபையிலும் நிந்தவூர் பிரதேச சபையிலும் முஸ்லிம் காங்கிரஸ் கோட்டை விட்டது. அஷ்ரஃப் தான் சொன்னபடி எம்.பி பதவியினை ராஜினாமாச் செய்தார். இவ்விடத்தில் இன்னுமொன்றை குறிப்பிட்டால் நன்றாக இருக்கும். அன்று கல்முனை பிரதேச சபையினையும், சம்மாந்துறை பிரதேச சபையினையும் முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றிக் கொண்டது. அன்று அமைச்சராக இருந்த A.R.M மன்சூர் பிறந்து வளர்ந்த ஊர்தான் கல்முனை, அதே போன்று அமைச்சராக இருந்த அப்துல் மஜீதின் சொந்த ஊர்தான் சம்மாந்துறை, இவர்களும் இவர்களால் தங்களின் சொந்த பிரதேச சபையினை வெல்லமுடியாமல் போனது. அஷ்ரஃப் ஒரு சொல் வீரர், நாவன்மை மிக்கவர், என்பதை நாட்டுமக்கள் அனைவரும் அறிந்தது ஒரு புறமிருக்க சொன்னதை செய்யும் தலைவனின் பாசறையில் ஆதரவாளர்கள் வளர்ந்தனர். அதற்கு இப்போது நடைபெற்றவிருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களத்தில் அஷ்ரஃப்புக்கு அடுத்ததாக வந்துள்ள தலைவர் எவ்வாறு நடந்துள்ளார் என்பதை சற்று நோக்குவோமேயானால், தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டு வேட்பாளர்கள் சூடான பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். வடக்கு கிழக்கு தேர்தலை ஒத்திப்போடுவது என அரசு தனக்குள்ளே முடிவெடுத்திருந்த போதிலும் அரசின்பங்காளிக்கட்சியான முஸ்லிம் காங்கிரஸினால் தேர்தல் ஒத்திப் போடப்பட்டுள்ளது என தேர்தல் ஆணையாளரால் அறிவித்தல் வெளியிடப்படும் வரை அதனை அறியமுடியவில்லை. அப்படி அறிந்திருந்தால் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பிரச்சாரம் செய்து நேரத்தினையும் விரயமாக்கியிருக்க வேண்டி ஏற்பட்டிருக்காது. அம்பாறை மாவட்டத்தில் மட்டுமேனும் தேர்தலை நடத்தவேண்டும் என ஹக்கீமும், தயாரட்னவும் கேட்டனர். ஹக்கீமின் கூற்று செல்லாக்காசானது. தனிநபரான தயாரத்னாவின் கூற்று எடுபட்டது. அம்பாறை மாவட்டம் இரண்டாக உடைபட்டு சிங்களப் பிரதேசத்தில் மட்டும் தேர்தல் நடைபெற்று. முஸ்லிம் பிரதேசத்தில் தோதல் மீண்டும் பிற்போடப்பட்டது. இதற்கிடையில் குறித்த தினத்தில் தேர்தல் நடைபெறவேண்டும். இல்லை என்றால் அரசு தங்கள் ஆட்சிக்காலத்துக்கு நாட்களை எண்ண வேண்டும். எங்கள் நாடாளுமன்ற பலத்தை காட்டுவோம் "என ஹக்கீம் ஒலுவிலில் வைத்து சூழ் உரைத்தார். சொன்னதை செய்யும் பாசறையில் வளர்ந்த கட்சி ஆதரவாளர்கள் தலைவனின் இந்த வீர வசனத்தினை நம்பினார்கள். முடிவு இலவு காத்தகிளியின் கதையானது. தேர்தல் மீண்டும் பிற்போடப்பட்டது. வீர வசனம் பேசி அரசுக்கு சவால் விடுத்த ஹக்கீமுக்கு துணை நின்ற ஹரீஸும், அன்வா இஸ்மாயிலும் மௌனமானார்கள். தலைவரின் வார்த்தையில் நம்பிக்கை வைத்திருந்த தொண்டர்கள் ஏமாற்றத்தினை அறுவடை செய்து கொண்டார்கள் மறைந்த தலைவனோடு தங்கள் தன்மானமும் மறைந்து விட்டது என பேசியும் கொண்டார்கள். இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெற்றால், என்ன முகத்தை வைத்துக்கொண்டு அந்த தேர்தலுக்காக மக்கள் முன் தோன்றுவார்? ஒலுவிலில் வைத்து சவால் விட்டீர்கள் (தேர்தல் ஒத்திவைப்புக்கு) என்ன நடவடிக்கை என ஆதரவாளர்கள் கேட்டால் ஹக்கீம் என்ன பதில் சொல்வார்? இது ஒரு புறமிருக்க சமாதானம் இன்றைய தேவை என முழங்குவோர்கள் முஸ்லிம்களிடையே அந்த கோஷத்தினை போட்டால் அது இனியும் எடுபடாது. முஸ்லிம்கள் சமாதானத்தினை பூரணத்துவமாக விரும்புகின்றார்கள், நேசிக்கிறார்கள் ஆசிர்வதிக்கிறார்கள் தான், ஆனால் தற்போது சமாதானம் போகும் பாதையில்தான் அதிருப்தி கொண்டுள்ளார்கள் மற்றவர்கள் பட்டு வேஷ்டி கட்டவேண்டும் என்பதற்காக வேண்டி தங்கள் கட்டியிருக்கும் கோவணமும் பறிக்கப்பட்டு விடும் என அஞ்சும் நிலைதான் தற்போது தென்படுகின்றது. முஸ்லிம்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தனித்தரப்பாக போகவேண்டுமாயின் அவர்களது பிரச்சனைகள் எடுத்தாளப்பட வேண்டும் என்பதில் பலரும் இன்னும் தெளிவாக இருந்த போதிலும், அந்தக்கோரிக்கை எடுபட்டதாக இல்லை முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு அந்தஸ்துக் கிடைக்கவில்லை என்றால் ஒட்டுமொத்தமாக ஹக்கீம் பேச்சுவார்த்தையை பகிஷ்கரிக்க வேண்டும், பீரிசின் பையில் தூங்கும் ஆசாமியாக செயற்படாமல் ஒரு சமுதாயத்தின் விடுதலைப் போராட்ட தலைவனுக்குரிய இலட்சினையோடு இருக்கவேண்டும். ரணில் அரசிலிருந்து அமைச்சர்பதவியினை தூக்கி எறிந்து விட்டு எதிர் அணியில் அமரவேண்டும் என்ற குரல்கள் பலமாக ஒலித்தன. அப்போது ஹக்கீம் இரண்டாம், கட்டத்தில் தனித்தரப்புத் தரப்படும் என்றார். ஆனால் இப்போது ஏழாம் கட்டத்தினையும் பேச்சுவார்த்தை எட்டி விட்டது. அவர் இன்னும் பீரிசின் பையில் தூங்கும் ஆசாமியாகவேயுள்ளார். இந்தவிடயமும் எதிர்கொள்ளவிருக்கும் தேர்தலில் பெரும்சவால் நிறைந்த விடயமாகவே அமையப் போகின்றது என்பதில் ஐயமில்லை. அடுத்தது பேரம் பேசி பெற்ற அமைச்சு ஊடாக தங்கள் தங்கள் பிரதேசங்களுக்கு என்ன என்ன செய்தார்கள் ஹக்கீம் தங்கள் ஆதரவாளருக்கு என்ன செய்தார் என்பதும் பெரும் சிக்கல் நிறைந்த விடயமாகவே அமையப் போகின்றது. தற்போது ஹக்கீம் வைத்திருப்பதைவிட குறைவான அமைச்சர் பொறுப்புக்களையே அஷ்ரஃப் தன்வசம் வைத்திருந்தார். ஆனால் பெரும் பெரும் சேவைகளை மக்கள் முன் செய்துகாட்டினார் அதனைக்கண்டு பழகிய மக்கள் இந்தத்தலைவனும் அவ்வாறுதான் செயற்படுவார். சேவை செய்வார் என எதிர்பார்த்தனர். ஆனால் இதுவரை எதுவுமே நடைபெறவில்லை ஆக உரிமை விடயத்தில் கோட்டை விட்டு விட்டு சலுகையிலும் கோட்டை விட்டு விட்டு என்ன முகத்தோடு மக்கள் முன் தோன்றுவார்?

UNP தொடராக ஆட்சியில் இருந்த கட்சியுமல்ல எதிர்க்கட்சி வரிசையில் இருந்து விட்டுத்தான் ஆட்சிக்கு வந்துள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளாக UNP எதிரணியிலிருக்கும் போது PA ஆட்சி செய்தது. இந்த ஆட்சியின் பங்காளியாகவும் முஸ்லிம் காங்கிரஸ் காணப்பட்டது இந்த ஏழு ஆண்டுகளுக்கும் UNP ஆதரவாளர்கள் பட்ட இன்னல்களுக்கு அளவேயில்லை. UNP ஆதரவாளன் எனற ஒரே காரணத்தினால் எத்தனையோ பேர் தங்களுக்கு கிடைக்க வேண்டிய பதவியுயர்வுகளிலிருந்து புறக்கணிக்கப்பட்டார்கள்; இடமாற்றங்களுக்குள்ளானார்கள்; நிவாரணமானிய கொடுப்பனவுகளிலிருந்து வெட்டப்பட்டார்கள். இவைகளை விட மேலானா விடயம் UNP சார்பு இளைஞர்களுக்கு ஏற்பட்ட இன்னல் PA அரசு கட்சி ரீதியாகவே பெருவாரியான தெழில் வாய்ப்புக்களை வழங்கியது. அப்போது UNP க்கு ஆதரவு கொடுத்த இளைஞர்கள் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டார்கள். இவ்வாறாக UNP ஆதரவாளர்கள் பட்ட இன்னல்களை அடுக்கிக்கொண்டே போகலாம் அப்போது அவர்களுக்கிருந்த ஏரே ஒரு ஆறுதல் எங்கள் கட்சி ஆட்சிக்கு வரும் அப்போது நாங்களும் அனுபவிப்போம் என்பதுதான். தங்கள் கட்சியை ஆட்சியில் அமர்த்த கடும் பாடுபட்டார்கள் கட்சியினை ஆட்சி ஆசனத்திற்கும் கொண்டும் வந்தார்கள். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பு மட்டும் பகல் கனவானது. சமாதானத்தினை மட்டும் சொல்லிக்கொண்டு ஆட்சியினை தக்கவைத்துக்கொள்ளலாம் என பிரதமரும் ஏனைய மந்திரிமார்களும் ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் இந்த எதிர்பார்ப்பு ஒரு தேர்தல் வரும்போது எதிரணியினால் உடைக்கப்படும் என்பதை விட நாளுக்கு நாள் விரக்தியின் எல்லைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் பல ஆதரவாளர்களால்தான் தோற்கடிக்கப்படும் என்றால் அது மிகையாகாது. அம்பாறை மாவட்டத்தினை எடுத்து நேக்குவோமேயானால் இதனை நன்கு அறியக்கூடியதாக உள்ளது. தனது ஆதரவாளர்களோடு மையோன் முஸ்தபா எம்.பி உரையாடும் போது அவரை நோக்கி பல வீதமான கேள்விகள் வீசப்படுகின்றன. சந்திரிக்கா அரசு யுத்தம் செய்தும் தொழில் வாய்ப்புக் கொடுத்தது. பயளை போன்றவற்றிற்கு மானியமும் கொடுத்தது. ஆனால் இப்போது யுத்தமுமில்லை தொழில் வாய்ப்பும் இல்லை. மானியமும் இல்லை. ஏன்? இவ்வாறாக பல கேள்விகள். அது மட்டுமன்றி தாங்கள் ஆளும் கட்சியினரா இல்லை எதிர்க்கட்சியினரா? எதிர்க்கட்சியில் இருக்கும் போது என்ன என்ன புறக்கணிப்புக்கள் நடந்ததோ அதைவிட பன்மடங்கு புறக்கணிப்பே நடைபெறுகின்றது. ஆதரவாளர்கள் பலரும் பலவிதமான அதிருப்தி அலையினை வெளிக்காட்ட அவர்களின் இந்த விரக்தி நிலை சிறிக்கொத்தாவுக்கும் பிரதமருக்கும் தெரியவர. அம்பாறை மாவட்ட ஆதரவாளர்கள் சிறிக்கொத்தாவுக்கு அழைக்கப்பட்டனர். அங்கும் அவர்களுடைய குறைகள் கேட்டறியப்பட்டதோடு உருப்படியாக ஏதும் செய்யப்பட்டதாக இல்லை. அண்மையில் அமைச்சர் குழாம் ஒன்று அம்பாறை மாவட்டம் வந்து சென்றது. இங்கு வந்த அமைச்சர் குழு ஆட்சியில் பங்கேற்றுள்ள கட்சிக்கு ஏசி அவர்களை சூடாக்கினார்கள். தவிர தங்கள் அதரவாளர்களுக்கு உருப்படியாக எதையும் செய்ததாக தெரியவில்லை. தேசியப்பட்டியல் ஒன்றைக் கொடுத்து ரணில் மையோனையும் எம்மையும் மடயனாக்கி விட்டார் என்ற கருத்து அம்பாறை மாவட்டத்தில் நாளுக்கு நாள் வலுப்பெற்றே செல்கின்றது. இந்நிலையில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் வந்தால் அதை இவர்கள் எப்படி எதிர் கொள்வார்கள்? என்பதுதான் பெரும் கேள்வியாகவுள்ளது. ஆக மக்களை மடயனாக்கும் தலைவர்கள் கால ஓட்டத்தில் கரைந்து மறைந்து விடுவார்கள் என்பதுமட்டும் மறையாத உண்மையாயிருக்கிறது.

- எஸ்எல் றினோஸ்
அட்டாளைச்சேனை -10

எங்கே செல்கின்றன நமது பாதைகள்?

வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த வாழ்க்கை!

தொடர்கட்டுரை அடுத்த இதழிலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக் வரலாறு

வஞ்சகத்தின் வெற்றி வீரத்தின் தோல்வி!

பக்தாத் நகர் வீதிகளை ஆக்கிரமித்து நிற்கும் அமெரிக்க டாங்கிகளையும் கவச வண்டிகளையும் பார்த்து பெருமூச்செறிந்த ஒரு முதியவர் சொன்னார்: "வரலாறு திரும்புகிறது: இதே வீதிகளின் 1917 களில் பிரிட்டிஷ் இராணுவம் இருந்தது. விரட்டினோம். இன்று அமெரிக்க இராணுவம். போராடுவோம்!" எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதற்காக ஏகாதிபத்தியங்கள் நடத்திய ஆக்கிரமிப்பு, அதனை பங்கு போட்டுக் கொள்வதற்காக அவர்களுக்குள் நடந்த நாய்ச்சண்டை, ஏகாதிபத்தியங்களை விரட்டு வதற்காக அந்நாட்டு மக்கள் நடத்திய வீரஞ் செறிந்த போராட்டங்கள், அவற்றைக் காட்டிக் கொடுத்து துரோகம் இழைத்த தலைவர்கள், போராட்டங்களை திசை திருப்புவ தற்கு ஏகாதிபத்தியங்கள் கையாண்ட பிரித் தாளும் சூழ்ச்சி, அதில் அவர்கள் பெற்ற வெற்றி - இவை அனைத்தும் இணைந்த துயரக்கதைதான். ஈராக்கின் ஒரு நூற்றாண்டு வரலாறு.

ஈராக் உள்ளிட்ட இன்றைய மத்திய கிழக்கு நாடுகளில் பெரும்பாலானவை பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களால் தங்களு டைய போர் தந்திர நலனுக்கு ஏற்ப 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் உருவாக்கப்பட்டவை. இன்று ஈராக் என்றழைக்கப்படும் நிலப்பகுதி 16 ஆம் நூற்றாண்டு முதல் 1918 வரை துருக்கியின் ஒட்டோ மான் பேரரசின் (உஸ்மானிய சாம்ராஜ்யம்) கீழ் இருந்தது. மோசூ பக்தாத், பஸரா என்ற மூன்று மாகாணங்களின் முறையே குர்திஸ், சுன்னி, ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். ஒட்டோமான் பேரரசின் வீழ்ச்சியையும், தோல்வியையும் தொடர்ந்து பிரிட்டனும், பிரெஞ்சும், மத்திய கிழக்கை ஆக்கிரமிக்கத் தொடங்கின.

1914 முதல் 1918 வரையிலான முதல் உலகப் போர், இராணுவத் தேவைகளுக்கு எண்ணெயின் அவசியத்தை ஏகாதிபத்தியங்களுக்கு உணர்த்தியது. எந்தெந்தப் பகுதியில் எண்ணெய் வளமுள்ளது என்ற ஆய்வுகள் முற்றுப்பெறாத நிலையில் வளைகுடாவில் சாத்தியமான அளவு நிலப்பகுதிகளை தமது பிடியில் கொண்டு வருவதற்கு போட்டியிட்டன ஏகாதிபத்தியங்கள்.

1917 - பிரிட்டனின் பிடியில் பக்தாத்!

1917 ஈராக்கை பிரிட்டன் கைப்பற்றியது. அன்று பக்தாதைக் கைப்பற்றிய பிரிட்டிஷ் படையின் சிப்பாய்கள் அனைவரும் இந்தியர்கள் என்பதும், பிரிட்டிஷ் இராணுவத்திற்கு ஆள்சேர்த்து விடும் "புனித பணியில்" அன்று காந்தி ஈடுபட்டிருந்தார் என்பதும் இங்கே நினைவு கூறத் தக்கது. முதல் உலகப் போரின் முடிவில் ஈராக்கும், பலஸ்தீனமும், பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழும், சிரியாவும் லெபனாவும் பிரெஞ் ஆதிக்கத்தின் கீழும் வந்தன. உலக போர் முடிந்தது. ஈராக்கிற்குச் சுதந்திரம் தருவதாக கூறி ஏமாற்றிய பிரிட்டனுக்கு எதிராக ஈராக் முழுவதும் கொந்தளித்தது. ஆயுதப் போராட்டம் பரவியது.

இந்தப் போராட்டத்தின் உக்கிரத்தையும் அதை பிரிட்டன் எத்தகைய ஒரு கொடூரமான முறைகளில் ஒடுக்கியது என்பதனையும் அன்று அரசு செயலாளராக இருந்த (பின் நாளில் பிரதமர்) சோர்ச்சிலின் ஒரு கூற்று நிரூபிக்கிறது. "நாம் விமானத்திலிருந்து விஷ வாயுக் குண்டுகளை வீசலாம். இந்த யுக்தி யைப் பயன்படுத்தும் பட்சத்தில் 4000 பிரிட்டிஷ் துருப்புகள் மற்றும் 10000 இந்தியத் துருப்புகளை வைத்தே மொசப்பட்டோமியாவைச் (அதாவது ஈராக்கை) சமாளித்து விடலாம்."

போராட்டத் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

சோச்சில் கூறியது போன்று ஒடுக்கு முறைகளைக் கொண்டும் ஈராக் மக்களின் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. எனவே, தனது கைப்பாவையான அராபியர் ஒருவரை மன்னராக நியமிப்பதன் மூலம் மக்களை திசை திருப்ப முயன்றது பிரிட்டிஷ் அரசு. மக்கா நகரைச் சோந்த ஃபைசல் எனனும் பணக்கார கைக்கூலியை அழைத்து வந்து ஈராக்கின் மன்னராக்கியது. மக்களோ இந்த பொம்மை ஆட்சியை நிராகரித்து முழு சுதந்திரம் கூறி போராடினர்.

கைக்கூலி மன்னனுக்கு 40,000 பவுண் (இன்றைய மதிப்பில் ரூபா 30 இலட்சம்) லஞ்சமாகக் கொடுத்து ஈராக்கின் எண்ணெய் வளம் முழுவதையும் எழுதி வாங்கியது பிரிட்டன். 2000 வரை ஈராக்கின் எண்ணெய் வயல்களிலிருந்து பிரிட்டன் எடுக்கும் எண்ணெக்கு டொன் ஒன்றுக்கு 4 ஷில்லிங்தான். (இன்றைய மதிப்பில் ரூபா 15) விலை என்பது அந்த ஒப்பந்தம். வெறும் மணலை விட மலிவான விலைக்கு எண்ணெயை அள்ளிச் செல்லும் இந்த அநீதியான ஒப்பந்தத்தைக் கண்டு ஈராக் மக்கள் கொதித்தார்கள். அமெரிக்க முதலாளிகளோ வேறு காரணத்திற்காக வயிறெரிந்தனர்.

உலகத்தை தமக்குள் பங்கு போட்டிருந்த இங்கிலாந்து, பிரெஞ், ஹொலன்ட், ஜோமனி போன்ற ஏகாதிபத்தியங்களுக்கு போட்டியாக அன்று வளர்ந்து கொண்டிருந்த அமெரிக்கா ஈராக்கின் எண்ணெயிலும் பிரிட்டனிலும் பங்கு கேட்டு பிரட்டியது. உண்மையில், அமெரிக்காவுக்கோ எண்ணெய் தேவைப்படவில்லை. உள் நாட்டு உற்பத்தியை அது ஏற்றுமதி செய்து கொண்டிருந் தது. ஈராக்கில் எண்ணெய் உற்பத்தியை முடக்குவதன் மூலம் உலக சந்தையில் எண்ணெய் விலை இறங்காமல் தடுக்கவே இந்த தலையீடு.

எக்ஸாம் - மொபில் ஆகிய அமெரிக்க எண்ணெய் நிறுவனங்கள் ஈராக்கில் எண்ணெயில் 23.75 சதவீத பங்கைப் பெற்றனர். இன்று ஈராக் எண்ணெயை உறுஞ்சவிருக்கும் நிறுவனங்களில் எக்ஸல், மொபில் மிக முக்கியமானது. ஈராக்கின் எண்ணெயை உறுஞ்சுவதற்கு பிரிட்டன், பிரெஞ், ஹொலன்ட், அமெரிக்கா ஆகியோர் கூட்டுச் சோந்து தொடங்கிய நிறுவனத்திற்கு "ஈராக் பெற்றோலியம் கம்பனி" என்று பெயரிட்டனர். இச்செப்டு வித்தையைக் கண்டு ஏமாறும் நிலையில் ஈராக் மக்கள் இல்லை. தேச விடுதலைப் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. நிலைமையைச் சமாளிக்க 1932 இல் ஈராக்கிற்கு சுதந்திர வழங்குவதாக அறிவித்தது பிரிட்டிஷ் அரசு. ஆனால் "பொது பாதுகாப்பு ஒப்நதம்" என்ற பெயரில் தனது படைப் பிரிவுகளை ஈராக்கின் எல்லைப் பகுதிகளில் நிறுத்திக் கொண்டது.

போலிச் சுதந்திரம்!

ஏற்கனவே, பிரிட்டனால் நியமிக்கப்பட்ட ஃபைசல் மன்னனாக நீடித்தார். நூரி அஸ்ஸயீத் என்ற எடுபிடி பிரிட்டனால் பிரதமராக்கப்பட்டான். கேலிக்குரிய இந்த "சுதந்திரமும்" அதிக காலம் நீடிக்கவில்லை. 1941 இல் ஈராக் படைவீரர்களும் தேசிய அரசியல் சக்திகளும் இணைந்து மன்னனை பதவி இறக்கினர். உடனே பிரிட்டிஷ் இராணுவம் நேரடியாகத் தலையிட்டு போராட்டத்தை ஒடுக்கி மன்னனையும் பிரதமரையும் மீண்டும் பதவியில் அமர்த்தியது. 1925 முதல் 1958 வரையிலான 34 ஆண்டுகளில் நூரி அஸ்-ஸயீத் 14 முறை தூக்கி எறியப்பட்டு, மீண்டும் மீண்டும் பிரிட்டனில் பதவியில் அமர்தப்பட்டிருக்கிறான் என்றால் ஈராக் மக்களுடைய போராட்டத்தின் தீவிரத்தை இதிலிருந்தே நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னரும் பிரிட்டிஷ் இராணுவம் ஈராக்கை விட்டு வெளியேறுவதாக இல்லை. உலகமெங்கும் தேச விடுதலைப் போராட்டங்கள் தீவிரமடைந்ததைப் போலவே, ஈராக்கிலும் போராட்டம் தீவிரமடைந்தது.

மகுடம் தரித்த மண்டைகளுக்கு மரண தண்டனை!

மத்திய கிழக்கின் எல்லா நாடுகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு கொழுந்து விட்டெரிந்த காலம் அது. 1951 இல் அண்டை நாடான ஈரானில் மன்னா ஆட்சி தூக்கி எறியப்பட்டது. மொசாதே எனப்பவரின் தலைமையில் அமைந்த தேசிய அரசு பிரிட்டிஷ் பெற்றோ லியம் நிறுவனத்தை நாட்டுடமையாக்கியது. 1953 இல் மொசாதேகை கொலை செய்து மீண்டும் மன்னா ஆட்சியை நிறுவியது சீ.ஐ.ஏ.

எகிப்தில் நாசர் சுயஸ் கால்வாயை நாட்டுடமையாக்கினார். சோவியத் ஆதரவுடன் அமெரிக்காவையும் பிரிட்டனையும் எதிர்த்து நின்றார். 1957 இல் சவூதியும் ஈராக்கிலும் வெடித்த எண்ணெய் தொழிளாளர்கள் போராட்டத்தை ஒடுக்க அமெரிக்கா ஆயுதங்களை இறக்கியது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1957 இல் ஜோர்தானிலும், 1958 இல் லெபனானிலும் மக்கள் எழுச்சியை ஒடுக்க பிரிட்டனும் அமெரிக்காவும் நேடியாக களத் தில் இறங்கின. கமியூனிஸ்ட் இயக்கமும் தேசிய விடுதலை இயக்கமும் ஏகாதிபத்தியங்களின் பிடியைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்த இந்தச் சூழலில் 1958 இல் ஈராக்கின் மன்னா ஆட்சி தூக்கி எறியப்பட்டது.

அப்துல் கரீம் ஹாஸிம் என்ற இளம் இராணுவ அதிகாரியின் தலைமையில் இராணுவத்தின் ஒரு பிரிவும், தேசிய விடுதலைச் சக்திகளும் ஈராக் குடியரசை பிரகடனம் செய்தனா. கைக்கூலி மன்னன் ஃபைசல், பிரதமா நூரி அஸ்-ஸையித் இருவருக்கும் உடனே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அடுத்த கனமே அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் ஈராக்கை முற்றுகை இட்டன. தங்களது எண்ணெய் நிறுவனங்கள் மீது கைவைத்தால் ஈராக்கைத் தாக்குவோம் என எச்சரித்தன. உடனே அத்தகைய ஒரு தாக்குதல்களை எதிர்கொள்ள இயலாத ராஸிம் "உங்கள் எண்ணெய் வயல்களை தலையிட மாட்டோம்" என்று அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் வாக்குறுதிக் கொடுத்தார். ஈராக் மக்களோ எண்ணெய் வயல்களையோ உடனே நாட்டுடமையாக்க வேண்டும் என அரசை நிர்பந்தித்தனர்.

எண்ணெய் வயல்கள் நாட்டுடமை

ஒரு தொன் (1000 கிலோ) எண்ணெய் 15 ரூபா என்ற விலையில் 1925 இல் போடப்பட்ட ஒப்பந்தம் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். எண்ணெய் ஏற்றுமதியை மட்டுமே நம்பியிருந்த ஈராக் அரசுக்கு இதுமட்டும்தான் வருவாய். நிலத்தடியில் எண்ணெய் உள்ளதென கண்டறியப்பட்ட இடங்கள் அனைத்துமே ஈராக் பெற்றோலியம் கம்பனிக்கு (அதாவது அமெரிக்கா, பிரிட்டன், பிரெஞ், ஹொலன்ட்) 2000 வரை எழுதித் தரப்பட்டு விட்டன. இவ்வாறு எழுதி வாங்கிய நிலப்பகுதி 0.5 சதவீதம் இடத்தில் மட்டுமே இந்நிறுவனம் எண்ணெய் எடுத்து வந்தது. மீதமுள்ள நிலத்தை தரிசாகப் போட்டிருந்தது. இவ்வாறு எண்ணெய் உற்பத்தியை முடக்கி, பற்றாக்கு றையை ஏற்படுத்துவதன் மூலம் உலகச் சந்தையில் எண்ணெய் விலை குறையாமல் பார்த்துக் கொண்டது இந்நிறுவனம். மிக குறைவான உற்பத்தியில் கிடைத்த மிக அற்பமான ரோயல்டி தொகை அரசின் நிதி நெருக்கடியை அதிகரித்தது. ஏகாதிபத்திய [illegible] மன்னா ஆட்சி ஒழிந்தால் [illegible] ஏனேறும் என்று நம்பிய மக்களின் ஏமாற்றமும் அதிகரித்தது.

"நீங்கள் எண்ணெய் கிணறு தோண்டுவதாக இல்லை என்றால் 60 சதவீத நிலப் பகுதிகளை அரசிடம் ஒப்படைத்து விடுங்கள். நாங்களாவது எண்ணெய்க் கிணறு தோண்டுகிறோம்" என்று அநநிய நிறுவனங்களிடம் கோரினார் காசிம். பதிலடியாக ஏற்கெனவே எடுத்து வந்த எண்ணெயின் அளவையும் குறைத்து அரசை மேலும் நிதி நெருக்கடியில் தள்ளியது ஈராக் பெட்ரோலியம் கம்பனி.

இனியும் சகிக்கவியலாது என்ற நிலையில் 1925 இல் ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக அறிவித்தார் காசிம். சோவியத் அரசுடன் 1959 இல் புதிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டார். ஈராக் பெட்ரோலியம் கம்பனி எண்ணெய் எடுக்கின்ற 0.5 சதவீத நிலம் போக 99.5 சதவீத நிலத்தில் எண்ணெய் நிறுவனம் துவக்கப்படுவதாக 1963 இல் அறிவித்தார்.

சி.ஐ.ஏ. சதி - காசிம் கொலை!

இந்த அறிவிப்பை வெளியிட்ட நான்கே நாட்களில் காசிம் கொலை செய்யப்பட்டார். பாத் கட்சி மற்றும் இராணுவத்தின் ஒரு பிரிவு அதிகாரிகளை விலைக்கு வாங்கி சி.ஐ.ஏ இந்தக் கொலையையும் ஆட்சிக் கவிழ்ப்பையும் நடத்தி முடித்தது. பாத் கட்சியினருக்கும் சி.ஐ.ஏவுக்கு மிடையே குவைத்தில் பல சந்திப்புகள் நடந் தனவென்றும், ஆட்சிக் கழிவிப்பு நடந்தவு டனே ஈராக்கில் கொலை செய்யப்ப வேண்டிய கம்யூனிஸ்டுகளின் பட்டியலை இந்தக் கும்பலுக்கு சி.ஐ.ஏ. கொடுத்தது என்றும் ஜோர்டான் மன்னர் ஹுசேன் ஒரு பேட்டியில் கூறுகிறார்.

ஆட்சிக் கவிழ்புக்கு அமெரிக்க அரசு உடனே தனது ஆதரவைத் தெரிவித்தது. மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்த கம்யூனிஸ்டு கட்சிகளிலேயே மிகவும் பெரியதான ஈராக் கம்யூனிஸ்டுக் கட்சியை ஒழித்துக் கட்டும் பணி உடனே தொடங்கியது. சி.ஐ.ஏ. கொடுத்த பட்டியலின்படி ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளைப் படுகொலை செய்தது பாத் கட்சி.

ஆட்சிக்கு வந்த இந்தக் கும்பல் அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றிருந்த போதும் எண்ணெய் வயல்கள் எதையும் அமெரிக்க நிறுவனங்களுக்கு வழங்க அவர்களால் முடியவில்லை. மக்களின் மிகக் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பது ஒரு காரணம். கூடுதலாக 1967 இல் அரபு நாடுகள் மீது இஸ்ரேல் தொடுத்த தாக்குதல் காரணமாக வளைகுடா முழுவதும் அமெரிக்க எதிர்புணாவு கொழுந்துவிட்டெரிந்தது. இந்த அரசியல் சூழ்நிலை எந்த அமெரிக்க ஆதரவு நடவடிக்கையையும் சாத்திய மற்றதாக்கியது.

1968 இல் இந்தக் கட்சிக்குள்ளேயே நடந்த ஆட்சிக் கவிழ்ப்பில் பாத் கட்சியின் அகமத் ஹஸ்ஸன் ஆட்சியைக் கைப்பற்றி அதிபரானார். 300 மில்லியன் டொலர் இழப்பீட்டுத் தொகை கொடுத்து ஈராக்

பெட்ரோலியம் கம்பெனியை நாட்டுடைமையாக்கியது. பாத் கட்சியின் ஆட்சி பிரான்சு மற்றும் ரசியாவின் கூட்டுடன் பல புதிய எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. 1972 இல் ஈராக் சோவியத் 15 ஆண்டு இராணுவ ஒப்பந்தம் கையெழுத்திடப்பட் டது.

உலகெங்கும் அமெரிக்க எதிர்ப்பு அலை!

1960 களின் பிற்பகுதி மற்றும் 70களின் துவக்கக் காலம் என்பது உலகெங்கும் அமெரிக்க எதிர்ப்பு அலை ஓங்கி வீசிய காலம். வியத்நாம் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐரோப்பிய அமெரிக்க மக்களின் போராட்டம், சிலியில் செம்புச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்கிய அலெண்டேயைக் கொலை செய்த சி.ஐ.ஏ. வின் சதி அம்பலமா னது. லிபியாவில் மன்னராட்சியைத் தூக்கி யெறிந்து சோவியத் ஆதரவு கடாபி ஆட்சியைக் கைப்பற்றியது.... என அடுக்கடுக்காக அமெரிக்காவும் மேற்குலக ஏகாதிபத்தியங்களும் தனிமைப்பட்டுக் கொண்டிருந்தன.

அராபிய நாடுகளுக்கெதிரான போரில் இஸ்ரேல் அடைந்த வெற்றியும் அதற்குக் காரணமாக இருந்த அமெரிக்காவின் ஆதரவும் வளைகுடாவில் அமெரிக்க எதிர்ப்பு அலையை ஓங்கி வீசச் செய்தது. பாலஸ்தீன மக்களின் ஆயுதப் போராட்டம் துவங்கியது. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் "ஒபெக்" நாடுகள் விலையை உயர்த்தியது. மேற்கு நாடுகளுக்கு எண்ணெய் [illegible] இல்லை [illegible] தடை [illegible]

சதாம் அதிபராகிறார் - போர் தொடருகிறது!

பாத் கட்சியின் ஆட்சியில் துணை அதிபராக இருந்த சதாம் 1979 இல் அதிபராகப் பதவியேற்றார். அதே ஆண்டில் அண்டை நாடான ஈரானில் அமெரிக்காவின் விசுவாச ஏவல் நாயாக இருந்து வந்த மன்னன் ஷாவின் ஆட்சி தூக்கியெறியப்பட்டது. ஈரானில் ஷியா மதத் தலைவரான கொமெய்னியின் தலைமையில் இஸ்லாமிய அரசு பிரகடனம் செய்யப்பட்டது. கொமெய்னி அரசு அமெரிக்காவை எதிர்த்ததுடன் வளைகுடா நாடுகள் அனைத்திலும் இஸ்லாமிய புரட்சிக்கு அறைகூவல் விடுத்தது. குறிப்பாக இஸ்லாமிய விரோத ஈராக் அரசைத் தூக்கியெறியுமாறு ஈராக் கின் பெரும்பான்மையினரான ஷியா முஸ்லிம்களைத் தூண்டியது; ஈராக் அரசை ஆத்திரமூட்சியது. வளைகுடாவில் நிலவிய இந்தச் சூழலை அமெரிக்க தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

"ஷாத் அல் அரப்" என்ற நீராவழி தொடாபான ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே பிரிட்டிஷ் ஏகா திபத்தியவாதிகள் உருவாக்கி வைத்துவிட்டுப் போன எல்லைப் பிரச்சினையை முன்வைத்து ஈரான் மீது படையெடுக்கும்படி சதாமைத் தூண்டியது அமெரிக்கா. 1975 இல் இதே பிரச்சினையில் ஷாவை ஆதரித்தது அமெரிக்கா, 1980 இல் சதாமை ஆதரித்தது சவூதி, குவைத் ஷேக்குகளோ கொமெய்னி பிராண்டு புரட்சி பரவினால் தங்கள் சொத்துக்கு நேரடிக்கூடிய அபாயத்தைப் புரிந்திருந்தால் சதாமின் போர்ச் செலவுக்குப் பணம் கொடுக்கத் தயாராக இருந்தனர். உடனே ஈரான் மீது படையெடுத்தார் சதாம். 1980 முதல் 1988 வரை நீடித்த இந்தப் போர் அமெரிக்காவின் பல நயவஞ்சகமான நோக்கங்களை உள்ளடக்கிய ஒரு பல நோக்குத் திட்டம். அதுவரைக்கும் ஈராக்குடன் தூதரக உறவுகளைக் கூடத் துண்டித்திருந்த அமெரிக்க அரசு 1980 இல் சதாமுடன் இரகசியமாக உறவு ஏற்படுத்திக் கொண்டது.

சதாமுக்கு அமெரிக்கா வழங்கிய போழிவு ஆயுதங்கள்!

எண்ணெய் வயல்களை நாட்டுடைமை ஆக்கியது மற்றும் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை ஆதரித்ததன் காரணமாக "பயங்கரவாதத்தைத் தூண்டும் நாடு" என்று ஈராக் மீது குத்தியிருந்த முத்திரையை நீக்கி தூதரக உறவைப் புதுப்பித்தது அமெரிக்க அரசு. ஈரான் மீது வீசுவதற்கு ரசாயன ஆயுதங்கள், பயிர்களை அழிக்கும் மருந்துகள், உயிரியல் போர் ஆயுதங்கள், ஏவுகணைகள் மற்றும் விஷவாயுக் குண்டுகளை சதாமுக்கு விநியோகம் செய்தது. 1986 இல் ஈரானிய கிராம மக்கள் மீது சதாமின் இராணுவம் விஷவாயுக் குண்டுகளை வீசி ஆயிர க்கணக்கான மக்களைக் கொலை செய்ததைக் கண்டித்து உலக நாடுகள் ஐ.நா.வில் தீர்மானம் கொண்டு வந்தபோது, தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை அமெரிக்கா முறியடித்தது. இறுதியாக 1987, 1988 களில் ஈராக்குக்கு ஆதரவாக ஈரானியக் கப்பல்கள் மீது அமெரிக்காவே குண்டு வீசியது.

நாடு இழைத்தது - சர்வாதிகாரம் வலுத்தது!

இந்த எட்டாண்டுப் போர் முடிவுக்கு வந்த போது இரண்டு தரப்பிலும் தலா 5 இலட்சம் போ கொல்லப்பட்டிருந்தனர். ஈராக்குக்கு மட்டுமின்றி ஈரானுக்கும் அமெரிக்கா ஆயுதம் விற்றிருப்பது பின்னாளில் ஈரான்கேட் ஊழல் என அம்பலமானது. போ ரின் காரணமாக ஈராக் 80 பில்லியன் டொ லர் (ரூபா. 4 லட்சம் கோடி) கடன்பட்டது.

ஈரானின் பொருளாதாரமும் சீர்குலைந்தது. ஈராக்கில் சதாமின் பாத் (மறுமலர்ச்சி) கட்சியோ பிறக்கும் போதே முசோலினியின் பாசிசக் கட்சியை முன்மாதிரியாக அறிவித்துக் கொண்ட கட்சி. அது தோதல் மூலம் அட்சி யிலமர்ந்த கட்சியுமில்லை. 1963 இல் ஆயிரக் கணக்கான மக்களை வேட்டையாடியதைப் போலவே 1979 இல் சதாம் அதிபரானவுடன் செய்த முதல் வேலையும் தனக்கு எதிராக கொன்றொழித்ததுதான். எட்டாண்டுப் போர் ஈராக் மக்கள் மீது சதாமின் சர்வாதிகாரம் மேலும் உறுதிப்படுத்துவதற்கே உதவி யது.

அமெரிக்கா வைத்த பொறி!

கைக்கூலிச் சர்வாதிகாரிகளை உருவாக்குவது, அவாகளுக்கெதிராக உள்நாட்டு மக்களின் வெறுப்பு உச்சக்கட்டத்தை அடையும் போது தானே முன்னின்று ஜன நாயகம் - மனித உரிமைக்காகக் குரல் கொடுப்பது, அடுத்த கைக்கூலியை அமரவைப்பது என்ற அமெரிக்காவின் வழக்கமான தந்திரம் ஈராக்கிலும் வெற்றிபெற்றது.

பாத் கட்சிக் கெடுங்கோன்மையின் காரணமாக ஈராக் மக்கள் மீது திணிக்கப்பட்ட பீதி, ஈராக்கின் ஆயுத வலிமை அண்டை நாடுகளிடம் தோற்றுவித்த அச்சம் இவையிரண்டையும் தனது வலிமைக்குச் சான்றாக எண்ணி இறுமாப்பு கொள்ளும் ஒரு முட்டாள் சர்வாதிகாரி எத்தகைய தவறுகளைச் செய்வானோ அதைச் செய்யத் தயாராக இருந்தார் சதாம். போர் தோற்றுவித்த கடனும் பொருளாதார நெருக்கடியும் அமெரிக்கா வைத்திருந்த பொறியை நோக்கி சதாமை நெட்டித் தள்ளின.

80 பில்லியன் கடனில் பாதியை குவைத்தும் சவுதி அரசும் கொடுத்திருந்ததால் கடனைத் தள்ளுபடி செய்யுமாறு அவாகளிடம் கோரினார் சதாம். அவ்வாருகளுக் மறுத்தன. அத்தோடு நில்லாமல் தங்கள் எண்ணெய் உற்பத்தியைத் திடீரென்று அதிகரித்து உலகச் சந்தையில் எண்ணெய் விலையைச் சரிய வைத்தனா. (இதுவும் அமெரிக்காவின் சதித்திட்டம்தான்) இதனால் ஈராக்கின் ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சியடைந்து நெருக்கடி மேலும் முற்றியது. "இந்த விலைக் குறைப்பு என்பது ஈராக் மீது குவைத்தும், சவூதியும் தொடுத்திருக்கும் போா" என்று சதாம் பேசிய பிறகும், குவைத் எல்லையில் இராணுவத்தைக் குவித்த பிறகும் ஆக்கிர மிப்பைத் தடுக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடவில்லை. "தனனுடைய கடந்தகாலச் சேவையைக் கணக்கில் கொண்டு அமெரி க்கா தன்னைக் கண்டு கொள்ளாது" என்ற சதாமின் அசட்டுத்தனமான நம்பிக்கை குவைத் என்ற பொறியில் அவரைச் சிக்க வைத்தது.

மீண்டும் அமெரிக்கா!

வளைகுடாவில் கால்பதிக்க இதை விட ஒரு பொன்னான வாய்ப்பை பொருத்தமான தருணத்தில் அமெரிக்காவுக்கு யாரும் வழங்கியிருக்க முடியாது. 70 களிலோ 80களிலோ இருந்ததைப் போல அமெரிக்காவுக்கு போட்டியாக ரஷ்ய வல்லரசு இல்லை. மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக் காவை எதிர்த்து நிற்கும் வல்லமை இல்லை. வளைகுடாவில் நிரந்தரமான இராணுவத் தளத்தை அமைக்கவும், எண்ணெய் வளத் தைக் கட்டப்படுத்தவும் முடியாமல் அமெரிக்காவைத் தடுத்துக்

> "தன்னுடைய கடந்த காலச் சேவையைக் கணக்கில் கொண்டு அமெரிக்கா தன்னைக் கண்டுகொள்ளாது"
>
> - என்ற சதாமின் அசட்டுத்தனமான நம்பிக்கை குவைத் என்ற பொறியில் அவரைச் சிக்கவைத்தது

கொண்டிருந்த ஒரே சக்தி அராபிய மக்களின் எதிர்ப்பு மட்டும் தான்.

தனது நடவடிக்கை மூலம் அந்த எதிர்ப்பை முனை மழுங்கச் செய்தது. அமெரிக்க இராணுவம் வளைகுடாவில் இறங்குவதற்கான ஒரு முகாந்திரத்தையும் ஏற்ப டுத்திக் கொடுத்தார் சதாம். அதன் பின்னர் அமெரிக்கா ஈராக் மீது தொடுத்த போர் 13 ஆண்டுகளாகத் தொடர்கிறது.

1991 போரில் கொல்லப்பட்ட ஈராக்கியர்கள் 2 இலட்சம் போ. அதன் பிறகு பொருளாதாரத் தடை என்ற பெயரிலும் நினைத்த போதெல்லாம் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களிலும் கொல்லப்பட்ட மக்கள் சுமார் 15 இலட்சம். தற்போதைய போரில் காவுவாங்கப்பட்ட உயிர்கள் எத்தனை என்று இன்னும் எண்ணி முடியவில்லை.

வரலாறு திரும்புகிறது என்று கூறும் அந்தப் பக்தாத் பெரியவரின் பெருமூச்சில் ரத்தத் திவலைகள் தெறிக்கின்றன. விஷவாயுக் குண்டுகளை வீசி விடுதலைப் போராட்டத்தை நசுக்கிய ஏகாதிபத்திய வெறியன் சோச்சலின் வாரிசு. இன்று சதாமின் விஷ வாயுக் குண்டுகளைத் தேடிக் கண்டுபிடித்து ஈராக் மக்களுக்கு விடுதலை வழங்கப் போவதாகக் கூறுகிறது.

இதை நம்புவதற்கு ஒரு நாய் கூட இல்லை. எனினும் அமெரிக்க டாங்கிகளை மறுபடியும் பக்தாத் வீதிகளுக்குக் கொண்டு வந்தது எது என்ற கேள்விக் கான விடையை நாம் ஈராக்கின் வரலாற்றிலிருந்து கண்டுபிடிக்க வேண்டும். சதாம் என்ற ஒரு வாத்தையில் மட்டும் அதற் கான விடை இல்லை.

ஈராக்கின் இதயத்தைப் பிளந்து ரத்தம் குடித்த அமெரிக்க ஏவுகணைகளுக்குத் தளம் அமைத்துக் கொடுத்தவர்கள் குவைத், கட்டார், சவூதி ஷேக்குகள், அராபியர்கள் என்ற உணர்வே இல்லாமல் பன்றிகளைப் போல அவர்கள் நடந்து கொள்ளக் காரணமென்ன? "மத்தியக் கிழக்கில் நம் இலட்சியம் முஸ்லிம்களை ஒழிப்பது. போலி கமியூனிஸ்டுகளையும் ஒழிப்பது. எண்ணெய் மீது நம் கட்டுப்பாட்டை நிறுவுவது" எனச் சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் அறிவித்தான் ஒரு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதி.

தேசிய உணாவுள்ள மக்களை ஒழிப்பதற்கு ஷேக்குகளும், மன்னாகளும் சதாம்களும் முல்லாக்களும் அமெரிக்காவுக்குத் தோள் கொடுத்தாகள். அதற்கொரு கருவியாக இஸ்லாத்தைப் பயன்படுத்திக் கொள் ளவும் துணை நின்றாாகள். எண்ணெக் கிணறுகளில் தம் தனி உடைமையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற வெறிதான் எல்லாப் பாதகங்களுக்கும் அவர்கள் துணை நிற்கக் காரணம். அமெரிக்க ஆதிக் கத்திற்கெதிராக இனி போராடவிருக்கும் அரபு நாடுகளின் மக்கள் "எண்ணெய் வயல் கள் எமிருக்குச் சொந்தம்" என்று முழங்கப் போவதில்லை "எமக்குச் சொந்தம்" என்று தான் முழங்கப் போகிறாாகள். தற்போது கூடாரத்தை ஒட்டகம் ஆக்கிரமித்திருப்பது உண்மை தான்; அராபியன் வெளியே நிற்கி றான். இருப்பினும் அராபியன் வெல்வது உறுதி. ஏனென்றால் அவன் மனிதன். ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தி யமோ ஒரு மிருகம். மிருகங்கள் மனிதனை வெல்லப் போவதில்லை.

நன்றி : புதிய கலாச்சாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்

காட்டுமிராண்டிகளின் செயல்!
மேலே இருப்பதை
நான் சொல்லிக்
கத்தினால்
அமெரிக்கத்
தூதுவர் அலுவலகம்
என் முகவரியை
விசாரிக்கும் !
ஆனால் அன்று
ஃபிரான்ஸ் நாட்டில்
ஒருவன்
கத்தினான் போர்
செய்து கொண்டே!
ஆட்சி செய்து
கொண்டே!
அவன் மாவீரன்
நெப்போலியன்!

"அக்னிச் சிறகுகள்"

- இது ஓர் அருமையான பெயர்.

நாவலுக்கும் பொருந்தும். நாடகத்திற்கும் பொருந்தும். இந்திய ஜனாதிபதி அபுல்கலாம் அதிஷ்டசாலி. அவரது சுய சரிதத்திற்குப் பொருத்தமான பெயராகிப் போனது.

சமீப காலத்தில் அதிகமாக விற்ற ஆங்கில வழி வந்த தமிழ்நூல்.

சின்ன சின்ன வரிகள் சில பக்கங்களிலிருந்து.....

* நியாத் தீர்ப்புநாள் : ஃபாத்திஹா சூராவை நினைப்பூட்டுகிறது.

* என் பிரார்த்தனை: அத்தஹிய்யாத்தில் ஓதும் அல்லாஹும்மஹ்பிர்லியை நினைவூட்டுகிறது.

(பக் - 7)

* என்னை முஸ்லிமாக அடையாளம் காட்டும் தொப்பியைப் போட்டுக் கொண்டுதான் வகுப்புக்குப் போவேன். (பக். 330)

என்னையும் என் மூன்று சகோதர்களையும் பள்ளிவாசலுக்குக் கூட்டிச் சென்ற தந்தையார் அல் குர்ஆனிலிருந்து "அல் பாத்திஹா" சூரா ஓதினார். பின்னர் இரயில் நிலையத்தில் அத்தா (தந்தை) சொன்னது இதுதான்: "உன்னுடைய உடலுக்கு இந்தத்தீவு (ராமேஸ்வரம்) இடமளித்திருக்கலாம். எதிர்காலம் என்ற வீடுதான் உன் ஆன்மாவிற்கு வசிப்பிடம். இறைவன் உனக்கு அருள்புரியட்டும் என் செல்வமே" என்று (பக். 37)

பட்டாம் பூச்சிக்களாவோம்!

ஆண்டுதோறும் கனடாவிலிருந்து மெக்ஸிக்கோவிற்கு ஆயிரக்கணக்கான மைல்கள். "நம்பிக்கை" என்ற ஒன்றை மட்டுமே மூலதாரமாகக் கொண்டு கூட்டம் கூட்டமாக ஒரு பயணம் நிகழ்கிறது.

யார் மனிதர்களே? ஊஹூம்! அவர்களிடம் நம்பிக்கை விட்டுப்போய் - அதுவும் முஸ்லிம்களிடம் - எவ்வளவோ காலமாயிற்றே!

இது, பட்டாம்பூச்சிகள்! வண்ணத்துப் பூச்சிகள்!

கோடி கோடியாகப் பறக்கின்றன. பயம் இல்லை. அவநம்பிக்கை இல்லை. ஆடிப்பாடி உற்சாகமாக இந்தப் பயணம்! பரந்து விரிந்து கிடக்கும் பிரபஞ்சத்தையும் அதைப் படைத்திட்ட இறைவனையும் நம்பிய பயணம்!

எதிர்காலத்தில் ஒரு வேளை, "முஸ்லிம் தேசம்" நோக்கியும் நம்பிக்கையாகப் பயணித்து வரலாம். இன்ஷா அல்லாஹ்.

மாநபி (ஸல்) வழி மருத்துவம்

இறை வணக்கத்திற்குரிய முதல் ஏற்பாடு உடற் சுத்திகரிப்பு. (வுளு)

முதலில் இரு கைகளையும் பிசைந்து மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவும் போது, சீன மருத்துவத்தின்படி கை - கால் மற்றும் உடல் உறுப்புகளின் சக்தி ஓட்டம் சீர்செய்யப்பட்டு அவயங்களின் இறுதிப்பகுதி வரை சக்தி செல்கிறது.

விரல் கோதும் போது, பெருவிரல் பகுதி நுரையீரலுக்கும், ஆள்காட்டி விரல் பெருங்குடலுக்கும், நடுவிரல் இதயத்திற்கும், மோதிரவிரல் மூவெப்ப மண்டலத்துக்கும், சுண்டுவிரல் சிறுகுடலுக்கும் சக்தி தருகிறது.

அத்துடன், மணிக்கட்டின் பகுதியில் இறைவாசல் எனப்படும் எச்.7 என்ற புள்ளி இருப்பதால் இதயம் சம்பந்தமான அனைத்து நோய்களையும் நீக்கி இதய ஓட்டத்தைச் சீர்செய்யும். மணிக்கட்டுப் பகுதியிலுள்ள ஒன்பதாம் புள்ளி நுரையீரல் நோய்கள் அனைத்தையும் நீக்கும்.

புறங்கைப் பகுதியில் (பெருங்குடல் இதய உறை, சிறு குடல், மூவெப்ப மண்டலம் போன்ற பகுதிகளில்) நோய்களைத் தீர்க்கும் அக்குபஞ்சர் புள்ளிகள் இருப்பதால், கைகளை மூன்று முறை நன்கு பிசைந்து தினமும் ஐந்து தடவை செய்வதன் மூலம் அனைத்து நோய்களிலிருந்தும் விடுபடுவதுடன் எல்லா உறுப்புகளும் சீராகச் செயல்பட்டு நலமாக வாழ முடியும்.

தமிழக டொக்டர், பேராசிரியர்,
ஏ.அமானுல்லாஹ் எம்.டீ.

அவர்கள் வழங்கிய மருத்துவக் குறிப்பை நன்றியுடன் பிரசுரித்துள்ளேன்.

அடுத்த லைட் ரீடிங் சிலும் தொடர்வேன்.

இவருக்கு உதவுங்கள்

ஏழையானால் "அப்பாவி"
பணக்காரனானால் "அயோக்கியன்"
தாமம் செய்தால் "டம்பம்"
செய்யாவிட்டால் "கஞ்சன்"
ஆசார சீலனாக இருந்தால் "கபடன்"
அப்படி இல்லாவிட்டால் "பஞ்சமா பாதகன்"
எல்லோரையும் நேசித்தால் "மகா கோழை"
யாரையும் மதிக்காவிட்டால் "திமிர்பிடித்தவன்"
பணம் சேர்த்தால் "உலோபி"
செலவழித்தால் "ஊதாரி"
கஷ்டப்பட்டு உழைத்தால் "வெறும் யந்திரம்"
உழைக்காதிருந்தால் "உதவாக்கரை"
பின்னர் எப்படித்தான் வாழ்வது?
இப்படி கேட்டிருந்தார், மன்னார் எருக்கலாம்பிட்டி. எம்.ஏ.சி.முர்ஸிதா. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன். இவர் இப்பொழுது எங்கிருக்கிறாரோ? இருப்பிடம் தெரிந்தவர்கள் சொல்லுங்கள், எப்படியாவது தெரியப்படுத்தி விடுகிறேன்.

இறந்தவர் தொகை?

இது கணினியாகும் நேரத்தில் ஈராக்கில் இறந்தோர் தொகை துல்லியமாகக் கிடைக்கவில்லை.

ஆனால், முதல் உலக மகாயுத்தத்தில் 64 இலட்சம் பேரும், இரண்டாம் உலகப்போரில் 6 கோடியும் காலி.

இனி, வ்வ் வ்வ் ஒன்று வந்தால்.....? இறைவனே காப்பு!

தெரிந்தால் எழுதுங்கள்

* உலகில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு கோடி முப்பது இலட்சம் ரூபாய். இராணுவத்திற்காகச் செலவிடப்படுகிறது.
இந்திய நாணய மதிப்பில்.

இந்தத் தகவல் 83ல் வெளியான உலக இராணுவ அறிக்கையில் உள்ளது. அப்படியானால் 2003ல் செலவு? அதுவும் சமீபத்திய ஈராக் போரில்?
சரியான தொகை தெரிந்தால் எழுதுங்களேன்.

வினாடி வினா! பதில் எழுதினால் பரிசு!

உலகம் முழுவதிலும் இரண்டு கோடி எண்ணிக்கை இருப்பதாகக் கூறப்படும் ஒரு பிராணி ஒரே நேரத்தில் முப்பது கலன் தண்ணீர் குடித்து, பதினேழு நாட்கள் தண்ணீரே தேவையின்றி நடக்கும்!

அதன் பெயரை அஞ்சலட்டையில் "முஸ்லிம் குரல்" முகவரிக்கு அனுப்புங்கள். முதல் 25 அபிமானிகளுக்கு எனது புதிய நூலான "சிறுவர் பாலியல் கொடுமைகள்" அன்பளிப்பாகக் கிடைக்கும். உடனே உடனே!

உலகம் இவ்வளவு தான்.
நாய்க் கண்காட்சி ஒன்றில்
அந்த முதிய அரசியல்வாதி
அழைக்கப்பட்டிருந்தார் -
பரிசில்கள் வழங்க.
அங்கு வந்திருந்த
வாலிபர்களின் நாகரீக
உடைகளைப் பார்த்து மிகவும்
சங்கடப்பட்டார்.
தன் அருகிலிருந்த ஒரு
பிரமுகரிடம். "கையில்
சிகரெட்டுடன் இரண்டு நாய்க்
குட்டிகளை அழைத்துச் செல்லும்
அந்த இளைஞனின் உடை
அலங்கோலமாக இருக்கிறதே"
என அங்கலாசித்தார்.
அதற்கு அந்தப் பிரமுகர்,
"அய்யய்யோ! அது பையன் அல்ல.
பெண்! என் மகள்!" என்றார்!
உடனே அரசியல்வாதி தன்
தவறை உணர்ந்தவராக, "தயவு
செய்து என்னை மன்னித்து
விடுங்கள். நீங்கள் தான் அவளது
தந்தை என்பது தெரியாமல் பேசி
விட்டேன்" என்று வருத்தம்
தெரிவித்தார்.
உடனே அருகிலிருந்தவர்
சொன்னார் : "மீண்டும் தவறு
செய்கிறீர்கள். நான் அவளுடைய
தந்தை அல்ல. தாய்!"

அவர்கள்

-உக்குவளை அக்ரம்-

சிறுகதை

அவர்கள் வாழ்ந்த மண்ணில் நாமும் வாழ்ந்தோம். இஸ்லாமியரான நாம், எமது பண்பாட்டு கலாசாரங்களில் தனித்துவமாகவும், சகோதரத்துவத்துடனும் உறவு பூண்டிருந்தோம்.

எமக்கான குடியிருப்புக்கள், எம் மூதாதையர் பெயர் கூறும் பாதைகள், ஐந்து நேரமும் வணக்கத்தில் ஈடுபடுவதற்கு பள்ளிவாயில்கள், எம் பிள்ளைகளை கல்வி பயில பாடசாலைகள். இவ்வாறு தான் நாமும் மண்ணில் வரலாறாகினோம்.

அவர்களின் பண்டிகை, எங்களது பெருநாள் தினங்களில் உறவுகளையும் நட்பையும் விரிவாக்கினோம்.

அவர்களின் இருப்பும் - வாழ்வு மீதான உரிமைகளும் பேரின அரசுகளால் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டது. வாழ்வாதாரங்களுக்கு குரல் கொடுத்தோர் காணாமல்போய் சுத்திகரிக்கப்பட்டனர். அரசு ஆயுத இயந்திரங்கள் அவர்களின் பொட்டில் வைத்து தாக்கியது. நாமும் கண்ணீர் சிந்தினோம். துன்பத்தில் ஆழ்ந்தோம். உரிமைவெல்ல அவர்கள் ஆயுதம் தரித்தபோது, நம்பிக்கையோடும், துணிவுடனும் தோள் கொடுத்தோம்.

உக்கிரமாக இன விடுதலைக்காக போராடி, தனித்துவத்தை உலகெங்கும் பறைசாற்றி ஸ்திரமாகினர். பின்னர் ஒரு நாளில், உடுத்த துணியுடனும் ஓட்டியிருந்த உசுருடனும் எங்கள் நெற்றிப்பொட்டில் துப்பாக்கி நுனி காட்டி வெளியேற்றினர். சோகம் வெடித்தது. மனிதம் செத்து, கால்களின்றி தவழ்ந்து வெளியேறினோம்.

அவர்கள் ராஜ்ஜியத்தில் நாம் பாதுகாக்கப்படுவதாக சொல்லி, வரி அறவிட்டார்கள். எம்மையும் எமது அசையும், சொத்துக்களை கடத்தியும் பணம் கேட்டார்கள்.

சந்தர்ப்பம் சூழ்நிலைகள் அவர்களுக்கானதாக உருவான வேளைகளில்.... எங்களின் உயிர் குருதிகளை நக்கி ருசி பார்த்தார்கள். பலமுறை எங்கள் ஊருக்குள் ஊடுருவி கத்தி-தடி-துப்பாக்கிகள் கொண்டு எமது குடியிருப்புக்களையும், வயது வேறுபாடின்றி பால் வித்தியாசம் புறக்கணித்து உயிர்களை காவு எடுத்தார்கள். எங்கள் புள்ளத்தாச்சி பொண்டுகளின் வயித்தக்கீறி, புள்ளய வெளியெடுத்து எறிந்து வீரமும் காட்டினார்கள்.

இன்னொரு முறை அல்லாஹ்வை, தொழுது கொண்டிருந்த அடியார்கள் மீது, வெறித்தனமாக குண்டுகளை பாய்ச்சி ஊரை பீதிக்குள்ளும், கண்ணீர் மழையிலும் நனைய விட்டு, பள்ளியை ரத்தத்தில் நிரப்பி வரலாறு படைத்தார்கள். இருந்தும் அவர்கள் தான் எல்லாம் எமக்கானார்கள். பாதுகாவலராகவும் வீரர்களாகவும், தலைவர்களாகவும் எம்முள் திணிக்கப்பட்டனர். அவர்களின் சுட்டுவிரல் அசைவுக்கும், உதடுகளின் துடிப்புக்கும், அர்த்தமறியா... புன்னகைக்கும் விளக்கம் தேடி குறிஞ்சிப்பூ பூக்கும் காலம் மட்டும் காத்திருந்தோம்.

மீள நினைத்த நினைவுகள் சடுதிக்குள் மறந்தது. மெல்ல மெல்ல உடலெங்கும் பரவசம் பரவியது. துப்பாக்கி முனையில் விரட்டப்பட்டு, பனிரெண்டு வருடங்கள் கடத்தப்பட்டதும், அந்தச் செய்தி ராவுத்தருக்கும். அவரைச் சார்ந்தோருக்கும் உவப்பானதாக இருந்தது கேட்பதற்கு. தாய் மண்ணை மிதித்திட கனவு அவர்களுக்குள் சுமந்த விழிகளில் நம்பிக்கையின் வெளிச்சமும் படர்ந்தது.

உடல் வடலி முளைத்த பாரம்பரிய மண்ணில் நிலைத்து விட, உடல் சுமந்து போன நபுசு, அகதி வாழ்வின் பிணிக்குள் அமிழ்த்தியது. இறந்து விட்டதாக நினைத்த வாழ்வுப் பரப்பு... காற்றில் கலந்து பரவிய செய்தியால் நம்பிக்கை கொண்டது.

மனசுக்குள் குழந்தையின் பூரிப்பும், குதூகலமும் உருவாகியிருந்தது. ஆசையும் வேள்வியும் 'ராவுத்தருக்குள் ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தன.

"இப்போதே விடிந்துவிடக்கூடாதா.... ? தான் பிறந்து, தவழ்ந்து, உடலுக்கு உரமூட்டிய மண்ணின் சுவாசத்தை அணைத்திட, இந்த கங்குல் விலகி வெண்மேகங்கள் படர்ந்து. புலர்வை நிச்சயப்படுத்தாதா...?"

இயற்கையின் நியதி கன வினாடிக்குள் மாற்றம் கண்டிட ராவுத்தர் ஆசைப்பட்டார்.

துப்பாக்கிகள் உறவுபூண்டு அச்சம் படர்த்திய மண்ணில், குருதியே விதைக்கப்பட்ட தேசத்தில் புறாக்கள் இனி கலனமின்றியே பறக்கும். மனிதக்குரல்கள் வீட்டுக்குள்ளும் தோப்பினுள்ளும் ரகஸ்யம் பேசி மனிதம் தளைத்தோங்கும். பிஞ்சு தளிர்கள் மதங்களை சடந்து, அதிசய உலதை தம் சின்ன உள்ளங்களால் உயிர்ப்பிப்பார்கள்.

களை மண்டிக்கிடக்கும் வயல்வெளியும் மனிதசஞ்சாரமற்றுப்போன மத ஆலயங்களும் வியர்வையிலும் பிரார்த்தனையிலும் களைகட்டி மத உணர்வுகள் மேலோங்கும் உறவும் நட்பும் யாழ் வீதிகளில் குசலம் விசாரித்து, சொல்லாத சேதிகள், ஆழ்மனத்துயரங்களை தாலாட்டி உறவுகளை செறிக்கும்.

ராமனும், ரகுமானும், அந்தோனியும் அன்று போலவே பனையின் கீழ் தம் வீட்டு உணவுகளை பரிமாறிக்கொள்வர். அறுவடையும் பண்டிகையும் கிராமிய உள்ளங்களை கலாசார பண்பாட்டு விழுமியங்களில் கலந்துறையாடும். வியர்வை சிதறும் உயிர்கள் தோழமைக்குள் கட்டுண்டு வாழும்.

ராவுத்தரின், யாழ் மண்ணின் நினைவுகள் ஈரவிப்பாக மனதில் குசுகுசுத்தது. வடலியின் காற்றை சுவாசிக்க ராவுத்தரின் நுரையீரல்கள் தகித்தன.

பள்ளம் பதித்திருந்த பாதையில் வண்டி ஊர்ந்தது. பாதையின் இருபுறமும் புதர் மண்டிக்கிடந்தது. அணணிய தேசமொன்றின் உருவாக்கமாக சிதைவுகள். பிரகாசிக்கும் மனங்களில் பழைய நினைவுகள் வீணையில் விரல் பட்டுத் தரித்தது. [illegible]

ஆதங்கமும் வண்டிக்குள் இறக்கை கட்டியது. எத்தனை ஆண்டுகளுக்குப்பின் உடலின் உயிரோட்டமான மொழியும், அசைவுகளும் அவர்களுக்குள்.

வீதியோரம் ராணுவத்தினர் சோபையிழந்திருந்தனர். கட்டளைகளை உள்வாங்கும் இயந்திரமாக வெறித்தனர். சிலருக்குள் இருள் வெளியை கடந்த பிரகாசம் - வாழ்வின் மீது பற்றுதலை உருவாக்கியிருந்தது. சிறை தகர்த்த பறவைகளாக போராளிகள் குழுமியிருந்தனர். சிகரங்களை வளைத்து நொறுக்கிய நெஞ்சுரம் அவர்கள் விழிகளில் பளிச்சிட்டது. இவர்களிடையே மக்கள் திரள் திரளாக அன்றாட கருமங்களில் மூழ்கியிருந்தனர். அவர்களிடையே பழகிய முகங்களைத் தேடி ஏமாந்து போனது ராவுத்தரின் மனசு.

ஐந்துலாம்பு சந்தி இவர்களை உள்வாங்கி சோனகத் தெருவை நோக்கி நகர்ந்தது. புரியப்படாத நகரை நோக்கி புலன்கள் ஊடுருவுவதான பிரமை மனவெளியெங்கும் திரை விரித்தது.

சிதிலமாகி சிதைந்த வீடுகள் காடுமண்டி புதர் வியாபித்து சூழலை மாற்றியிருந்தது. ஸபா, மர்வா குன்றுகளிடையே ஹாஜரா அம்யோர் நீருக்காக ஓடியலைந்த நிகழ்வை ஒத்ததாக ராவுத்தரின் கால்கள் அங்குமிங்கும் அலைந்தன. உடல் வியர்வையால் துவண்டது.

இதுவா என் வீடு... வளவு...?
"....."
"இல்லை"
"....."
அடுத்த தெருவிலா ?
"....."

உருக்குலைந்து கற்குவியலாக எல்லாம் ஒன்றுபோல் படிமமாகி காட்சியளித்தது. அழிந்துபோன தேசத்தில் உயிரைத் தேடும் அவலம் தொடர்ந்தது. ராவுத்தருக்கும் அவரைச் சுற்றியிருந்தோருக்கும்.

இதயம் கருத்தது. எல்லாம் சிதைந்து ஒன்றாகி மதர்ப்புக் காட்டியது. ஐவேளை அல்லாஹ்வைத் தொழுத பள்ளிவாசலினுள் மூத்திர வாசனையும் மல நாற்றமும்... ஆங்காங்கே ஆணுறைகளும் விரவிக் கிடந்தன. நெஞ்சுப் பகுதி அதிர்ந்தது. குருதிச் சிவப்பணுக்கள் ஒரு மையத்தில் குவிவடைந்தது. அனுமதியில்லாமலே விழிகள் குளமாகியது. தேகம் சோர்விழந்து உடல் மண்ணில் சரிந்து முளந்தாளிட்டு பல நிமிடங்கள் குமுறியழுதது.

சோனகத்தெரு சோகம் வடித்தது. சில சோனகனின் உட்மைகள் மாவீரர்களது குடும்பத்து ஆஸ்தியாகியிருந்தது. "காக்கா" என்று பாசப்பிணைப்புடன் ஆரத்தழுவும் சபேசன் இன்று வெறியுடன் பார்த்தான். மீண்டும் அவனுள் அவர் அன்னியமாகியிருந்தார்.

"இங்க பாருங்க காக்கா... பொடியன் மார்தான் இங்க குடியேறச் சொன்ன வங்கள். எனக்கிட்ட எதுவும் கேளாதேயுங்கோ"

அவர் இயலாமையை ஆதிக்கத்திற்குள் நெரித்து திருப்தி கண்டது அவன் குரலின் வன்மை.

"ஞஹர் தொழுகைக்கு நேரமாயிட்டுது. கெதியா வாங்கோ. ஒழுங்கு செஞ்சிருக்கிறம்."

"கோழி ஹலாலாத்தான் சமச்சிருக்கிறம். காதர் காக்கா இங்க வாருங்கோ..."

மத உணர்வுகளை மதித்த தளபதியின் சொல் கேட்டு புளகாங்கிதம் அடைந்தது சோனகனின் உள்ளம். இதே தளபதியின் தலைமைக்குள் தானே எங்கள் தனித்துவம் புதைக்கப்பட்டும். சிதைக்கப்பட்டும் இருந்தது.

நாம் குவிக்கப்பட்டு துரத்தப்பட்ட உஸ்மானிய ஸ்கூல் கறைபட்டிருந்தது.

தமிழினத்தின் புதைந்து போன ஒரு வீர வரலாறு மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் வீர காவியம் புனைந்திருந்தனர். ஆயுத ஆதிக்கத்தில் ஒரு சமூகத்தின் விரட்டியடிப்பிற்கு சமர்ப்பணமாக்கப்பட்டிருந்தது சோனகனின் துயரம்.

அரசியல் சாணக்கியமா...? நானாமார்களின் தலையில் மீண்டும் ஒரு முறை குட்டு விடத்துடிக்கும் முயற்சியின் முதல் செல்நெறியா? எமது தலைமையின் முன்னால் மத உணர்வுகள் மதிக்கப்பட்டது. மீண்டும் அவர்கள் மீதான நம்பிக்கைகள் நீர்க்குமிழியாகின.

ராவுத்தர், நபியவர்களின் மரணச் செய்தியை நம்பமறுத்து கதறிக்கருகிய பிலால் (றழி) யின் மனப்பாதிப்புக்குள்ளானார். அவரைப்போன்றே மற்றவர்களும் துயரத்தில் ஆழ்ந்தனர்.

பல வசீகரங்கள், பல நினைவுகள், மனம் சுமந்த சுவடுகள் உறசாகம் ததும்பி மண் மீது ஆசையாக பிரவாகித்தோடி. மனம் அலைந்து இங்கு குதித்து வர, இங்கு எல்லாமே நம்பிக்கையின் அஸ்திவாரங்கள் சிதைக்கப்பட்டதாக, மயானங்களாக... மனித சஞ்சாரமற்று வனாந்தரமாக வெறிச்சோடிப் கோயிருந்தது. எங்கிருந்து எதைநோக்கி, வாழ்வை நகர்த்துவது? உயிரை அசைத்த நம்பிக்கைகள் உதிர்ந்து கொண்டிருந்தன அவர்களுக்குள்.

கடலலையாக வேகம் கொண்டு மண்ணை முத்தமிட துடித்தவர்களின் நம்பிக்கைகள் தூர்ந்து போயின. பல முனைகளால் தாக்குண்டு குற்றுயிராக்கப்பட்ட மனிதப்பிறவிகளாக தம்மையே உவமையாகக் கண்டனர். மீண்டும் குடில்களை நோக்கி அவர்களின் வாகனம் ஓலமிட்டபடி அசைந்தது இயலாமையுடன்.

விரக்தியுடன் சோர்ந்து களைத்து, கலைந்தவரை குடும்பத்தினர் வளையமிட்டனர். பல்லாயிரம் நினைவின் நிரம் பல்கள் கேள்விகளாக்கப்பட்டது. அவைகள் ராவுத்தரின் செவிகளை நோக்கி படையெடுத்தது.

அவர்களின் கனவுகளை சிதைக்க விரும்பாத ராவுத்தர் சந்தோஷித்த இதயங்களுக்கு உவப்பானதாகப் பதிலளித்தார். எல்லோரும் அகன்றதும் தனிமையில் புலம்பி கண்ணீரைப் பெருக்கிடவே அவரால் முடிந்தது.

நாட்கள் கடந்து மாதமானது. "இஸ்லாமியர் தமிழ் பிரதேசங்களுக்கும் தமது இருப்பிடங் களுக்கும் சுதந்திரமாக சென்று வரலாம். " காற்றாக செய்தி எங்கும் பரவியது.

மீண்டும் முஸ்லிம்கள் வயல் வெளியில் கால் தடம் பதிக்க தடுத்தனர். வியாபாரத்தில் வரி வேண்டுமென்று விதித்தனர். சிலரை ஆயுத முனையில் கடத்தி பணம் கேட்டனர். கொடுக்க மறுத்தவர்களை கொன்று எரித்தனர்.

மூதூர் - வாழைச்சேனை ஆகிட இடங்களில் அவர்களின் கிரனைட் வீச்சும் துப்பாக்கி முழக்கமும் நிராயுத பாணிகளான காக்காமாரின் உடம்பில் உதிரம் பார்த்தது. ஆயிரத்து தொள்ளாயிரத்து எனபத்து மூன்றில் சிங்கள இனவாதிகளால் அவர்களுக்கெதிராக நாடுபூராவும் செய்யப்பட்ட அட்டூழியங்கள் இன்று கிழக்கில் அவாகளால் எங்களுக்கெதிராகவே நடைமுறைப் படுத்தப்பட்டது.

மீண்டும் அவாகளின் ஆதிக்க தேசத்தில் - நாம் நிரப்பி விடப்படுகிறோம். உத்தரவாதங்களின்றி... தலையாட்டும் பொம்மைகளாக அவர்களுக்கான மந்தைகளாக, சுயம் தொலைக்கப்பட்டு அவர்களின் அறுவடைக்காக விதைக்கப்படுகிறோம்.

மூச்சு விடவும் தலைநிமிரவும் அவர்களின் அனுமதிகள் நமக்கு வேண்டப்படுகிறது. இதனாலேயே ராவுத்தரும் அவர் போன்றோரும் அவாகளின் மூச்சத்திணற வைக்கும் பிடிக்குள் அமுங்கிப் போகின்றனர்.

காவலர்களாகவும் - எங்களின் சுயத்தை பிரதிபலிப்பதாகவும், எங்களுக்காக உரத்த குரலெழுப்புவதாகவும் எங்கள் முதுகெழும்பற்ற தலைவாகள் கணக்கில் வராத பணக்கட்டுக்களைக் கைமாற்றிக் கொண்டு எம்மைச் சுற்றி முரசம் கொட்டுகின்றனர். எங்கள் மூச்சுக் காற்றுக்கள் நின்று போகும் வரைக்கும்.

அவர்களின் பதவிகளுக்கும், பணம் பதுக்கும் வழிகளுக்கும், வெற்றிகளுக்கும், பலியிடுவதற்காக நாம் சிதைக்கப்படுகிறோம். எங்களது இருப்பும் - வாழ்வும் - மரணமும் அரசியல் தலைப்பானது எங்கள் தலைவாகளுக்கும்.

மீண்டும், மீண்டும் மூதூர், பாலத்தோப்பூர், ஆஸாத் நகரென...

அவாகள் ஜெயித்துக் கொண்டிருக்க...
நாம் தோற்றுக் கொண்டிருக்கிறோம்...
வழமைபோல்...

மீண்டும் புலிகளால் வஞ்சிக்கப்படும் முல்லைத்தீவு முஸ்லிம்கள்

1990ல் விரட்டப்பட்ட முல்லை மாவட்ட முஸ்லிம்களின் நில புலன்கள் அனைத்தும் இன்றுவரை புலிகளின் கைவசமே உள்ளன. யுத்தநிறுத்தம் ஏற்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் இம்மக்களது வீவ சாயக் காணிகள் அனைத்தும் இதுவரை உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட வில்லை. கடந்த பதின்மூன்று வருடங்களாக இக்காணிகளை புலிகள் குத்தகைக்கு வழங்கி வருமானங்களைப் பெற்று வருகின்றனர் தண்ணிமுறிப்பிலே அதிக நெற்காணிகளை உடைய முல்லை முஸ்லிம்கள் தங்களது நெற்காணிகளைப் பெறுவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டும் இதுவரை இவர்களது காணிகளை உரியவர்களுக்கு வழங்கப்படாமல் பல நொண்டிச் சாட்டுகளை கூறி புலிகளால் வஞ்சிக்கப்படுவது வேதனை தரக்கூடிய ஒரு விடயமாகும்.

கடந்த ஞாயிறு சக்தி தொலைக்காட்சியில் மின்னல் நிகழ்ச்சியில் தங்களது கருத்தினை கூறிய புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல் வன் சொந்த இடத்தில் மீளக்குடியமர்வ தற்கும் தங்களது நில புலன்களை ஆளு கை செய்தவற்கும் யாரிடமும் அனுமதி கேட்க வேண்டிய அவசியமில்லை என்று ஆணித்தரமாக கூறி இருந்தார்.

ஆனால் முல்லை மாவட்டத்தில் நடப்பது வேறு. சொல் ஒன்று செயல் ஒன்றாக புலிகளின் நடவடிக்கைகள் அமைந்துள்ளமை வேதனை தரக்கூடிய விடயமாகும்.

எனவே முஸ்லிம்களுக்கு சொந்தமான நிலபுலன்கள் அனைத்தையும் உரியவர்களிடம் வழங்க நிபந்தனை யின்றி புலிகள் ஆவன செய்ய வேண்டும்.

- நீராவியூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு உதவிகள் மூலம் முறையான பயன் பெறுமா?

இலங்கையை பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் நோக்கத்தில் எமது நாட்டு அரசு மேற்கொள்ளும் பிரயத்தனங்களின் பலனே கிடைத்த: கிடைக்கவிருக்கும் வெளிநாட்டு கடன் உதவிகளாகும். இம் முயற்சி இதற்கு முன் ஆட்சிபீடமேறிய சகல அரசாங்கங்களாலும் மேற்கொள்ளப்பட்டது. இக்கடனுதவிகளை பெற்றுக் கொண்ட அரசுகள் அதனை தமது வெற்றியாக கூறி தம்பட்ட மடித்துக் கொண்டதையும் நாம் நன்கறிவோம்.

இம்முறை ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாடு தொடர்பாக அரசினதும், பொதுமக்களதும் எதிர்பார்ப்புகள் பலமடங்காக அதிகரித்துக் காணப்படுகின்றன. இலங்கைக்கு 3 வருடங்களுக்கு ஆண்டொன்றுக்கு 10.000 கோடிகள் என்ற அடிப்படையில் மொத்தம் 30.000 கோடிகள் கிடைக்கும் என்பது அரசின் எதிர்பார்ப்பு. ஜப்பானிய உதவி வழங்கும் மாநாட்டுக்கு முன்பதாக முன்னோடி உதவி வழங்கும் மாநாடு வொஷிங்டனிலும் அதற்கு முன்னர் பிரேஸிலிலும் நடைபெற்று முடிவுற்றுள்ளதோடு இறுதி மாநாடு கொழும்பிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை மீளக் கட்டியமைக்கும் செயற்திட்டத்திற்காக 40 க்கும் மேற்பட்ட நாடுகளும், சர்வதேச நிதி நிருவனங்களும் ஜப்பான் மாநாட்டில் பங்கு கொள்ள உள்ளன. என்றாலும் அம்மாநாட்டில் கிடைக்கும் கடன் உதவிகள் இலவசமாக கிடைப்பதில்லை. மாறாக அவற்றில் 90 வீதம் அதிகமான தொகை வட்டியுடன் மீள செலுத்தப்படுவது அவசியம். இலவசமாக கிடைப்பது மிகவும் சிறிய தொகையே. இன்று ஒரு நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப கடன் உதவிகளை விட வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக் கொள்வது பிரயோசனமானது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். உதவிகளை விட முதலீடுகளை பெற்றுக் கொள்ள முயலும் இலங்கை அவை சரிவர கிடைக்கப் பெறாமையினாலேயே வெளிநாட்டு உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றது.

இந்நாட்டுக்கு சமாதானம் கிடைக்கும் என்ற எதிர்பாப்பு நிலைத்ததனை தொடர்ந்து கைச்சாத்திடப்பட்ட 178 முதலீட்டு உடன்படிக்கைகளில் 6 மாத்திரமே அமுல்படுத்தப்படடதென முதலீட்டு சபை முகாமையாளர் அறிவித் துள்ளார். எனவே. இத்தகைய முதலீட்டு எதிர்ப்புக்கள் மேலும் வீழ்ச்சி நிலைக்கு உட்படும் போது கடன் உதவிகளை அதற்காக செலவிட வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும். குறிப்பாக 20 வருட யுத்தத்தால் அழிவுக்குள்ளான நாட்டை மீள புணரமைக்க உதவிகள் அவசியம் என்பது பொதுவான கருத்தாகும்.

கடந்த அரசுக்கு கிடைக்காத அளவுக்கு கடன், வெளிநாட்டு உதவிகள் இந்த அரசுக்கு கிடைக்கிறது. இதற்கு காரணம் சர்வதேச சமூகம் இவ்வரசின் மீது கொண்டுள்ள நம்பிக்கையாகும். என்றாலும். இதற்கு முன்னர் கடந்த காலங்களில் பெறப்பட்ட கடன் உதவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என் பது தெளிவு. இந்நாட்டை ஆண்ட எந்த அரசும் இதுவரை கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு உதவிகளில் 12 வீதத்தை விட அதிகமாக மிகச்சரியான திட்டத்திற்கு பயன்படுத்தியது கிடையாது. பொதுவாகவே ஒரு அரசுக்கு வெளிநாட்டு உதவிகள் குறித்த ஏதாவது விஷேச திட்டங்களுக்காக அல்லது நிகழ்ச்சிகளுக்காகவே வழங்கப்படுவது வழக்கம். ஆனால். இவற்றுள் 25 வீதம் தொடக்கம் 30 வீதத்துக்கும் இடையிலான வீதம் வருடாந்தம் ஒதுக்கப்படுவது அவசியம். ஆனால் கிடைக்கும் உதவி களை நூற்றுக்கு நூறு வீதம் ஒரு வருடத் துக்கு ஒதுக்க முடியாமைக்கான சுார ணம் கிடைக்கும் உதவிகள் 5 அல்லது 6 வருடங்களை அடியாக வைத்து பகுதி. பகுதியாக வழங்கப்படுவதனாலாகும்.

என்றாலும். கடந்த காலங்களில் கிடைக்கப் பெற்ற உதவிகள் சரியான பயன்பாட்டுக்கு உற்படுத்தும் விடயம் நலினமாகவே காணப்பட்டது. எனவே. இது குறித்து உதவி வழங்கிய நாடுகள் சாவதேச நிருவனங்கள் எமது பொருளாதார நிருவாகம் குறித்து வினா எழுப்பின.

இவ்வாறு கிடைக்கும் உதவிகளை சரியான முறையான திட்டங்களுக்காக பயன்படுத்தப்படாமைக்கான காரணங்களாக

1. உதவி கிடைக்கப் பெற்ற திட்டங்களில் உள்ள குறைபாடுகள்
2. முகாமைத்துவ. நிர்வாக குறைபாடு பலவீனம்
3. நிதி ஒதுக்கீடு செய்யும் பொறுப்பை ஏற்ற நிர்வாகிகளின் செயற்றிறன் குறைபாடு.
4. குறித்த திட்டம் தொடர்பாக மக்களின் எதிர்ப்பு என்பனவும் உதவி களை முறையாக பயன்பாட்டுக்கு உற்படுத்தப் படாமைக்கான சுாரணமாகும்.

பொதுவாகவே சகல அரசுகளும் வெளிநாட்டு உதவிகளை பெறுவதில் காட்டிய அக்கறை அவற்றை சரியான ஒதுக்கீட்டு செயற் திட்டங்களுக்காக பயன்படுத்தாத முகாமைத்துவ பலவீனம் எமக்கு கிடைத்த சாவதேச நாடுகளில் கடன் உதவிகள் மூலம் உச்சக்கட்ட பிரயோசனம் பெறுவதை தடை செய்து விட்டது.

கடந்த வரவு செலவு திட்டத்தில் தனி நபர் கடன் தொகை 85.000 க்கு அண்மித்த தொகையென குறிப்பிடப்பட்டது. பெறப்படவுள்ள கடன் தொகைகளின் பின்னர் இத்தொகை 100,000 ஆக மாறி விட முடியும். பாரிய கடன் தொகையை சுமந்த இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மென் மேலும் கடன் பெறவேண்டி ஏற்படும். கடந்த சந்திரிகா அரசிலும், தற் போதைய ரணிலின் அரசிலும் அவர்கள் ஆட்சியை கைபற்றும் போது தேசிய அபி விருத்தி தொடர்பான திட்டம் இருக்க வில்லை. நிகழ்கால அரசு ஆட்சி பீட மேறிய பின் தமது முதல் ஆண்டை "இலங்கையை மீள கட்டியமைத்தல்" என்ற திட்டத்தை உருவாக்குவதற் காகவே செலவிட்டனர். இதற்காக சர்வதேச அபிவிருத்தி நடவடிக்கைகளில் வல்லுனர்களான ஜிம் ரொபாட்சன், ஜோன் அல் போன்றோரின் உதவி இதற்கு கிடைத்தது.

மறுபுறம் அரசுக்கும் தேவையான வெளிநாட்டு உதவிகளை பெறுவதற்கென தனியான குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக அமைச்சா மிலிந்த மொரகொட உட்பட அவரின் குழுவினர் இவ்விடயத்தில் கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் கிடைக்கப் பெற்ற உதவிகள் முறையாக பயன் படுத்தப் படாமையினால் அப்பலவீனத்தை நீக்கி உச்சகட்ட பயனைப் பெறுவதற் காகவும். உதவிகளை முறையாக பயன்படுத்துவதற்காகவும். முகாமைத்துவ செயற்பாடுகளுக்காகவும் தனியான அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் வெளி நாட்டு உதவிகள் பயன்படுத்தப்படுவதன் மூலம் நாடு வளம் பெறவேண்டும் என்பதே எமது பிரார்த்தனை. இவ்வரசு ஆட்சி பீடமேறிய பின் கடத்திய 16 மாதங்களுக்குள் கிடைக்கப் பெற்ற வெளி நாட்டு உதவிகள் மூலம் ஆரம்பித்தது ஒரேயொரு பாரிய அபிவிருத்தி திட்டம் மாத்திரமே. கடந்த 4 வருடங்களாக நிதி ஒதுக்கீடு செய்தும், எத்தகைய செயற்பாடுகளும் நிகழாமையினால் ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்காக ஒதுக்கிய தொகையை இவ்வருடத்துக்குள் பயன் படுத்தாவிட்டால் அதனை மீள திருப்பி பெற்றுக் கொள்வதாகக் கூறும் வரை இத்திட்டம் பின் போடப்பட்டது. சிறிய அளவில் முடிக்கப்பட்டிருந்த குக்குள்கங்க மின்சாரத்திட்டம் நிறைவு செய்யப் பட்டுள்ளது. இது இன்னும் 3 மாதங்களில் திறக்கப்படும். இது தவிர கனேடிய நிறுவனமான லெவலின் இன்டர் நெஷனல் ஹம்பாந் தோட்டை துறைமுகத் துக்காக நிதி உதவி வழங்கியுளளது.

ஆகவே அதன் கடன் உதவிகளை பெறுவதில் காட்டும் அக்கறை அவற்றை உகந்த திட்டங்களுக்காக முறையான முகாமைத்துவத்தின் ஊடாக பயன்படுத்துவதன் மூலமே அரசு எதிர்பார்க்கும் அபிவிருத்தி சாத்தியம் என்பதில் இருகருத்துக்கு இடமில்லை.

தமிழில் : எம்.ஐ.எம்.ஷிராஸ்

வடக்கு கிழக்கு இணைப்பா? பிரிப்பா?

முட்டி மோதும் அரசியல் தலைமைகள்!

வடக்கு கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டு 16 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில். வடக்கு கிழக்கு இணைந்திருப்பதா பிரிந்திருப்பதா என்பதில் அரசியல் மோதல்களும் முரண்பாடுகளும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் மத்தியில் எழுந்துள்ளன. "வட்டுகோட்டைக்கு வழி என்ன என்று கேட்டால். தூட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு" என்பது போன்ற அரசியல் சர்ச்சைதான் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை இது!

முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வினை அடிப்படையாகக் கொண்டே வடக்கு கிழக்கு இணைந்திருப்பதா பிரிந்திருப்பதா என்பதை வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் முடிவு செய்ய முடியும். இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வினை இதுவரை முன் வைக்க முடியாத: அத்தீர்வினை பெற்றுக் கொள்ள அரசியல் ரீதியில் போராட முடியாத கையாலாகத்தனமிக்க இத்தலைமைகள் - இன்று சொந்த மக்களை திசை திருப்புவதற்கு வடக்கு கிழக்கு இணைப்பு. பிரிப்பு சர்ச்சையை அரசியல் அரங்கில் முடுக்கி விட்டுள்ளன.

இன்று இந்த சர்ச்சையை கிளப்பி வருகின்றவர்கள் இருவராவர். ஒருவர் அமைச்சர் அதாவுல்லா. மற்றவர் சேகு இஸ்ஸதீன் எம்.பி. அதாவுல்லாவின் வடக்கு கிழக்கு பிரிப்புத் தொடர்பான கருத்து தமிழர் அரசியலில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. வடக்கு கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டுமானால் முஸ்லிம் மக்களது அங்கீகாரமும் அரசியல் ஆணையும் முக்கியமானது என்ற முஸ்லிம்களின் அரசியல் துரும்பை. இக்கருத்து வெளிப்படுத்தி நிற்கிறது. இந்தவகையில் அரசியல் அர்த்தத்தில் அதாவுல்லாவின் இக்கருத்து நமது மக்களால் கணிசமாக உள்வாங்கப்படும் சூழலை ஓரளவு தோற்றுவித்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. ஆனாலும் அதாவுல்லாவின் இக்கருத்து தொடர்பில் முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வாக வடக்கு கிழக்குப் பிரிப்பு அமையுமா என்ற கேள்வி எழுப்பப்படுவது தவிர்க்க முடியாததாகவும் உள்ளது.

வடக்கு கிழக்கு பிரிப்பு என்பது தமிழ்த் தேசத்தின் நீண்ட கால அரசியல் நிலைப்பாட்டுக்கு பாரிய பின்னடைவைத் தரக்கூடியது. வடக்கு கிழக்கு இணைப்பு பிரிப்பு விவகாரத்தில் முஸ்லிம்கள் மாத்திரம் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ். சிங்கள மக்களும் சம்பந்தப்பட்டுள்ளனர்.கிழக்கு மாகாணத் தமிழ்மக்களும்தான் வடக்குடன் கிழக்கு மாகாணம் சேர்ந்திருப்பதா அல்லது பிரிந்திருப்பதா என்ற முடிவினை எடுப்பதற்கு அரசியல் உரிமை உள்ளவர்கள். வடக்கு கிழக்கு பிரிப்பு என்பது கிழக்கில் வாழும் கணிசமான சிங்கள மக்களுக்கு அதிக சந்தோசத்தை தரவல்லது என்பது நாமறிந்ததே.

ஆகவே வடக்கு கிழக்கு இணைப்பு பிரிப்பு விவகாரம் - சிங்களத்தரப்புக்கு அதிக சாதகத்தையும் தமிழ்த்தரப்புக்கு அதிக பாதகத்தையும் தரவல்ல இருமுனை விவகாரமாகும். இந்த விவகாரத்தில் முஸ்லிம்களுக்கு எட்டப்படும் சாதகமான நிலைமையினை வைத்தே இவ்விவகாரத்தில் முடிவு எடுத்தல் வேண்டும். அரசியல் ரீதியாக முஸ்லிம்கள் கோரிவரும் சுயநிர்ணய உரிமை. சொந்தத் தாயகம் போன்ற அரசியல் அம்சங்கள் உறுதிப்படுத்தும் தீர்வைப் பெறுவதுதான் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் நியாமான அரசியல் போராட்டமாகும். - அத்துடன் வடக்கு முஸ்லிம்களை கைவிட்டு விடவும் முடியாது என்பதை அதாவுல்லா போன்றோர் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே நேரம் வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்தும் சேகு இஸ்ஸதீனின் அரசியல் சந்தர்ப்பவாதத்தால். வெறும் சர்ச்சைகளை கிளப்ப முடியுமே தவிர முஸ்லிம்களுக்கான நிரந்தரத் தீர்வை நோக்கி - அதனை சாத்தியப்படுத்துவதற்கான அரசியல் திட்டங்களை ஒருபோதும் முன்வைக்க முடியாது! இஸ்ஸதீனின் இந்த வெறும் அதிரடி அரசியல் விளையாட்டு அக்கரைப்பற்றுடன் மாத்திரம் நின்றுவிடும். வடக்கு கிழக்கை இணைத்து புலிகளிடம் தாரை வார்ப்பதற்கு நமது மக்கள் இன்னும் தயாராகவில்லை என்பதை இஸ்ஸதீன் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தில் ஹக்கீம் மீண்டும் தனது நழுவல் போக்கையே வெளிப்படுத்தி உள்ளார் - அதாவது வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டுமானால் முஸ்லிம்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்பதே அவரின் கருத்தாக உள்ளது.

இதனை பாராளுமன்றத்திலும் அவரின் உரையில் தெரிவித்துள்ளார்- ஹக்கீமின் தலைமை வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கான சுயாட்சித் தீர்வை உடனடியாக முன்வைக்க வேண்டும் - அதனை முன் வைக்காது தொடர்ந்தும் காலத்தைக் கடத்த முடியாது! அத்துடன் வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்கு சுயாட்சியைத் தர தமிழர் தரப்பு மறுத்தால் என்ன நிலைப்பாட்டினை முஸ்லிம்கள் எடுக்க வேண்டும் என்பதனை முன்வைக்கவும் வேண்டும். அப்போதுதான் நமது மக்களின் அரசியல் முடிவின் நியாயதிக்கம் உலகுக்குப் புரியும்.

வடக்கு கிழக்கு இணைப்பினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கு தனித்த தன்னாட்சி அதிகார அலகை வழங்குவார்கள் என ஹக்கீம் தலைமை நம்பிக்கை கொண்டிருந்தால். அதற்கான அரசியல் சூழலை நிகழ்காலத்தில் மெய்ப்பித்து காண்பிக்க வேண்டும். அனைத்து அரசியல் முடிவுகளும் நமது மக்களின் நலனில் இருந்தே எடுக்கப்பட வேண்டுமே தவிர ஏட்டிக்குப் போட்டியான அரசியலில் இருந்து அல்ல.

-ஃபைபூஸ் அஹமட்

அரசியல் தலைவர்களாலும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களாலும் புறம் தள்ளப்படும் வடக்கு முஸ்லிம்கள்

மாமனிதர் கலாநிதி மர்ஹூம் அல்ஹாஜ் அஷ்ரஃப் அவர்களின் பின்வந்த தலைவர்களினாலும் பாராளுமன்ற உறுப்பினர்களினாலும் 100க்கு100வீதம் மு.காவை ஆதரித்து பல தியாகங்களை புரிந்த முல்லை மாவட்ட முஸ்லிம்கள் கடந்த மூன்று வருடங்களாக அகதி முகாம் அவிருத்தியிலும். தொழில் ரீதியாகவும் புறம் தள்ளப்படுவது வேதனை தரக்கூடிய விடயமாகும்.

மறைந்த தலைவரினால் முன்னுரிமையளிக்கப்பட்ட. முல்லை மாவட்ட முஸ்லிம்களின் அபிவிருத்தி பணிகளில் முதன்மையளிக்கப்பட்ட வேலைத்திட்டம் தான் ஆலங்குடா பீ. முகாமிற்கான மின்சார விநியோகமும், கூட்டுறவு கிளைச்சங்க கட்டிடமுமாகும்.
இவ்வேலைத்திட்டங்களுக்கான நிதிகளும் ஒதுக்கப்பட்டிருந்தன. தலைவரின் மறைவிற்குப் பிற்பாடு, தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு வரப்பட்டபோது இவ்விரண்டு வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் மறைந்த தலைவரின் கனவுகளை நனவாக்கி தருவேன் என்று கூறிய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் இதுவரை மௌனியாக இருப்பதன் மர்மம் தான் புரியாதுள்ளது? வன்னி பா. உறுப்பினர்கள்கூட இவ்விடயத்தில் பாராமுகமாகவே இருந்து வருகிறார்கள். 1989ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்கு முகம் கொடுத்த காலம் தொட்டு இன்றுவரை மு.காவை முழுக்க முழுக்க ஆதரித்து கொண்டிருக்கும் முல்லை மாவட்ட முஸ்லிம்கள் தொடர் புறக்கணிப்புக்குள்ளாவதுதான் தலைவிதியா?

நீராவிப்பூரான்

புத்தளம் பொற்பூமிக்கு நேர்ந்த கதி

(புத்தளம் மாவட்ட செய்தியாளர்)

புத்தளத்தின் அடிப்படை சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முதலில் முகம் கொடுத்து புத்தளம் தொகுதி முஸ்லிம்களுக்குப் பொருத்தமான ஓர் அரசியல் பார்வையை வழங்கி புதிய போக்குகளுக்கும் அபிவிருத்திகளுக்கும் இடமளிக்கக் கூடியதும் மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடியதுமான புத்தளத்தைக் கனவுகண்ட இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் முதல் பிரதிநிதியும் முதல் முஸ்லிம் சபாநாயகருமான எச். எஸ். இஸ்மாயில் பிறந்து ஒரு நூற்றாண்டின் பின்னர் ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் வைபவம் சென்ற வாரம் புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றிய கலாநிதி எம். எஸ். எம். அனஸ், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர். எச். எஸ். இஸ்மாயிலின் உரைகளிலிருந்து தொகுத்த "பொற்பூமி" எனும் நூலைச்சுட்டிக்காட்டி அப்பூமிக்கு இன்று என்ன கதி நேர்ந்துள்ளது என்று அவர் பார்க்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இதன் மூலம் கலாநிதி அனஸ் அமைச்சர் அவர்களுக்கு சூசகமாக உணர்த்தியது இதுதான். பொற்பூமி என்பது புத்தளத்திற்கு வடக்கே காணப்படும் காரைத்தீவு மற்றும் எலுவன்குளம் பிரதேசத்தை உள்ளடக்கிய பொன்பரப்பியாகும். இப்பிரதேசம் பெருமளவு நிலங்களைக் கொண்டுள்ளது. துரதிஷ்ட வசமாக இப்பிரதேசத்தில் இன்று வரைக்கும் பூர்வீகமாக வாழ்ந்துவரும் முஸ்லிம்களுக்கும் அவர்களது வருங் கால சந்ததியினருக்கும் எஞ்சியுள்ள இந்நிலங்களில் ஒரு அங்குலமேனும் இனிமேல் கிடைக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. திட்டமிட்ட பெரும்பான்மை இனக்குடியேற்றம் தொடர்வதே இதற்கான காரணமாகும். அத்துடன் பொன்பரப்பிப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்திட்ட போதிலும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள பெரும்பான்மை இன அரசியல் வாதிகள் மற்றும் அதிகாரிகள் முன்பாக கைட்டி நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையே உள்ளது. அதற்கேற்றாற்போல அரச நிர்வாக இயந்திரமும் திட்டமிட்டு வடிவமைக்கப் பட்டுள்ளது. எத்தனை பேர் இதனை அறிவாரோ!

யார் அந்த தீயசக்தி.....

எங்கோ இருக்கும் முஸ்லிம் குழுக்ககளிடம் ஆயுதங்கள் இருப்பதாக ஆணித்தரமாக கூறுபவர்கள். கடத்தப்பட்ட இருவரையும் இன்று வரையிலும் கண்டுபிடித்திருக்க முடியாதா? தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு நெருக்கமான மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களையும் குடித்துக் கொண்டிருந்தவர்களையும் துப்பாக்கிச் சூட்டுக்கு இழக்காக்கப்படுவதைக் கட்டுப்படுத்த முடியாதா? அப்படிச் செய்த குற்றவாளிகளை. அவர்கள் தமது உறுப்பினர்களாக இருந்தால் என்ன? தீவிர ஆதரவாளர்களாக இருந்தால் என்ன? உடன் தேடிப்பிடித்துப் பிரகடனம் செய்ய முடியாதா? அவ்வாறெல்லாம் முடியாது எனின். இருவரையும் கைதுசெய்தது விடுதலைப் புலிகள் தான் என்பதை விட வேறெந்த முடிவிற்கு வரமுடியும்? தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தம்மை விடவும் வேறு எவரும் கடத்தல் வேலையைச் செய்திருக்க முடியுமா? நிச்சயமாக முடியாது.

- - - - - - -

சித்திரவதை ஏதுமின்றி உளவுத்துறை மூலமும் நுணுக்கிய விசாரணைகள் மூலம் குற்றங்களை விசாரிக்கப் போவதாக கூறும் விடுதலைப் புலிகள் கடத்தப்பட்டவர்களை அல்லது தமது எல்லைக்குள் நுழைந்தவர்களை முறைப்படி விசாரணை செய்திருக்கலாம் அல்லவா?

உண்மை நிலைமை இதுதான். மூதூர் ஒசாமா என்று அழைக்கப்படும் ஹக்கீம் எனவரிடம் கூலிக்கு வேலை செய்து வந்த இருவரை திட்டமிட்டு தமது கட்டுப்பாட்டு எல்லைக்குள் வரப்பண்ணி. கொடூரமாக சித்திரவதை செய்து ஹக்கீம் பற்றியும் அவர் வசம் உள்ள ஆயுதங்கள் பற்றியும் தகவல்களைக் கறக்க விடுதலைப் புலிகள் முயற்சித்துள்ளார்கள். இதற்கு மேல் அவர்களை வெளியில் விட்டால் சித்திரவதைக் கொடுமைகள் வெளியில் தெரியவரும். இது முஸ்லிம்கள் மீதான மனித உரிமை மீறல்களை அம்பலத்திற்குக் கொண்டு வரும். இதற்காகவே காத்துக் கொண்டிருக்கும் ஜேவிபி. சந்திரிகா கும்பல்கள் இதனைத் தமது அரசியல் இலாபங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வர். ஆகவே இவ்வாறான பாதகங்களைத் தவிர்க்க ஒரேவழி கைது செய்ய இருவரையும் இல்லாமல் செய்து விடுவதுதான்.

இந்த சூழ்ச்சிகளுக்கெல்லாம் கடைசியாக விலை கொடுத்தவர்கள் மூதூர் முஸ்லிம்களும் தமிழ் மக்களும்தான். ஆயிரக்கணக்கான மக்களின் அவல நிலைமைக்கு மூல காரணமாக அமைந்தது விடுதலைப் புலிகளின் உள்ளூர் தலைமைகள்தான். ஆனால் அவர்கள் காரணமாகக் காட்டுவது 'தீயசக்திகள்'. என்ற துருப்புச் சீட்டைத்தான். உண்மையில் தமது மேலாதிக்கத்தை எதிர்க்கின்றார்கள் என்பதற்காக முஸ்லிம்களுக்குப் பாடம் புகட்டுவதும். பின்னர் நல்ல பிள்ளைகளாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதும் என்ற நாடகம்தான் இப்போதும் நடந்தேறியுள்ளது. மேலும் இதனைச் சாட்டாக வைத்து தோப்பூர். 58. 59 பிதேசங்களையும் இனச்சுத்திகரிப்புச் செய்வதற்கு வழிகோலியாகி விட்டது.

இவ்வாறாக விடுதலைப் புலிகள் தாம் சம்பந்தப்படும் செயற்பாடுகளை தீயசக்திகளின் மீது பழிபோட்டுக் கொண்டே சென்றால். உண்மையில். தீய சக்திகள் மேற்கொள்ளும் சதிகளும். வன்முறைகளுக்கும் கூட விடுதலைப் புலிகள் மீதே பழி சுமத்தப்படுவதற்கு வழிசமைக்கின்றது. விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் மீதும் உண்மையான அர்ப்பணிப்புகளின் மீதும் மதிப்பு வைத்திருக்கும் பிரிவினர் இவ்வாறான நிலைமை ஏற்படுவதை நிச்சயமாக விருப்புவதில்லை என்ற செய்தியையும் தெரிவிப்பது இங்கு பொருத்தமானதாகும்.

சலாமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியான விமர்சனம் தேவை

-ஏ.எல்.எம். நிசாத், மூதூர்-07-

இன்றைய உலகின் வளர்ச்சிப்போக்கைத் தீர்மானிப்பதில் விமர்சனத்துக்கும் பங்குண்டு. விமர்சனம் என்பதை எம்மில் பலரும் பல விதமாக விளங்கியும் புரிந்தும் வைத்துள்ளனர் . சிலர் எல்லாவற்றையும் குறை கண்டு திட்டித்தீர்ப்பதுதான் விமர்சனம் என்றும் இன்னும் சிலர் எல்லாவற்றையும் போற்றிப்புகழ்ந்து உச்சாணியிலேற்றுவதுதான் விமர்சனம் என்றும் இன்னும் சிலர் தமக்கு சாதகமானவற்றைப் போற்றியும் தமக்குப் பாதகமானவற்றை குறை காண்பதும்தான் விமர்சனம் என்றும் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இது ஒவ்வொரு எழுத்தாளரினதும் பேச்சாளரினதும் விமர்சகரினதும் போக்குகளாக இருந்தாலும் விமர்சனமானது ஆக்கபூர்வமானதாகவும் செயல்திறன் மிக்கதாகவும் அமையப்பெறவேண்டும்

எதைப்பற்றி விமர்சிக்கின்றோமோ அது தொடர்பான குறை நிறைகளை ஆராய்ந்து தவறுகளை சுட்டிக்காட்டியும் சரியானவற்றை பாராட்டியும் எடுத்துரைப்பதுதான் விமர்சனமாகும். விமர்சனம் ஒன்றின் வளர்ச்சிப்போக்கினை துரிதப்படுத்தும் அதே வேளை ஒன்றின் வீழ்ச்சிப்போக்கிற்கும் காரணமாக அமையும். ஒரு விமர்சகர் அதைக் கையாளும் முறையிலிருந்தான் அதன் வளர்ச்சிப்போக்கும் வீழ்ச்சிப்போக்கும் தங்கியுள்ளது. ஒரு விமர்சகர் கடைப்பிடிக்க வேண்டிய, கையாளவேண்டிய, அறிந்திருக்கவேண்டிய பல விடயங்கள் மறந்துபோகின்றன. அதற்கான காரணம்:

1. எதைப்பற்றி விமர்சனம் எழுதுகின்றோமோ அதைப்பற்றி பூரணமான அறிவின்மை
2. தங்களின் சுய நலப்போக்கிற்கேற்ப அதற்கு வடிவம் கொடுக்க முற்படுகின்றமை
3. அரசியல் பக்கச்சார்போடு பார்க் கின்றமை.
4. சுட்டிக்காட்டப்படும் தவறு திருத்தப்படுமா அல்லது நியாயப்படுத்தப்படுமா எனப்பார்க்கத்தவறுகின்றமை
5. விமர்சனத்தின்யதார்த்தங்களையும் விளைவுகளையும் கருத்தில் கொள்ளாமை

இவை போன்ற காரணங்களினால் ஆக்கபூர்வமானதாகவும் செயல்திறன் மிக்கதாகவும் இருக்க வேண்டியவிமர்சனக்கருத்தை உதவாக்கரைகளாகவும் பொய்கள் நிறைந்ததாகவும் மக்கள் கருதி அதனை நிராகரித்து விடுகின்றனர். இதன்மூலம் திருத்தப்படவேண்டிய தவறு நியாயப்படுத்தப்பட்டு சரிகாணப்படுவதையும் ஒழிக்கப்பட வேண்டிய அம்சம் வளர்ச்சி பெற்று தாண்டவமாடுவதையும் காணலாம். இதுதான் இன்றைய போக்காயின் அவை மாற்றியமைக்கப்பட வேண்டும். மக்களுக்கு எப்போதும் உண்மையானவற்றைச் சொல்ல வேண்டும். எது சரி, எது பிழை எது, நீதி எது, அநீதி என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். தவறு எவ்வாறு திருத்தப்பட வேண்டும் என்பதற்கான வழிமுறைகளையும் ஒழுங்கு முறைகளையும் திருத்தக்கூடிய வழிகளையும் ஒழுங்குபடுத்திக்காட்டவேண்டும் எல்லை மீறுவதை தவிர்த்து தவறு விட்டவர்கள் திருந்தக்கூடியவகையில் அதனைச் சொல்ல வேண்டும். சுய நலப்போக்கோ அரசியல் சாயமோ பக்கச்சார்போ இன்றி விமர்சனம் அமையப்பெறுவதுடன் ஆக்கபூர்வமானதாகவும் செயல்திறன்மிக்கதாகவும் காணப்படுவதுடன் நடைமுறைச்சாத்தியப்பாடுகளுடன் ஒத்துப்போகக்கூடியவாறு அமையப்பெற வேண்டியது இன்றைய தேவையாகும் .

இந்தவகையில் இன்றைய காலப்பகுதியில் "முஸ்லிம்குரலின்" வருகை பாராட்டத்தக்கது. அது இன்னும் ஆக்கபூர்வமான விமர்சனங்களை செய்யவேண்டும் என ஆசிக்கிறேன்.

சஞ்சிகை : "வெற்றி" (மாதாந்த இதழ்)

வெளியீடு : இஷாஅத்து அஹ்ஸனுல் ஸுன்னா இலக்கம் 25 போபஸ் லேன், கொழும்பு -10.

விலை: 15/=

நமது நாட்டைப் பொறுத்தவரை "அஹ்ஸுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்" கொள்கையினை நிலை நிறுத்துவதற்கும் அதன் பாதையில் மக்களை வழிநடாத்துவதற்கென்றும் ஒரு சில ஏடுகள் வெளிவந்திருந்த போதிலும் அவை நிரந்தரமாகவும், தொடராகவும் வெளிவரவில்லை. இந்நிலையினை மாற்றி கடந்த ஆறு வருடங்களாக தொடர்ந்தும் "வெற்றி" மாத சஞ்சிகை வெளிவந்து கொண்டு இருக்கிறது. அதன் 71 வது இதழ் அண்மையில் வெளிவந்திருக்கிறது. "வெற்றி" இதழில் உள்ள படைப்புகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகியமும் மொழிகளிலும் இடம் பெற்றிருக்கின்றன தமிழ் மூலமான படைப்புக்களுக்கு அதிக பக்கங்களை வெற்றி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக இஸ்லாமிய கருத்துக்களையும் குறிப்பாக அஹ்லு சுன்னத்து வல் ஜமாஅத் கொள்கையை சார்ந்த விடயங்களையும் பொரும்பாலும் தொட்டுக்காட்டுவதில் "வெற்றி"இதழ் முழுமையான பங்களிப்பை நல்கி வருகிறது. அண்மைக்கால இதழ்களில் தனது உள்ளடக்கத்தில் மேலதிகமாக க.பொ.த (உத) மாணவர்களுக்கான வழிகாட்டல் கட்டுரைகளையும் இணைத்து வெளிவர தொடங்கியிருப்பதானது இன்னொரு பங்களிப்பாகும்.

குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ் என்னும் இஸ்லாமிய அடிப்படை சட்ட மூலாதாரங்களுக்கு முரணப்பட்ட மத்ஹப்களின் வழி நின்று சந்தேகங்களுக்கு சட்ட விளக்கங்களையும் முன் வைப்பதில் வெற்றி இதழ் பக்கங்கள் நிறைவடைகின்றன.

ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத் என்னும் இஸ்லாமிய நான்கு வழி முறைகளையும் தனது உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும் "வெற்றி" இதழ் எத்தகைய அறிவுத் தகைமையுடையவர்களையும் திருப்திப்படுத்துவதோடு, உன்மையின் வழியில் நிலை கொள்வதற்கும், வசீகரிப்பதற்கும் உரிய ஆக்கங்களையும் கொண்டிருக்கின்றன.

"சத்திய கொள்கை முழக்க மாத இதழ்" எனும் கோஷத்தை தாங்கி வருவதற்கேற்ப வெற்றியின் பக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் சத்திய இஸ்லாத்தின் வழியை நெறிப்படுத்துவ தாகவே அமைந்துள்ளது.

அஹ்லுஸுன்னத்து வல் ஜமாஅத் கொள்கையினை அதிகமாகவும் சரியாகவும் விளங்க வேண்டும் என்ற எண்ணமுடையோர்களை ஏமாற்றாது "வெற்றி" பெரும்பாலும் கை கொடுத்து உதவுமென்பதில் சந்தேகமில்லை.

அபூ பாத்திமா பர்வீன்

நூல் விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் கட்டாயம் இரு பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும். -பிரதம ஆசிரியர்.

சமபலத்துடன் சந்திப்போம்!

'இனிமேல் சமாதானம்
கைகொடு'
என்கிறாய்
கோர நகங்கள்
என்று தெரிந்தும்
சமாதானம் நபி வழி
என்பதால்
உன்னை
நம்பிக்
கை தருகிறேன்
அப்படியே
கையைத்திருகி
முறிக்கிறாய்
சதியின் வலியால்
வீறிடுகிறேன்
'சத்தம் போடாதே' என்று
உறுமுகிறாய்
'ஏன்?' என்றால்
'அது
சமாதானத்தைக் குழப்புவதாகும்'
என்று சீறுகிறாய்
பின்பும்



'இது நம் வீடு' என்கிறாய்
நடந்தெல்லாம் மறந்து
நம்பிச் சிரிக்கிறேன்
சிரிப்பு
நீடிக்கவில்லை
வாடகை கேட்டுவிட்டாய்
இம்முறை நான்
விழித்துக் கொண்டேன்
என்னிலும் நீ
ஓரறிவால் குறைந்தவன்
என்று
புரிந்து கொண்டேன்
ஆனாலும்
பழக்கதோசத்தால்
மீண்டும் வந்து
'சமாதானம்
கைகொடு' என்பாய்
நிச்சயம் கைகுருவேன்
ஆனால்,
உன் கோர நகங்களால்
என் மயிரைத் தானும்
பிடுங்க முடியாது
அப்போது
என் கையில்
சமபலம் சேர்ந்திருக்கும்.

-ஹாலித் இப்னு வலீத்.

ஈழத்து முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டு

சமூக வாழ்க்கையில் மொழி ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. சிறு சமூகங்களாகவும் பெருஞ் சமூகங்களாகவும் உள்ள மக்களை மொழி ஒன்றுபடுத்துகின்றது. உயிருள்ளவை ஒன்று இன்னொன்றுடன் வைத்துக் கொள்ளும் தொடர்பு முறையே விரிந்த கருத்தில் மொழி எனப்படும். நாகரிகமற்ற பிற்போக்கான மக்களுக்குக் கூட மொழி உண்டு. ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஒவ்வொரு மொழி உண்டு. அத்தகைய மொழிகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டு வரலாற்றை உடையன. மாக்ஸ் முல்லா என்பவர் தமது மொழி இயல் நூலில் உலகில் உள்ள மொழிகளின் எண்ணிக்கையை துணிந்து கூற முடியாதெனினும் அவை தொளாயிரத்துக்கு அதிகமானவை என்றும் கூறியுள்ளார். தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் அவற்றுள் இரண்டெனக் கூறலாம். இலங்கையில் வழங்கும் இவ்விரண்டு மொழிகளையுமே ஈழத்து மக்களில் மிகப் பெரும்பான்மையானோர் வழங்குகின்றனர். ஓர் இனத்தின் மொழி அவ்வினத்தின் தனிப் பெரும் செல்வமாகும். அலெக்ஸ்சான்டர் ஹெர்குலானோ என்பவர் மொழியும் சமயமும் இரண்டு வெண்கலச் சங்கிலித் தொடர்புகள் என்றும் அவை காலப் போக்கில் முன்னைய சந்ததியைப் பின்னைய சந்ததியுடன் தொடர்பு படுத்திக் கடமை புரிகின்றன என்றும் கூறியுள்ளார். இலங்கையைத் தாய் நாடாகக் கொண்டுள்ள சிங்களவர் சிங்கள மொழியையும் தமிழரும் சோனகரும், தமிழ் மொழியையும், தாய் மொழிகளாக உடையவர். இலங்கையில் வாழும் சோனகரும் தமிழ் மொழியையே உபயோகிக்கின்றனர். இலங்கையை மொழிவாரியாக மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமானோர் சிங்கள மொழியை வழங்கும் பகுதியில் மேல் மாகாணமும் தென்மாகாணமும் வடமேல் மாகாணமும் வடமத்திய மாகாணமும் சப்பிரகமுவ மாகாணமும் அடங்கும். மத்திய மாகாணத்தையும் ஊவா மாகாணத்தையும் கொண்ட பகுதியில் வாழும் மக்களுள் நூற்றுக்கு ஐம்பதிலிருந்து அறுபது வீதமானோர் சிங்கள மொழியை வழங்குகின்றனர். வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களுள் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமானோர் தமிழ் மொழியையே தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இனி இம்மூன்று பகுதிகளிலும் முஸ்லிம்கள் எவ்வாறு பரவியுள்ளனர் என்பதை அறிய முயல்வோம்.

மர்ஹூம் எம்.எம்.எம். உவைஸ் எம்.ஏ.

1953 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் கணக்கீட்டின் படி இலங்கையில் 468146 இலங்கைச் சோனகரும் 28,736 மலாயரும் வாழ்ந்தனர். மொத்தம் 541800 இலங்கை முஸ்லிம்கள் வாழ்ந்தனர். இப்புள்ளி மதிப்பீட்டை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது, இலங்கைச் சோனகருள் மூன்றில் ஒரு பங்கினர் தமிழ் மொழி பெரும்பான்மையாக வழங்கும் பிரதேசங்களிலும் மூன்றில் இரண்டு பங்கினர் சிங்களப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மலாயருள் நூற்றுக்கு 6 வீதமானோர் தமிழ் மொழி வழங்கும் பிரதேசங்களிலும், ஏனையோர் சிங்கள மொழி பெரும்பாலும் வழக்கில் உள்ள பகுதிகளிலும் வசிக்கின்றனர். சிங்களம் பெரும்பான்மையாக வழங்கும் பிரதேசங்களில் வாழ்ந்த போதிலும் அவர்கள் தமிழ் மொழியையே தத்தம் வீட்டு மொழியாக வழங்கி வருகின்றனர்.

முஸ்லிம்களின் மொழி தமிழ்.. ஈழத்து முஸ்லிம்களின் ஆதி மூதாதையார் அராபியர் ஆவர். இது இவ்வாறெனின் அவர்களின் தாய் மொழி அரபு மொழியாக இருந்திருக்க வேண்டுமல்லவா? ஆனால், அரபு மொழியை வீட்டு மொழியாக உபயோகிக்கும் இலங்கை முஸ்லிம்களின் வீடுகளில் காண்பது அரிதிலும் அரிதாகும். மேலே கூறியது போல் முஸ்லிம்களுள் பெரும் பகுதியினர் சிங்களப் பகுதிகளில் வாழ்கின்றனர். எனினும், சிங்களத்தை வீட்டு மொழியாகவோ, தாய் மொழியாகவோ கொண்ட முஸ்லிம்கள் இல்லையென்றே கூறி வரலாம். இலங்கை சோனகர்களின் சமய மொழி அரபாகும். அரபுக்கு அடுத்தபடியாக தமிழ் கருதப்படுகின்றது. வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் ஜும்ஆத் தொழுகையுடன் சம்பந்தப்பட்ட குத்பா பிரசங்கம் அரபியிலும், தமிழிலுமே நடைபெறுகின்றது. அத்தகையப் பிரசங்கம் சிங்களத்தில் நடைபெறும் என்பதை நினைக்கவும் முடியாது. அம்மட்டன்று, முஸ்லிம் பள்ளிவாசல்களில் அரபு, தமிழ் அல்லாத மொழிகளை (குறிப்பாகச் சிங்கள மொழியை) உபயோகிப்பது பாவம் உண்டாகும் காரியமாகும் என்று கருதுபவர்கள் முஸ்லிம் சமூகத்தினரிடையே இன்றும் இருக்கிறார்கள். முஸ்லிம்களின் வாழ்க்கையிலே அரபு மொழிக்கு முதலிடம் அளிப்படுகின்றது. முஸ்லிம்களின் அடுத்த மொழி தமிழ் எனக் கருதப்படுகிறது. தமிழ் மொழியிலேயே இஸ்லாமிய அடிப்படையில் எழுந்த பல நூல்களைக் காணலாம். தமிழ் மொழி வளாச்சியில் முஸ்லிம் மக்கள் பெரும் தொண்டு புரிந்துள்ளனர். தென்னிந்தியாவில் வாழும் முஸ்லிம் புலவாகளுடன் தமிழ் தொண்டு நின்றுவிடவில்லை. தமிழ் பாவலர்கள், புரவலர்கள், அறிஞர்கள் பலர் ஈழத்தில் வாழ்ந்துள்ளனர். தமிழுக்குத் தனிப் பெரும் தொண்டு புரிந்துள்ளனர். கவிதைகள் புனைந்துள்ளனர். வசன நூல்கள் இயற்றியுள்ளனர். மார்க்கக் கிரந்தங்களை எழுதியுள்ளனர். இசையோடு சம்பந்தப்பட்ட பல பாடல்களை யாத்துள்ளனர். கல்வித் துறையில் பணி புரிந்துள்ளனர். புலவாகளுக்குப் பொருள் உதவி புரிந்து வள்ளல்கள் எனறு மதிக்கப்பட்டுள்ளனர்.

அச்சாரம்

எழுதுவது... லைலா அஷ்ராவி

முஸ்லிம்களின் தற்பாதுகாப்பு முனைவுகள், மிகைப்படுத்தலின் விபரீதம்.

வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களின் இருப்பு பல்வேறு விதமாக பல்வேறு தரப்புக்களாலும் கேள்விக்குள்ளாக்கப்பட்ட வேளை, பல்வேறு தனிநபர் சார் குழுக்கள் தற்காப்பு முனைவுகளை மேற்கொண்டன. என்பது பொதுவாக எல்லோரும் அறிந்த யதார்த்தமாகும்.

அப்போதும் இப்போதும் தற்காப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் யாராலுமே ஒரு தீர்க்கமான பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு வர முடியவில்லை. இதன் காரணமாகத்தானோ என்னவோ, மறைந்த எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள் இராணுவத்துள் தனி யான முஸ்லிம் படைப்பிரிவு என்ற கோரிக்கையை முன்வைத்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. உண்மை தான். யுத்த காலத்தில் மட்டுமல்ல அமைதிக்காலத்திலும் முஸ்லிம்களின் தற்பாதுகாப்புக்காக இதுபோன்ற ஒரு பாதுகாப்பு ஏற்பாடு இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என மூதூர் - வாழைச்சேனைத் தாக்குதல்களை வைத்து நான் இப்போது அடிக்கடி யோசிக்கிறேன்.

பாதுகாப்புப் படையின் கையாலாகத் தனங்களை நாம் மூதூர், வாழைச்சேனை, மாவனல்லை, புத்தளம் எனப்பல இடங்களில் கண்டு வந்திருக்கின்றோம். அதன்போதெல்லாம் நாம் எம் பாதுகாப்பிற்கு யாரையும் நம்பிப் பயனில்லை என்று கண்டதோடு தற்பாதுகாப்புச் செயற்பாடுகளிலும் குழுக்குழுவாக இயங்கினோம். என்றாலும் நெறிப்படுத்தப்படாததும், வெறுமனே உணர்ச்சிகளை மட்டும் மூலதனமாக்கியதுமான இதுபோன்ற குழுக்களின் செயற்பாடுகள் எமக்குப் பாதுகாப்பை தருவதை விட மேலும் மேலும் அச்சத்தையே தந்து கொண்டிருக்கின்றன. இதற்கான பிரதான காரணங்கள் வழமைபோல எம் சமூகத்திற்குப் பலவீனங்கள்தான் எனப் பொதுவாகச் சொல்லிவிடலாம்.

சர்வதேச மட்டத்தில் இஸ்லாமும், முஸ்லிம்களும் எவ்வாறு தவறாக வெளிக்காட்டப்படுகிறார்களோ, அதுபோன்றதொரு வெளிக்காட்டலை இலங்கை முஸ்லிம்களுக்கும் செய்துவிடத்துடிப்பதில் எத்தனையோ சக்திகள் இயங்கிக் கொண்டிருப்பதை ஓரளவு பொதுவாக நீங்கள் புரிந்திருப்பீர்கள். இவ்வாறான சக்திகளை எந்தளவு நாம் இனங் காண்கின்றோம் என்பதும் இன்னொரு கேள்வி. இந்தக்குறிப்பில் நான், இதுதொடர்பில் அவதானித்த மிகைப்படுத்தப்பட்டதும், எங்களை இருதரப்பும் இலக்கு வைக்கக் கூடியதுமான சில ஊடக அறிக்கைகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மு. காவை ஒரு ஜிஹாத் அமைப்பாகவும், அஷ்ரஃபை இன்னொரு பிரபாகரனாகவும் காட்ட எடுக்கப்பட்ட சில வருடங்களுக்கு முந்திய நிகழ்வுகள், செய்திகளையெல்லாம் நினைவு கூர்ந்தும் கொள்ளுங்கள்.)

சில மாதங்களுக்கு முன்னால் (18-11-2002) "லங்காதீப" வார இதழ் கிழக்கில் இயங்கும் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் பற்றி முன்பக்கச் செய்தி வெளியிட்டிருந்தது. அது தன் செய்திக்கு ஆதாரமாக புலனாய்வுத்தகவல்கள் என்றும் சொல்லியிருந்தது. இது எம்மை ஒரு விதமாக அந்நியப்படுத்தி, மற்றச் சமூகங்களின் சந்தேகப் பார்வைக்கு உட்படுத்தியது. இது எம்மால் எடுத்த எடுப்பில் நிராகரிக்க முடியாதளவுக்கு வாயடைக்க வைத்தன. சிலர் இவ்விடயம் பத்திரிகையில் வந்ததில் புளகாங்கிதமும் அடைந்தார்கள். ஆனால் அந்தச் செய்தியும் எமக்கெதிரான சிங்கள - தமிழ் தாக்குதல்களுக்கு மறைமுகக் காரணியாய் இருந்து கொண்டு வருகின்றதென்பதை நாங்கள் இன்னும் சாணக்கியமாக உணரவில்லை.

இந்த சிங்களப் பத்திரிகை செய்தியைத் தொடர்ந்து தமிழர் ஊடகங்களும் தங்கள் பாட்டுக்கு அள்ளிவைக்கத் தொடங்கின. இதில் பிரதானமானது ஐந்து நாடுகளின் பதிப்பாக வெளிவரும். ஈழ நாடு பத்திரிகையாலும் இதன் ஜனவரி 03-09-2002 இதழில் "மட்டக்களப்பு" இளஞ்செழியன், "போராடத் தயார் நிலையில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள்" என்ற தலைப்பில் முழுப்பக்கக் கட்டுரை எழுதி ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் அடக்கு வைத்தார். இவரின் கட்டுரை பின் வரும் சிறுதலைப்புக்களைக் கொண்டிருந்தன.

* ஜிஹாத்
* ஆயுதப்பயிற்சி
* ஸ்ரீ லங்கா இராணுவத்தில் உள்ள முஸ்லிம்களும் உதவி
* ஸ்ரீ லங்கா புலனாய்வுப் பிரிவின் அறிக்கை
* பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபம்.

அந்தக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு சில பகுதிகளைத் தருகிறேன்.

"முஸ்லிம் பிரதேசங்களில் இயங்கி வருகின்ற இந்த ஆயுதக்குழுக்கள் பற்றிய விபரங்களை பெற்றுக் கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே தமது தகவல் தேடும் பணியை முடுக்கிவிட்டுள்ளார்கள்."

"பயிற்சிகள் வழங்கும் அமைப்புக்கள் பற்றியும், அவர்களது பின்னணி பற்றியும், பயிற்சி பெறுவோர் பற்றியும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் மும்முரமாகத் தகவல் திரட்டி வருகின்றனர்.

"ஸ்ரீ லங்காவின் தேசிய இரகசிய தகவல் பிரிவு அரசாங்கத்திடம் ஒப்படைத்த அந்த இரகசிய அறிக்கையைப் பெற்றுக் கொள்வதில் அமெரிக்க மற்றும் இஷ்ரேலிய தூதரக அதிகாரிகள் அதிக ஆர்வம் காண்பித்ததாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன."

"முஸ்லிம்கள் தமக்கென்று ஓர் ஆயுதப்படையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று மு. கா. பாராளுமன்ற உறுப்பினர்களான அன்வர் இஸ்மாயில், ஹரீஸ், அதாவுல்லாஹ், போன்றவர்கள் பகிரங்கமாகவே உரையாற்றி வருகின்றனர்."

இதுபோக அண்மைய லங்காதீப (மே 04-2003) பத்திரிகையும் மூதூரிலுள்ள சில சிங்களக் குடும்பங்களின் பேட்டிக்கட்டுரையை "முன்னர் புலிகள் மாத்திரம் இருந்தனர். இப்போது அதையும் மிஞ்சியவர்கள் இருக்கின்றார்கள்." என்று வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியுள்ளது.

இதைவிடவும் இலங்கை முஸ்லிம்களையும் உள்ளிழுத்த இன்னொரு அதிர்ச்சி தரும் அறிக்கையை இந்திய உள் துறை சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை தென்னிந்திய முஸ்லிம்கள் பரந்த நோக்கம் கொண்ட Muslim Defence Force என்ற அமைப்பை உருவாக்கியிருப்பதாக குறிப்பிட்டுள்ளதோடு, அதன் கிளைக்குழு முக்கியஸ்தர்கள் இலங்கையில் சந்திக்கவிருந்ததாகவும், இலங்கையின் முக்கிய தஃவா அமைப்பொன்று இந்த MDF க்காக ஏற்கனவே முஸ்லிம் இளைஞர்களுக்கு பயிற்சி கொடுக்கத் தொடங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறது.

ஆக மொத்தத்தில் முஸ்லிம்களின் அடிப்படைப் பாதுகாப்பை பற்றிய சிந்தனைகள், செயற்பாடுகள் கூட எந்தளவு விபரீதமாக்கப்பட்டு முடக்கப்படுகின்றன என்பதற்கு மேலுள்ளவை உதாரணங்கள் மட்டுமல்ல, நமக்கான படிப்பினைகளும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனம்

மௌலவியா அகீலா அமூன், கொழும்பு 12

இஸ்லாம் மனித வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கிய ஒரு பரிபூரணமானதொரு வாழ்க்கை நெறியாகும்.

மனித இனவிருத்தியினதும், சீரான சமூக உருவாக்கத்தினதும் அடித்தளமாய் அமைவதே திருமணமாகும். இதன் மூலம் மனித உணர்வுகள் நெறிப்படுத்தப்படுகிறது. குறித்த வயதெல்லைக்கப்பால் வாழ்வின் சகல விடயங்களிலும் தனக்கான தோர் மிகச் சிறந்த தோழமையை தேடித் தரும் ஒரு புனித பந்தமாக இந்த திருமண உறவு மதிக்கப்படுகிறது. புனிதம் மிக்க திருமணம் இன்று மனித சமூகத்தின் அழிவுக்கு வித்திட்டு வருகிறது என்றால் சிலவேளை நீங்கள் நகைக்கக் கூடும். திருமணம் எவ்வாறு சமூக அழிவுக்குவித்திட முடியும் என எதிர் வினா எழுப்பவும் முடியும். புதிர் போடவில்லை. இன்னும் இலங்கை,



இந்தியா போன்ற நாடுகளில் கடந்த சில தசாப்தங்களாக பரவலாக காணப்பட்ட ஒரு மிகப் பிரதானமான நோய் இதுவாகும். இதனை சீதனம், கைக்கூலி, வரதட்சணை என்ற முப்பெரும் பெயர்களால் சில கொடூர நெஞ்சம் படைத்த ஆண் மடையர்களும், அவர்களின் தாய்மாக்களும் செல்லமாய் அழைக்கின்றனர்.

நீங்கள் மணமுடிக்கும் பெண்களுக்கு அவர்களுடைய மஹ்ரூக்களை மகிழ்வோடு கொடுத்து விடுங்கள் (4:44) என்ற இந்த இறைவாக்கு முதுகெலும்புள்ள ஒவ்வொரு வாலிபர்களுக்குந்தான் மணம் முடிக்கும் பெண்ணுக்கு மஹ்ரா கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

உலகிலுள்ள பொருள்களிலெல்லாம் சிறப்பான, விஷேடம் மிக்க பொருள், சாலி ஹான மனைவியே என்பது நபி மொழி. சாலிஹான மனைவி கிடைப்பதை விட வேறெதுவும் சிறந்தது கிடையாது என்பது கலீபா உமர் (ரலி) அவர்களின் கருத்தாகும். ஆகவே வாழ்வில் சுபீட்சம் நிலைக்க சாலிஹான மனைவியை தெரிவு செய்வது அவசியம் என்ற கடப்பாட்டுக்கு மத்தியில் காசுக்கும், பொருளுக்கும் ஆசைப்பட்டு அதனை மாத்திரமே தனது முதற்தோவாக்கி கொண்டு பெண்ணை தெரிவு செய்யும் ஆண்களை என்னவென்பது.

நான் உன்னை கைபிடித்தேன் கால மெல்லாம் கண்கலங்காது உன்னை காப்பாற்றுவேன் என சூறா வேண்டிய ஆண் சமூகம். நான் உன்னிடம் கை நீட்டி வாங் கிவிட்டேன் காலமெல்லாம் கட்டுப்பட்டு நடப்பேன். பொட்டிப் பாம்பாய் அடங்கிக்கி டப்பேன் என்று மறைமுக உத்தரவா தத்தை தனது மனைவிக்கு வழங்கும் நிலமை இன்னும் பரவலாகக் காணப்படுகிறது.

இன்று சீதனம் என்ற பெயரில் ஆண்கள் திருமணச் சந்தையில் ஹோ... ஹோ.. என விலை போகிறார்கள். டொக்டர் இன் ஜினியர், ஆசிரியன், மௌலவி... இப்படி தொழில் ரீதியாவும் பட்டம் ரீதியாகவும் ஆண்கள் விலை போவது சகஜமாகிவிட்டது. மறுமையில் நாம் இறை சன்னிதானத்தில் விசாரணைக் குற்படுத்தப்படுவோமே என்று அச்சங் கொள்ளாத அளவுக்கு உலக ஆசைகள் அவர்களின் கண்களை மறைத்துவிட்டன.

ஒரு பெண்ணை திருமணம் முடித்துக் கொடுப்பது இலேசான விடயமல்ல. ஊணின்றி, உறக்கமின்றி மாடாக உழைத்து வாயை கட்டி வயிற்றைக் கட்டி தன் மகளின் நிலையை நினைத்து நினைத்து நொந்து போய் எலும்பும் தோலுமாய் உருக்குலைந்து போய்விட்ட பெற்றோர்கள் ஏராளம். ஆண் பிள்ளை எப்படி இருந்தாலும், அவன் ஆண் பிள்ளையாய் இருப்பதே எல்லாத் தகுதிக்கும் உரித்தானவனாகி விடுகிறான். ஆனால், பெண்ணைப் பொரு த்தவரை சீதனத் தொகையை அதிகமாக பெறவேண்டும் என்ற நோக்கில் அவனிலுள்ள குறைகள் துருவித் துருவி ஆராயப்பட்டு முன்மொழியப்படும் தூர்பாக்கிய நிலையும் இன்று காணப்படுகிறது.

ஆணாக பிறந்தால் பெண் வீட்டாரை கறப்பதில் குறியாக நிற்பது எந்த வகையில் நியாயம்? இந்த சீதனப் பிசாசின்வஞ்சக் கரங்களில் சிக்குண்டு மடிந்த பாத்திமாக்கள், லட்சுமிகள், சோமாவதிகள் எத்தனை பேர்? கைக்கூலி என்ற கொடிய கரங்களால் கசக்கப்பட்ட கன்னி மலர்கள் எத்தனை பேர்? சீர் கொடுக்க முடியாமல் சீர்கெட்டு சீரழிந்து போன குடும்பங்கள் எத்தனை? பெண்ணை பெற்றவன் அதனால் படும் அவஸ்தை பாரியது. வீடு, பணம், வாகனம் என்று மாப்பிள்ளையை விலைக்கு வாங்க வெளிநாடுகளில் கலியாணக் கனவுகள் களைந்து அல்லலுறும் குமரிப் பெண்கள் எத்தனையோ. நாம் பெண்ணாக பிறந்தது எமக்கு கிடைத்த சாபக்கேடா என்று அடுப்பங்கரைக்குள் கண்ணீர் வடிக்கும் சகோதரிகள் எத்தனையோ தாவணிக் கனவுடனும், உள்ளம் நிறைந்த ஆசையுடனும் ஜன்னல் கம்பிகளில் தலைசாய்த்தும், தலையணையை நித்தமும் நனைக்கும் குமரிகள் எத்தனை பேர். சிந்திக்க வேண்டும் விடையிலாத வினாயில்லை. இவ்வினாக்களுக்கான விடை இளைஞர்கள் கைகளில் இருக்கின்றது என்பதை மறந்து விடக்கூடாது.

இந்நிலையில் தனது குடும்பமோ, சமூகமோ எனனைக் கவனியாது விட்டு விட்டது என்ற விரக்தி நிலைக்குட்பட்டு நடத்தை கெட்ட செயல்களில் ஈடுபட்டால் இதற்கு காரணம் யார்? அவளா? குடும்பமா? சமூகமா? ஏனைய சகல மதங்கள் கொள்கைகள் என்பவற்றை விட மனித வாழ்வுக்கு ஏற்ற இணையற்ற மதம் இஸ்லாம் ஒன்றே என மேடைகளில் இடி முழங்கும், கொட்டை கொட்டையான எழுத்துக்களில் தெவிட்டாத இனிய இலக்கிய பாணியில் வார்த்தைகளை எழுத்துருப்படுத்தும் எமது சமூக புத்திஜீவிகள், மார்க்க அறிஞர்கள், மௌவிமாக்கள் இவர்களின் நிலை குறித்து நாம் ஒன்றும் புதிதாக கூறுவதற்கில்லை. பட்டியல்படுத்தினால் விதிவிலக்குகள் என்ற பகுதியில் மிகச் சொற்ப தொகையினரே உள்ளடங்குவா. சமூகத்தின் உயிர் நாடிகளின் நிலையே இவ்வாறென் றால்...? வெளிநாடுகளுக்கு செல்லும் எமது குமரிப் பெண்கள் விரும்பியோ விரும்பாமலோ பல பாவச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இதற்கு யார் பொறுப்பு? தன் பெண் மக்களை கரை சேர்க்க தாய்மாக்கள் வெளிநாடு செல்வதால் சீரழிந்து போன குடும்பங்கள் ஏராளம். இதற்கு யார் பொறுப்பு?

வாலிபர்களே! சீதனத்தால் பாதிக்கப்படுவது குமரிகள் மாத்திரமல்ல; ஒரு சகோதரனாக உங்கள் நிலையை கற்பனை செய்து பாருங்கள். அந்தோ பரிதாபம். அதனால் பாதிக்கப்படுவது நீங்களும்தான் என்பதை உணர்ந்து கொள்வீர்கள். எனது இந்த ஆய்வு வசதிபடைத்த குடும்பங்களைப் பற்றி ஆராயவில்லை. காரணம் இதனால் பாதிக்கப்படுவது அதிகம் நடுத்தரக் குடும்பங்கள்தான் இந்நிலைமை இன்று விஸ்வரூபமெடுத்து பல்கிப் பெருகி வருவதை எம்மால் கண்டு கொள்ள முடியும். இந்நிலமை எமது சமூகத்தின் பின்னடைவுக்கு ஏதுவாக அமைந்து விடு கிறது. பல கலவிமான்களுக்கும் திறமையின் பொக்கிஷங்களுக்கும் தமது கல்வியை தொடாந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத ஒரு பாரிய தடைக்கல்லாக அமைந்து விடுகிறது. இதனால் அறிவியல் ரீதியிலான வறுமையுற்ற சமூகமாக மாறி வாத்தக காணப்பட முடியும்.

வேடிக்கைக்குரிய விடயம் யாதெனில் ஒரு பெண்ணே, இன்னுமொரு பெண்ணின் வாழ்வை படுகுழிக்குள் தள்ளிவிடுவதாகும். இத்தகைய கல்யாணம் என்ற சந்தையில் விலைபோகும் ஆண்களாலும், பேரம் பேசும் தாய்மார்களாலும் கருவறைக்குள் கருவறுக்கப்படுகின்ற சிசுக்கள் ஏராளம். அன்றைய ஜாஹிலிய்ய சமூகம் பிறந்த பின் பெண் குழந்தைகளை புதைத்தது. நவீன எமது சமூகமோ கருவறைக் குள்ளேயே புதைத்தது விடுகிறது.

திருமணத்தின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக திகழ்வது மஹ்ரா. இதற்கு மாறாக வரதட்சணை கொடுத்து ஆண்களை மணக்க வேண்டியுள்ளது. இன்று ஆண், பெண்ணை முடிக்கிறான் என்றால் பொதுப்பதம் மாறி பெண் ஆணை முடிக்கின்றான் என்ற புதுப்பதம் தோற்றம் பெற்றுள்ளது. அந்த புதுப்பதம் வாழ்வில் ஆண் அடிமையாகவும், பெண் எஜமானியாகவும் கருதப்படுகின்றாள். பிரச்சினை தோன்றும் பட்சத்தில் ஏசப்படுவதும். ஏறி மிதிக்கப்படுவதும் பெண்களை ஆள வேண்டிய ஆண் சமுதாயமே.

ஆண்களே, பெண்களின் பொறுப் புதாரிகள். அவர்களுக்குரிய வாழ்வாதாரங்களை வழங்க வேண்டியவர்கள் என்ற இறைமறை வசனத்துக்கு மாறாக நடக்கும் இந்த வாலிபர்களின் வாழ்வு எவ்வாறு சிறப்பாக அமைய முடியும். "தனது மனைவிக்கு அடிமைப்பட்ட மனிதன் நாசமாகட்டும்" என்ற நபி மொழி எவ்வாறு பொய்யாக முடியும். இந்த முதுகெலும்பற்ற, வன் நெஞ்ச செயல்களால் உயிர்துறந்த பெண்கள் ஏராளம். திருமணத்துக்கு முன் னால் சீதனம் கொடுக்க முடியாது என்ற காரணத்தாலும், திருமணத்தின் பின்னா கொடுக்கப்படாததனால் அல்லது பேசப்பட்ட தொகையை விட குறைவாக கொடுக்கப்பட்டதனால் சித்திரவதைக்குட்பட்டு தற்கொலை செய்து கொண்ட அல்லது கொலை செய்யப்பட்ட பெண்கள் ஏராளம். இந்த தீமைக்கு காரணமாக அமைந்த எவரும் இறை பிடியிலிருந்து தப்பிக்கவே முடியாது.

"நிச்சயமாக உம்முடைய இறைவனின் பிடி மிக்க கடுமையாகும்." (85:12)

"மறுபுறம் பாதிக்கப்பட்டவர்களின் பிராத்தனையை பயந்து கொள்ளுங்கள். ஏனெனில் அல்லாஹ்க்கும் அவருக்கும் இடையில் எவ்வித திரையுமில்லை" (புகாரி)

வாலிபர்களே பொதுவாகவே இல்லற வாழ்வில் அதிக இழப்புக்களை சந்திப்பவள் பெண்ணே. இதனாலேயோ என்னவோ இஸ்லாம் மஹ்ரா கொடுத்து திருமணம் முடிக்குமாறு ஆண்களை பணிக்கிறது. பெண்களின் உரிமையான இந்தத் தொகையை வரையறுக்கும் உரிமை திருமணம் முடிக்கும் பெண்களுக்கு மட்டும் உரித்தானதொன்றாகும். இதில் தலையிட்டு கூட்டவோ, குறைக்கவோ முற்படும் அதிகாரம் எவருக்கும் கிடையாது என்பதனை உமா (ரலி) அவர்களின் காலத்தில் இடம்பெற்ற சம்பவத்தின் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். இஸ்லாமிய சட்டம் இவ்வாறிருக்க ஆண்களால் எவ்வாறு தத்தமது நிலைமைகளுக்கேற்ப இஸ்லாத்தில் அடங்படையே இல்லாத சீதனத் தொகையை வரையறுக்க முடியும் என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். மஹ்ராக ரொக்கமும், சீதனமாக இலட்சமும் பரிமாறும் கலாசாரம் மாறவேண்டும். மாறாக வாரி வழங்கும் நிலை உருவாக வேண்டும். அதற்காக தனிமனித ரீதியாகவும், சமூகரீதியாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

வாலிபர்களே சமூகத்தின் அடிநாதமாய் திகழும் உங்களின் கரங்களிலேயே வருங் கால சமூகத்தின் சுபீட்சம், விடியல் என்பன தங்கியுள்ளன.

விழித்தெழுங்கள்... விரைந்து செல்லுங்கள்

விடியல் படைக்கும் வாரிசுகள் நீங்கள்.

பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

குறுநாவல் 2

-என்.ஏ.தீரன்-

அத்தியாயம் 1

மேடையில் நிறைந்த ஊர்ப்பிரமுகர்கள் மத்தியில், முத்து முஹம்மது செல்லாக்கா சாகி மேடையிலிருந்து இறக்கிவிடப்பட்டான். எனினும் மேடையை ஒட்டியபடியே தலைவரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தலைவர் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தை நோக்கி. எழுந்து நின்னு கையசைத்தார். அத்தனை ஜனங்களும் "அல்லாஹூ அக்பர்" என்று முழங்கி அமைதியாயினர். தலைவர் முன்னணியிலிருந்த விஷேட கதிரையில் அமர்ந்தார்.

உடன் பள்ளித்தலைவர் செய்லான் ஹாஜியார் பேச எழுந்தார்.

"பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்! அன்பார்ந்த பொது மக்களே இலங்கை இஸ்லாமியக்கட்சியின் தேசியத்தலைவரும். நமது கண்ணின் மணியுமாகிய ஆலிஜனாப் எச்.எம்.ராவுத்தர் எம்.பி. அவர்களே மற்றும் இங்கு வீற்றிருக்கும்...?

வீற்றிருந்த 15 பேரையும் அவர்களே.. அவர்களே... என்று 16 தடவைகள் விழித்து முடித்தபின் வரவேற்புரையை ஆரம்பிக்க உடன், தலைவர் அவரை விரல் சொடுக்கி அருகிலழைத்து காதினுள் ஏதோ சொன்னார்...

செய்லான் ஹாஜியார் உடன் பரபரப்பாகி -

"தேசியத் தலைவர் கல்முனைக்கும் ஒரு கூட்டத்திறுகுச் செல்ல இருப்பதால் உடன் தலைவர் அவர்களைப் பேச அழைக்கின்றேன்" என்று மிகுந்த ஏமாற்றத்துடன் அறிவித்துவிட்டு அமர்ந்தார்.

தலைவர் எழுந்து முன்னால் வந்தார். ஒலிபெருக்கியருகே வந்ததும், ஜனங்கள் மறுபடி உத்வேகம் கொண்டு-

"நாரே தக்பீர்!"

"அல்லாஹூ அக்பர்!"

என்று கத்தினர். முண்டியடித்து முன்னால் வந்தனர். முத்து முஹம்மதின் இளைஞர் அணி மேடையை, கும்பல் நெருங்காது கவசம்போல் திடமாக நின்றது. தலைவர் மக்களை தனது வசீகரப் புன்னகையுடன் பார்த்து கையசைத்து அமைதியாக்கி அமரவைத்தார். கூட்டம் உடன் அமைதியாயிற்று. தலைவரின் கம்பீரமான வசீகரக்குரல் ஒலிக்க ஆரம்பித்தது. ஜனக்கூட்டம் மந்திரம் போட்டாற்போல் கட்டுண்டு கிடக்க, தலைவர் கணீரென்று ஆரம்பித்தார். தேர்ந்தெடுத்த சொற்களை அடுக்கி அடுக்கி ஆறுதலாகவும் ஆனால் உறுதியுடனும் பேசினர். பள்ளிமுனைக் கிராமச் சொல் வழக்கினை இடையிடையே அற்புதமாகக் கையாண்டு பேசினார். கனங்கள் ஓட்டுமொத்தமாக வாய் பிளந்திருந்தனர்.

இந்தப் பேரினவாத அடிவருடிகள் முஸ்லிம் சமூகத்தை ஒருபோதும் காப்பாற்ற மாட்டாது. சிங்களக் கட்சிகளின் கால் தூசியாக ஒட்டிக்கிடக்கும் முக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களே... இந்தப் பள்ளிமுனைக் கர்பலாக் களத்திலிருந்து, உங்களுக்கு இஸ்லாமியக் கட்சித் தலைமைத்துவம் பகிரங்கச் சவால் விடுக்கிறது. அடுத்த மாதம் நடைபெறவுள்ள பிரதேச சபைத் தேர்தலில் இம்மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச சபைகளிலும் ஒன்றையாவது உங்கள் ஐ.என்.பி.யால் வெல்ல முடியாது.

"நாரே தக்பீர் .." செய்லான் ஹாஜியார் எடுத்துக் கொடுக்க -

"அல்லாஹூ அக்பர்!" கூட்டம் அதிர்ந்தது. தலைவர் தொடர்ந்தார்.-

"அது மட்டுமல்ல இந்த ஆறு பிரதேச சபையிலும் நமது கட்சி ஒன்றிலாவது தோற்றால் கட்சித் தலைமைத்துவம். தனது எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்து தூக்கி எறிந்துவிட்டு, மக்களோடு மக்க ளாக களத்தில் நின்று இஸ்லாமிய வழியில் போராடவும் தயாராக இருக்கிறது."

உடன் மைதானம் அதிர காரகோஷமும் விண்ணதிர தக்பீர் முழக்கமும் பிளந்து கட்டின.

"இன்ஷா அல்லாஹ். ஆறு பிரதேச சபைகளையும் நமது கட்சி கைப்பற்றுவது முக்கியமல்ல... முக்கியமாக எனது இரண் டாவது தாயகமான எனது பள்ளிமுனை மக்களுக்கு. இந்த வயற்சேனைப் பிரதேச சபையின் வெற்றியை அடுத்து அமையப் போகும் சபைக்கு சேர்மனாக, தவிசாள ராக ஒரு பள்ளிமுனை மகனே அமர்ந் திருப்பார். தலைமைத்துவம் இதில் உறுதி யாக இருக்கிறது...

தலைவரின் வாக்குறுதியால் மெய்சிலிர்த்த சனங்கள் மறுபடி மறுபடி தக்பீர் முழங் கினர். முத்து முஹம்மது உணர்ச்சிப் பிளம்பாகி கைகள் உயர்த்தி "அல்லாஹூ அக்பர்" என்று முழங்கினான்.

மேலும் பல அரசியல் அதிரடித் துணுக்குகளையும் அள்ளி வீசிய தலைவர் தன் பேச்சை முடித்தார். தொடர்ச்சியாக இரண்டு மணிநேரம் பேசியிருந்தார். தலைவர் அமர்ந்ததும் உடன் பள்ளித்தலைவர் செய்லான் ஹாஜியார் ஒலிவாங்கியை கைப்பற்றி-

"அடுத்ததாக, முக்கியமாக தமது தலைவரைப்பற்றிய கீதம் இசைப்பவர் "பள்ளிக்குயில் பஸீல்" அவர்களை இங்கு பாட வருமாறு" அழைக்க முன்பே மேடையில் தீடீரென உற்பத்தியான கவிஞர் பள்ளிக்குயில் பஸீல் "போவோமா ஊர் கோலம்" என்பதை சுலபமாக இசைதிருடி "போடுவோமா வோட்டெல்லாம்..." என்று கானமழை பொழிய ஆரம்பித்தார். மேடையில் தலைவரின் காதுகளில், மாறி மாறி செய்லான் ஹாஜியாரும், தாடி மாஸ்டரும், ப.நோ.கூ.ச. தலைவரும் ஊர் வம்புகள் பொழிந்தனர்.

பள்ளிக் குயிலின் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த முத்து முஹம்மது தற் செயலான உந்துதலில் பெண்கள் பக்கம் பார்த்தான். மைமுனாவுக்கும், தம்பி யாஸினுக்கும் சப்புச் சுல்தான் ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுப்பதையும், மைமுனா அதை மறுப்பதையும் கண்டான். தீடீரென ஆத்திரம் பொங்கிய முத்து முஹம்மது, சப்புச் சுல்தானை அறையும் ஆவேசமாக கூட்டத்துள் புகுந்து விலக்கி இடிபட்டு நகர்ந்து மைமுனாவிடம் நெருங்கினான்.

மைமுனாவும் தம்பி யாஸீனும் மாமியும் நின்றிருந்தனர். சப்புச் சுல்தானைக் காணவில்லை. மைமுனாவிடம் நெருங்கினான். பள்ளிக்குயில் உச்சஸ்தாயியில் கூவிக் கொண்டிருந்தது. மைமுனா முத்து முஹம்மதுவை அன்புடனும் வியப்புடனும் பார்த்து முறுவலித்தாள்.

உடனே மாமி -

"முத்தும்மது மைக்கல பேசினயா ? அநாவஸ்யமாய் கேட்டாள்.

முத்து முஹம்மது கோபமாக, நேராக மைமுனாவிடம் -

"ஐஸ்கிறீம் வாங்கித்தந்த ஆரு? சப்பு எங்க?"

"அவன் சுல்தான் தம்பிக்கு வாங்கிக் கொடுத்த!" என்றாள் மாமி.

"மைமுனா! அந்த நாய்க்கிட்ட ஒண்டும் வாங்காத. ஞ்சப்பாரு நான் வாங்கித்தாரன்..." காசைக்காட்டிய முத்து முஹம்மது யாஸீனை உறுக்கிப்பார்த்தான். உடனே யாஸீனின் செவியைத்திருகினான்.

"என்டம்மோவ்.. நோகுது லாத்தோவ்.?"

"அவன் சின்னப்புள்ள! திங்கட்டும் உடு ங்க" என்ற மைமுனா உடன் தன் கையி லிருந்ததை கீழே போட்டுவிட்டாள். இதனால் மனம் குளிர்ந்த முத்து முகம்மது. உடன் இருபது ரூபா எடுத்து மைமுனாவிடம் திணித்து -

"இதுக்க நீ வாங்கு! வாவுசீஸ் வாங்கு"

திடீரென ஜனக்கூட்டம் "அல்லாஹூ அக்பர்" என்று முழங்கவே முத்து முஹம்மது மறுபடி திரும்பி மேடைக்கு ஓடினான். தலைவர் உள்ளூர் பிரமுகர்களின் கைகளாகு மற்றும் தோளோடு தழுவுதல்களை தவிர்த்து அவசரமாக மேடையை விட்டு மக்களுக்கு கையசைத்து இறங்கிக் கொண்டிருந்தார்.

அவரை ஒரு தடவையாவது தொட்டுப் பார்த்துவிடும் ஆர்வத்தில் முண்டியடித்த இளைஞர் அணியை அதிரடிப்படை தடுத் தது. தலைவர் அதிரடிப்படையைப் புறக்க ணித்து சடுதியாகப் பெண்கள் பகுதியை நோக்கி நடந்தார். உடன் அத்தனை பெண்களும் சிரிப்பும் மகிழ்வுமாய் வெட்கப் பட்டு முக்காட்டையும், முந்தானைகளை யும் சரி செய்து கும்பலாக எழுந்தனர். பின்னணியில் கோரசாக குரவை ஒலித்தது.

தலைவர் பெண்களை நெருங்கி

"ஞா.. ராத்தா... எப்டி... தங்கச்சி... மாமி சுகமா?"

என்று எழுமாறாக உறவுகளை அழைத்து விசாரித்து உடன் மேடை உச்சியிலிருந்த பெரிய பிறைச் சின்னத்தைக்காட்டி -

"உம்மா. இதப்பாருங்க! பிறை! "தலப் பொற!!" என்றார்.

பெண்கள் நாணத்தை விட்டு

"போடுவம் கட்டாயம் போடுவம்" என்றனர். தலைவர் மிகத்திருப்தியுடன் திரும்பி, பிரமுகர்கள் புடை சூழ தனது வாகனத்தை நோக்கிச் சென்றார்.

மக்களின் தக்பீர் முழக்கம் ஒலிக்க, முன்றே மணி நேரத்தில் பள்ளிமுனைக் கிராமத்தின் சுமார் ஐயாயிரம் வாக்குகளையும் கவர்ந்துகொண்டு தலைவர் "டபிள் கப்" பில் ஏறி அதிரடிப்படையுடன் வேகமாகப்பறந்தார்.

உடன் மேடையில் தாவிய முத்து முஹம்மது -

"அதோ நமது தேசியத்தலைவர். முஸ்லிம் மக்களின் இதய தீபம். திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எல். எச். எம். ராவுத்தர் எம்.பி. சட்டத்தரணி அவர்கள் விடைபெற்றுச் செல்கிறார்கள். "நாரே தக்பீர்" என்று கேட்கப் பதில் கிடைக்கவில்லை.

சட்டென்று தாடி மாஸ்டர் ஒலிவாங்கியைப்பிடுங்கி,

"அஸ்ஸலாமு அலைக்கும். பொதுமக்

களே, வாக்காளப் பெருமக்களே கூட்டம் தொடர்ந்து நடைபெறும். நமது கட்சியின் பள்ளிமுனைக்கிளையின் கொள்கைப் பரப்புச் செயலாளராக நான்...." என்று ஆரம்பித்ததும் - பெண்கள் கூட்டம் கசாமுசாவென்று கலைய ஆரம்பித்தது. ஐஸ்பழ வாகனம் போக ஆயத்தமானது. ஆண்களும் கணிசமான அளவில் கரைந்தனர்... எனினும் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

கலைந்து சென்ற பெண்கள் கூட்டத்தில் முத்து முஹம்மது மைமுனாவைத் தேடி நுழைந்தான். மைதானத்தின் வலப்பு றப்பாதையால். சப்புச் சுல்தான் தலையில் தொப்பியுடன் மைமுனாவின் உம்மாவு டன் பேசிய படி நடந்து செல்வதைக்கண் டான. சப்புச் சுல்தான் ஐ. என். பீக்காரன். இஸ்லாமிய கட்சி தொப்பியுடனா? மை முனா ஓரமாக ஒதுங்கி நடப்பதையும் கண்டான்.

முத்து முஹம்மது ஆத்திரம் பொங்கி சற்றே ஓடி அவர்களை அடைந்தான்.

"மைமுனா ...?"

"முத்து மச்சான் வந்திட்டிங்களா?"

"ந்தா புடி!"

முத்து முஹம்மது கடலைப் பொரியலை மைமுனாவிடம் கொடுத்தான். சப்புச் சுல்தானின் உஷ்ணப்பார்வையை அலட்சியம் செய்தான்.

"முத்து மச்சான் மேடையில பேசினயே .." என்றான் யாசீன்

"தலைவரு மேடையில ஏறிவரக்க முத்து மச்சானோட சிரிச்ச. கையப்புடிச்ச என்றாள் மைமுனா.

உடன் முத்து முஹம்மது கோபம் தணிந்தான். பெருமையுடன் சப்புச் சுல்தா னைப் பார்த்தான். மறுபடி வேண்டு மென்றே.

"மைமுனா! நான் மேட பிரிக்கணும். லவுஸ் பீக்கர் களட்டனும். செரியா... கவனமா ஊட்ட போ. ஒரு நாயோடயும் கதைக்காமப் போ" என்று சத்தமாகச் சொல்லிவிட்டு மைமுனாவின் காதுகளில் குனிந்து -

"ஞ்சப்பாரு . சப்புச் சுல்தானோடக் கதைக்கப்போடா. சிரிக்கவும்போடா. அந்த நாய்தான் நம்மட முட உதுமான் வெண்டிய..."

தெரியும் மச்சான்"

உடன் முத்து முஹம்மது திருப்தியோடு.

"வாறங்கோ மாமி. வாரேன்" என்று திரும்பி மறுபடி மைதானம் நோக்கி நடக்கும்போது -

"லெக்கா மாமி, வேன் கொறுக்காப் புளி முத்துமதோட ஒன்ட மகள தொடுசல் வைக்க உடாத. கெடுத்துருவான். பேசாம நாஞ் சொல்றாப்பொல மைமுனாவ வெளிநாட்டுக்கு அனுப்பி ஒழக்கிற வழியப் பாரு...."

என்று சப்புச் சுல்தான் மைமுனாவின் தாயிடம் சொல்வது முத்து முஹம்மதின் காதில் கேட்டது.

உடன் முத்து முஹம்மது. திரும்பி சத்தமாக -

"டேய், சப்பு! ரோசமத்தவன! வெக்கமில்லாம எங்கட கட்சித் தொப்பியப் போட்டிருக்கியே... கழட்றா டேய்!" என்று கத்தி னான்.

"சப்புச் சுல்தான் புன்னகைத்தபடியே இஸ்லாமியக் கட்சித் தொப்பியக் கழற்றி மைமுனாவின் தம்பி யாசீனின் தலைக்கு அணிவித்து விட்டு தொப்பியிலிருந்தி பிறைச் சின்னத்தைப் பிய்த்துக் கசக்கி யெறிவதும், கோபமாக மாமியிடம் ஏதோ சொல்வதும் மங்கலாகத் தெரிந்தது.

"ந்தா வாரன் முத்தும்மது, டேய் எங்கடா போன, தாடி மாஸ்டர் வெரட்டாம்" என்ற இளைஞர் அணியின் உறுப்பினர்கள் துரிதப்படுத்தவே முத்து முஹம்மது அவர்களுடன் மைதானம் நோக்கி விரைந்தான்.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970க்குப்பின் அமைந்த அரசாங்கங்களும் அவைகளினால் முஸ்லிம் சமூகம் பெற்ற நன்மைகளும்

இலங்கைத் திருநாட்டில் இதுவரை அமைந்த அரசாங்கங்களில் குறிப்பிடக் கூடிய வகையில் முஸ்லிம் சமூகத்திற்கு சேவைகளையும், சலுகைகளையும், வழங்கிய அரசாங்கங்கள் எவையெனப் பார்ப்போமானால், நாடு சுதந்திரமடைந்த பின் 1970 வரைக்குமான அரசாங்கங்கள் வழங்கிய சலுகைகள் சேவைகளை விடவும் கூடுதலானவற்றை பின் வந்த அரசாங்கங்களே செய்திருப்பதனை நாம் காணலாம்.

அதிலும் குறிப்பாக 1970 முதல் 1977 வரை திருமதி சிறிமாவோ அம்மையாரின் தலைமையில் ஆட்சிபுரிந்த அரசாங்கமும், அதன் பின் 1994 முதல் 2000 ஆம் ஆண்டு வரை திருமதி சந்திரிக்கா குமார துங்க அவர்களின் தலைமையில் ஆட்சி புரிந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமும், ஏனைய அரசாங்கங்களை விட கூடுதலான சேவைகளையும், சலுகைகளையும் நமது முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கியிருக்கின்றன. இதன் காரணமாக முன்னர் வாத்தக சமூகமாக அடையாளப் படுத்தப்பட்ட நமது சமூகம் பின்வந்த காலத்தில் புத்திஜீவிகளையும், தலை சிறந்த கல்விமான்களையும், முற்போக்கான சமூக சிந்தனையாளர்களையும் கொண்ட இலங்கை நாட்டின் இரண்டாவது சமூகமாக முன்னிலையடைந்ததுடன், நாட்டின் அரசாங்கத்தையே தீர்மானிக்கும் சக்தியாக உயாவடைந்தது ஒரு சிறப்பம்சமாகும்.

இதில் வடக்கு - கிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம்களின் பங்கு மிக மிகக் கூடுதலானதென்பது குறிப்பிடக் கூடியதாகும். 1970க்கு முன்னும் அதற்குப் பின்னும் அமையப் பெற்ற அரசாங்கங்களில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பதவிகளிலிருந்த போதிலும், நாம் மேலே குறிப்பிட்ட இரண்டு அரசாங்க காலத்தில் இரண்டு அமைச்சர்கள் மிக, மிகக் கூடுதலான சேவைகளை நமது சமூகத்திற்குச் செய்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்று அந்த இரண்டு அமைச்சர்களும் உயிரோடு இல்லாவிடினும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றங்களும், சமூக மேம்பாடுகளும், சமூக சிந்தனைகளும் மக்கள் மனங்களில் என்றும் நினைவு கூறப்பட்டு நிறைந்திருக்கும்.

அந்த வகையில் 1970 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை திருமதி சிறிமாவோ அம்மையாரின் தலைமையில் அமைந்த அரசாங்கத்தில் அன்னாரின் விசேட ஆலோசகராகவும், கல்வியமைச்சராகவும் பதவி வகித்த மர்ஹூம் கலாநிதி, பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் அன்று முஸ்லிம் சமூகத்திற்கு அளப்பரிய சேவைகளைச் செய்திருக்கின்றார். அன்னாரின் காலத்தில் குச்சிக்குடில்களான முஸ்லிம் பாடசாலைகள் கோபுர வடிவில் உயர் பாடசாலையானது. வர்த்தக சமூகமாயிருந்த நமது சமூகம், புத்தெழில் பூத்து, மறு மலர்ச்சியாக கல்வியில் குறிப்பிடத்தக்க உயர்நிலையடைந்தது. அதன் பிறகே அரசாங்கத் திணைக்களங்களில் முஸ்லிம்களின் வருகை முன்னொரு போதுமில்லாத அளவில் உச்ச நிலைக்கு படிப்படியாக உயாவடையத் தொடங்கியது.

இத்தனைக்கும் கலாநிதி அல் - ஹாஜ் மாஹூம் பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கு ஏனைய எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பலை இருந்த போதிலும், தன்னை விசுவாசமாக நம்பியிருந்த அன்றையப் பிரதமர் சிறிமாவோ அம்மையாரின் ஆதரவும், ஆசியும் அவ்வெதிர்ப்பலைகளை எல்லாம் எதிர் கொண்டு வெற்றியடையக் காரணமாய மைந்தன. இதற்கு பண்டார நாயக்க குடும்பம் முஸ்லிம்கள் பற்றி வைத்திருந்த நல்ல அபிப்பிராயமும் ஒருகாரணமாகும். மறைந்த முன்னாள் பிரதமர் எஸ்.ட பிள்ளூஆர்.டி. பண்டார நாயக்க அவர்கள் தாம் சார்ந்திருந்த ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறி ஸ்ரீ.ல.சு.கட்சியை புதிதாக ஆரம்பித்த போது அவருடன் இரண்டாவது நபராக விருந்து ஆலோசனைகளை வழங்கி அக்கட்சியை ஸ்தாபித்து, பின்னர் ஆட்சி பீடமேற்றியதில் மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களின் பங்களிப்பு மிக மிகக் கூடுதலாகும். இச்செயலானது தனிப்பட்ட முறையில் மாஹூம் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்களை நேசிப்பதிலிருந்து அவர் சார்ந்த முஸ்லிம் சமூகத்தை பண்டார நாயக்க குடும்பம் நேசிக்கும் ஒரு நிலையையும் தோற்றுவித்தது. இதன் காரணமாக மர்ஹூம் பதியுதீன் மஹ்மூத் அவர்களை எதிர்ப் போர் தோல்வியடைந் தனர்.

அதனையடுத்து 1994 ஆம் அண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை பொதுஜன ஐக்கிய முன்னணி இன்றைய ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க அவர்களின் தலைமையில் ஆட்சி செய்தது. இந்த அரசாங்கம் அமைவதற்குப் பிரதான காரணமாகத் திகழ்ந்தவர் மு.காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் அல் - ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் என்பது நம்மெல்லோருக்கும் தெரியும். எனினும் அந்த ஆட்சியின் போது அன்னாருக்கு ஏற்பட்ட தடங்கல்களும், சவால்களும் முன்னர் எந்தவொரு அரசியல் தலைவர்களுக்கும் ஏற்பட்டதில்லை. மட்டுமல்லாமல் பயங்கரவாதிகளின் கொலை பயமுறுத்தல்களும் பெருமளவில் இருந்தன. இருந்த போதிலும் அவையனைத்துக்கும் முகம் கொடுத்து தனது இலட்சியத்தில் குறிப்பிடக் கூடிய வெற்றியைப் பெற்று இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் நீங்காத தொரு இடத்தினைப் பெற்றார். இது ஒரு வரலாறு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இவரும் கலாநிதி மர்ஹூம் பதியுத்தீன் அவர்களைப் போன்று திருமதி சந்திரிகா அம்மையாருக்கு ஆலோசகராகவும், அவரது ஆட்சி புரிந்த அரசாங்கத்தின் அதி முக்கிய பங்காளராகவும் திகழ்ந்து தமது சமூகத்திற்கு எவரும் செய்திடாத சேவைகளைச் செய்தார். மர்ஹூம் அல் - ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களுக்கு இதற்கு முதல் எந்த முஸ் லிம் தலைவர்களும் செய்திடாத சேவைகளைச் செய்வதற்கு, திருமதி சந்திரிகா அவர்கள் தனது தாயார் சிறிமாவோ அம்மையாரின் பாணியிலே கொடுத்த ஆதரவும், ஒத்துழைப்புமே பிரதான காரணங்களென்றால் அது மிகையாகாது. திருமதி சந்திரிகாவும் தனது தந்தை, தாயாரைப் போன்று முஸ்லிம் மக்கள் மீது பற்றும் பாசமும் வைத்திருக்கின்றார் என்பதற்கு இவை போன்று இன்னும் எத்தனையோ உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

இவற்றுக்குச் சான்றாக மாஹூம் அல் - ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் முயற்சியால் பெறப்பட்ட, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம், துறைமுக அதிகார சபையில் வேலை வாய்ப்பு, அரசாங்க நிறுவனங்களில் உயர் பதவிகள், முஸ்லிம் பிரதேசங்களின் அதிகூடிய சேவைகள், நஷ்டஈடு, மானியங்கள் வழங்கள் மாதிரிக் கிராமங்கள் அமைத்தல் போன்றனவும், பிரதேச செயலகங்கள் திறத்தல் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

இது மாத்திரமல்ல இலங்கை நாட்டில் முஸ்லிம்கள் சனத் தொகையில் மூன் றாவது நிலையிலிருந்த போதிலும் 1999 முதல் 2000 வரையிலுமான சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தில் முஸ்லிம்கள் அரசாங்க நிர்வகிப்பில் நாட்டின் இரண்டாவது நிலையில் இருந்தமையை இறை விசுவாசம் மிக்க எந்தவொரு முஸ்லிம் மகனும் மறுக்க மாட்டான். அந்த அளவுக்கு சலுகைகளையும், சேவைகளையும் சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கியது. இவற்றையெல்லாம் விட வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு ஏனைய அரசாங்க காலத்தில் ஏற்பட்ட கொடூரங்களை விட மிகவும் சொற்ப துயரங்களே முஸ்லிம் மக்களுக்கு பயங்கரவாதிகளால் திருமதி சந்திரிக்கா அரசாங்க காலத்தில் ஏற்பட்டது. அதிலும் 1983 க்குப் பின் அமைந்த ஐ.தே.கட்சியின் மூன்று அரசாங்கங்களின் காலத்தில் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கான பாதிப்புக்களை இங்கு மட்டிட முடியாது.

அவைகளையும் 1970 முதல் 1977 வரை 1994 முதல் 2000 வரையான அரசாங்கங்களையும் ஒப்பீட்டு அளவில் பார்க்குமிடத்து வார்த்தைகளால் சொல்ல முடியாத இழப்புக்களை ஐ.தேகட்சி அரசாங்கங்களின் காலத்திலும், அதற்கு மாற்றமாக முஸ்லிம் மக்கள் உயர் நிலையடைந்த அரசாங்கங்களின் காலங்களாக 1970 முதல் 1977 வரையும் 1994 முதல் 2000 வரையுமான காலங்களைக் குறிப்பிட முடியும் எனவே, முஸ்லிம் சமூகமாகிய நாங்கள் அரசாங்கமொன்றைத் தீர்மானிக்கும் சக்தியைப் பெற்றிருக்கும் இன்றைய நிலையில், ஒரு சில சுயநல அரசியல் வாதிகளின் பொய்யான சமாதானப் பிரச்சாரங்களுக்குப் பலியாகி, வருங்கால நமது சமுதாயத்தை பாடுதாளத்திற்குத் தள்ளு மொரு முயற்சிக்கு துணை போகாமல், சற்று நிதானித்து நமது எதிர்கால சமூகத்தின் தனித்துவமான குடியிருப்பை உறுதி செய்யும், உண்மையான தீர்வொன்றிற்காக எமது ஆதரவைத் தெரிவிப்போம்.

எம்.எல்.எம்.முஸ்தபா, மருதமுனை.

புத்திசாலித்தனம் + கோமாளித்தனம் = பட்டிமன்ற நடுவர்கள்

பாப்பையா நடுவராகப் பங்கேற்கும் பட்டிமன்றங்களைத் தொடர்ந்து சுவனிப்பவர்களுக்கு அவரிடமிருக்கும் சில தனித் தன்மைகள் புலப்படும். முதலில் விவாதப் பொருளை அறிமுகம் செய்கிற பொழுது: உயரிய செம்மொழியில் பேச்சைத் தொடங்கி உச்சஸ்தாயியில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது மிகச் சாதாரண பேச்சுவழக்கிற்கு மாறி விடுவார்.

விவாதப் பொருளை அறிமுகம் செய்யும் பாப்பையாவின் அறிமுக உரையில் இப்படியான சித்தரிப்புக்களை அதிகம் காணமுடியும். புனைவுக்காலமும், புனைவு வெளியும் உணர்த்தப்படுவது அருங்கலையின் முக்கியமான ஒரு அம்சமாகும்.

பேச்சுவழக்கிற்கு மாறி சித்தரிப்புக்களைத் தரும் அறிமுக உரை திரும்பவும் தரப்படுத்தப்பட்ட மொழிக்கு மாறித் திரும்பவும் தலைப்பையும் முதலில் பேச வருபவரையும் அதே மொழியில் அறிமுகம் செய்து விட்டு ஒதுங்கிக் கொள்ளும் பாணி பாப்பையாவினுடையது. உரையில் பேச்சு மொழியையும், தரப்படுத்தப்பட்ட மொழியையும் பயன்படுத்துவதன் மூலம் மொழியின் ஒலி ரூபங்களில் வேறுபாடுகளையும் உண்டாக்க முடியும். மிக உயாந்த ஸ்தாயியில் இருந்து மிக மெல்லிய குரலுக்கு மாறுவது, அதிலிருந்து கட்டையான குரலில் பேசுவது போன்ற மாற்றங்கள் ஒரு "பல குரல் பேச்சு" என்ற அளவில் பார்வையாளர்களால் ரசிக்கப்படு கிறது. பட்டிமன்றம் கேட்க வந்த பார்வையாளர்களுக்கு அந்த பல குரல் பேச்சு அதிகப்படியான இலாபம்.

இதே முறையையே விவாதத்தின் முடிவில் தீர்ப்பு வழங்கும் போதும் பின்பற்றுகிறார். சித்தரிப்பு, சித்திரிப்பு, மேலும் சித்தரிப்பு.... மேலும் மேலும் சித்திரிப்பு என அடிக்கிக் கொண்டே போவதன் மூலம் இரண்டு அணியினரும் எடுத்து வைத்த வாதங்களை மறக்கச் செய்து, பார்வையாளர்களைத் தன் வசப்படுத்திக் கொள்கிறார்.

அவரது சித்தரிப்புக்கள் மிகவும் நுணுக்கமான வாணணைகளாக, உரையாடல்களாக, வேடிக்கைப் பேச்சுக்களாக அமையும் பொழுது பார்வையாளர்கள் தங்கள் வாழ்வில் நிகழ்ந்த அதனை ஒத்த நிகழ்விற்குள் நுழைக்கப்படு கின்றனர். அப்படியானதொரு உள்ளிளுக் கப்பட்ட மனநிலையில் தனது புத்தி பூாவமான - மேற்கோள்கள் கொண்ட - திருக்குறள், சங்கப்பாடல்கள், பைபிள், புத்தா போதனைகள், குர்ஆன், சாக்ரடிஸ், கால்மாக்ஸ், காந்தியடிகள் என அனைவருக்கும் தெரிந்த சிந்தனையாளர்களிடமிருந்து, எழுத்துக்களிலிருந்து எடுத்தாளப்படும் மேற்கோள்கள் கொண்ட தரப்படுத்தப்பட்ட மொழியில் தனது தீர்ப்பை வழங்கிவிடுவார். பார்வையாளர் களின் மனநிலை சிந்தனையைத் தவிர்த்து நிற்கும் பொழுது தரப்படும் ஆணை அல்லது உத்தரவு போல அவரது தீர்ப்புகள் வந்து சேரும் பொழுது, அத்தீர்ப்பு. செய்யப்பட்ட வாதங்களின் அடிப்படையில் தான் வழங்கப்பட்டதா? என்ற போலிசிக்க மறந்துவிடுகிறது பார்வையாளர மனம்.

இந்த இடத்தில், நடுவர் பாப்பையாவின் அறிமுக உரை, தீர்ப்பு வழங்கும் முறை பாரம்பரிய அரங்கக் கலையான தெருக்கூத்தில் வரும் கட்டியக் காரனின் செயலோடு ஒப்பிடக் கூடாது. தெருக்கூத்தில் வரும் கட்டியக்காரனின் பணி ஏறத்தாழ பட்டிமன்ற நடுவரின் பணியைப் போன்றது. ஆரம்பத்தில் அவையோர முன் தோன்றி,

"வாரான் இதென்ன பாருங்க - கட்டியக்காரன்

வாரான் இதென்ன கேளுங்க"

என்று பாடி, தான் அணிந்துள்ள கோணக்குள்ளாய், பலவண்ண ஆடை, கெந்திகெந்தி நடக்கும் நடை, எனத் தன்னையே ஒரு கேலிச் சித்திரமாக்கி அறிமுகம் செய்து கொள்வான். (பாப்பையாவும் தனது கருப்பு நிறம்) வழுக்கைத் தலையைப் பற்றி அத்தகையச் சித்திரத்தைத் தருவது உண்டு) சுய எண்ணங் கொண்டு தன்னை அறிமுகம் செய்யும் கட்டியக்காரன், திடமான மொழியில் அன்று நடக்கும் கூத்துப்பட்டியும், கூத்தைத் நடத்தப் போகும் குழு பற்றியும்,

அன்றைய கூத்துக்கதையின் சாரம் பற்றியும் கூறி விட்டு வேடிக்கைக் காட்டத் தொடங்கி விடுவான். அறிமுகம் செய்யும் பொழுது பாடப்படும் பாடல்களும், பேசும் பேச்சு மொழியும், வேடிக்கைக் காட்டத் தொடங்கும் பொழுது வரும் பேச்சு மொழியிலிருந்தும் பாடல்களிலிருந்தும் தொனியிலும், சைகைகளிலும், வார்த் தைகளிலும் முற்காக மாறி கேலிக்கை அம்சத்தை உரியதாக்கிக் கொள்ளும் அவனும் அன்றாட ஊர் நடப்பு, நாட்டு நடப்பு, வீட்டு நடப்பு எனப் பல சித்திரங் களைக் கதைகளைக் கூறுவார். அதே கட்டியக்காரன் கூத்து முடிவில் சமயஞ் சாாந்த தத்துவங்களை வாழ்க்கை நியதிகளை - புறான இதிகாசக் கதாபாத்திரங்களான துரியோதனன், தூர்ச்சாதனன், கீசகன், இராவணன் போன்ற எதிர்நிலை கதாப்பாத்திரங்கள் கடைபிடிக்க மறந்த தத்துவங்களை நியதிகளை - எடுத்துக் கூறி, பயமுறுத்தி - அவ்வாறில்லாமல் பக்தி மார்க்கத்தில் சென்று வாழும்படி கூறி, "சுபோஜெயம்" சொல்லி முடிப்பான். கடைசி முடிப்பின் போது நகைச்சுவை தொனி முற்றிலும் மாறிய பேச்சில் மறைந்து போய் உச்ச நிலையைக் குரலைக் கொண்டு பேசுவான் கட்டியக்காரன்.

கூத்தை ஆரம்பித்து, முடித்து வைக்கும் கட்டியக்காரனிடம் இரண்டு அம்சங்கள் வெளிப்படுவதைக் காணலாம். ஒன்று: எல்லா விபரமும் தெரிந்தவன் - புத்திசாலி. இன்னொன்று: கோமாளி. கோமாளி - புத்திசாலி என்ற இரு நிலை எதிர்வுக்குள் ஒரு கதாபாத்திரம் இயங்கும் பொழுது பார்வையாளர்களின் ஈடுபாடு அதிகமாகுமே தவிர குறையாது. தெருக்கூத்துக் கட்டியக்காரனுக்குக் கூத்தை ஆரம்பித்து வைப்பதும், முடிப்பதும் மட்டுமே வேலையல்ல. அன்றையக் கூத்தின் முக்கியக் கதாபாத்திரம் ஒவ்வொன்றையும் அறிமுகம் செய்து வைப்பதும் அவனுடைய பணியே. அப்படி அறிமுகம் செய்யும் பொழுது கூத்தில் நடப்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

"துரியோதன மகாராஜா வருகின்ற விதம் காணுங்க"

என்று கூறிவிட்டு, ஒதுங்கி நிற்கும் கட்டியக்காரன்

"அடே காவலா... நான் யார் தெரியுமா?" என்று கேட்க

"தெரியுமுங்களே... நொண்டிக்காலு முனிசாமி மகன் பழனிசாமி"

என்று கூறுவான். "முனிசாமி மகன் பழனிசாமி" என்பது துரியோதனாக வேடமிட்டுள்ளவனின் - நடிகனின் - உண்மையான அடையாளம். அந்த இடத்தில் புனைவு மறக்கடிக்கப்பட்டு நிகழ்வு - உண்மை - சொல்லப்படுகிறது. இதையொத்த பல நிகழ்வுகளைக் பாப்பையா நடுவராக இருக்கும் பட்டிமன்றங்களில் பார்க்கலாம்.

"இங்கேதே இவ்வளவு வீரம்.... வீட்டுக்குப் போயிட்டா... மூச்... மன்னா எந்திரிக்கணும்"

இப்படியானதொரு இடையீட்டில் அணிப் பேச்சாளரின் சொந்த வீடு, மனைவிக்கும் பயப்படும் அவரது இயல்பு போன்ற விசயங்களைப் பேசி விடுவார். பேச்சாளரும் சிரித்துக் கொண்டு பேச்சை தொடாந்து விடுகிறார். இதில் எது புணைவு, எது உண்மையெனபதை நாம் அறிய முடியாவிட்டாலும் அணிப் பேச்சாளர் பற்றிய உண்மை ஒன்றைத் தெரிந்துக் கொண்டவர்களாக பார்வையாளர்கள் நம்புகிறார்கள்.

நடுவர் பாப்பையா மற்ற நடுவர்களிலிருந்து அதிகம் வித்தியாசப்பட்டு நிற்பது அறிமுகத்திலோ முடிப்பிலோ அல்ல. பலரும் கூட இந்த உத்தியை பின்பற்றுகிறார்கள் தான். ஆனால், அணிப் பேச்சாளர்கள், தங்களது வாதங்களை எடுத்து வைக்கும் பொழுது அவர செய்யும் இடையீடுகளே மற்ற நடுவர்களிலிருந்து அவரை முழுமையாக வேறுப்படுத்துகிறது. ம்... ஆங்... என்ற ஒலிகளை எழுப்புவதன் மூலம் ஒரு கதைத் கேட்பவனின் இடத்தை நேரங்களில் நிரப்புகிறார். *"ஹாஹா...! அருமை...! சொம்பச் சரி...! அப்படிப்போடு...!"* போன்ற வார்த்தைகளைச் சொல்லி, பேச்சாளரை ரசிக்கும் ரசிகனாக மாறிக் கொள்கிறான். சில நேரங்களில், பேச்சாளரின் வாதங்களில் சந்தேகம் கேட்பவர் போலவும், மாற்றுக் கருத்துக் கூறுபவராகவும் நுழைந்து பேச்சை ஒரு உரையாடலாக மாற்றவும் செய்கிறார். அணிப் பேச்சாளரின் சொற்பொழிவை நீண்ட பேச்சு என்ற நிலையிலிருந்து கதைச் சொல்லல், உரையாடல், ரசிப்புக்குரியச் செய்தி எனபதாக மாற்றும் நுற்பங்கள் கூட கட்டியக்காரனிடம் காணப்படும் கூறுகளே எனபதைக் கூத்துப் பாத்தவர்கள் அறிந்திருப்பாாகள். கட்டியக்காரனுக்கு வெவ்வேறு கதாப்பாத்திரங்களாக மாறும் சுதந்திரம் கூத்திலுண்டு. நடுவர் என்ற பாத்திரத்தைத் தாங்கி, கட்டியக்காரனுக்குரிய சுதந்திரம் முழுவதையும் பயன்படுத்தும் பாப்பையா, பெரிதும் நம்பியிருப்பது அவரது குரலை மட்டுமே. பல்வேறு ஸ்தாயில் ஒலிக்கக்கூடிய அவரது குரலை மட்டும் கொண்டு, உட்காந்த இடத்தை விட்டு நகராது. பல்வேறு பாத்திரங்களாக மாறும் பொழுது அவரது குரலோடு முகபாவங்களும் கையின் சைகைகளும் ஒரு நடிகனின் சில அம்சங்களைத் தெரிவு செய்துக் கொள்கின்றன.

பட்டிமன்ற நடுவர் சாலமன் பாப்பையா பட்டிமன்றத்தை ஒரு நிகழ்த்துக் கலையின் அம்சங்கள் நிறைந்ததாக மாற்றுகிறார். அதிலும் தெருக்கூத்துக் கட்டியக்காரனின் பாத்திரத்தை தனது பாத்திர வார்ப்பாகக் கொள்கிறார். கட்டியக்காரனுக்குள் இருக்கும் கோமாலி - புத்திசாலி என்ற இரு நிலைகளில் கோமாளி என்பது புனைவிலும், புத்திசாலி என்பது நிகழ்விலும் பயன்படும் படி அவரது இயங்குதல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

கட்டியக்காரனிடம் இருக்கும் கோமாளித்தனத்தை மட்டுமே மூலதனமாகக் கொண்டு பெரும் கூட்டத்தைக் களிப்பில் ஆழ்த்தும் இன்னொரு கதாப்பாத்திரம் பபூன் தென் தமிழ் நாட்டில் பரவலாக உள்ள ஸ்பெஷல் நாடகத்தின் முன்னொட்டு நிகழ்வு "பபுன் - காமிக்" எனப்படும். வள்ளித் திருமணம், அல்லி ஆர்ஜுனா போன்ற புரான இசை நாடகங்களில் மையக் கதாப்பாத்திரங்கள் வருவதற்கு முன்பாக ஆடல், பாடல், சிரிப்புத் துணுக்குகள், கொச்சையான குரல், மற்றும் பாவனைகள் மூலம் பார்வையாளர்களுக்கு "விருந்து" அழிக்கும் பகுதி இந்த "பபுன் - காமிக்" ஒரு ஆண்; ஒரு பெண்; அல்லது இரண்டு இரண்டாக நான்கு நடிகர்கள் இடம்பெறுவா. பின்னர் வரப்போகும் கதையோடு எந்தத் தொடாபுமில்லாமல் காமெடிக்காக ஒரு கதை உருவாக்கப் பட்டு முடிந்து விடும். இந்தப் பகுதியின் முக்கியக் கதாப்பாத்திரம் பபுன் எனப்படும் விதூஷகன் இவனது சாரம்சம் தெருக் கூத்துக் கட்டியக்காரனின் சாரம்சத்துடன் ஒத்துப் போவதுதான் என்றாலும் முழுமையும் அல்ல.

ஸ்பெஷல் நாடகத்துப் பபுன், முக்கிய கதாப்பாத்திரங்களை அறிமுகம் செய்து வைப்பதில்லை. மேடை நிகழ்வில் இடைமீடு செய்வதில்லை. முடிவில் வந்து "சுபோஜெயம்" சொல்லி முடித்து வைப்பதில்லை. அவனது பணி மகிழ்வூட்டுவது... மகிழ்வூட்டுவது... அதிலும் தொடக்கத்தில் குழுமும் இளம் வயதினரைக் களிப்பூட்டுவது என்பதோடு நிறைவு பெற்று விடும். இதற்குப் பபுன் வேஷம் போடும் நடிகாகளுக்குத் தேவை "புத்திசாலித்தனம்" அல்ல: கோமாளித் தனம் மட்டுமே.

புத்திசாலித்தனங்களை ஒதுக்கிவிட்டு கோமாளித்தனங்கள் மூலம் வருவாயைப் பெருக்கும் உத்திகளை பின்பற்றுவது தமிழ் திரையுலகம் நவீன, அறிவியலின் நுட்பமான கண்டுப்பிடிப்புகளையும் களிப்பூட்டும் அம்சங்களுக்குப் பயன்படுத்தும் தொழில்நுட்ப வல்லுனாகளுக்கு நிரம்பியது தமிழ் கனவுத் தொழிற்சாலை தமிழ் மொழியின் பயன்பாட்டு விதிகளை சுலபமாக ஒதுக்கிவிட்டு தமிழ் பாடல் தரும் வார்த்தையாடிகளின் ஒளிக் குவியல் களாலும் நடிக நடிகைகளின் கிளாச்சி யூட்டும் உடல்களின் அசைவுகளால் உண்டாகும் பிம்பக் குவியல்களாலும் தமிழர்களின் அன்றாட வாழ்வில் மனப்பிராந்தியம் நிரப்பப்பட்டிருக்கிறது. தமிழ் திரைப்படங்களில் மாய உலகத்தைத் தவிர்க்கவும் முடியாமலும் அதற்குள் இறங்கிக் குளித்து சந்தோஷிக்கவும் முடியாமல இருக்கும் தமிழ் மனத்தின் சாட்சியாக இருக்க முயலுகிறார் திண்டுக்கல் லியோனி.

திரைப்படப் பாடல், திரையிசை, பாடல்களில் வரும் வாழ்க்கை மதிப்பீடு என அரது இயங்கு விழியும், மேற்கோள் விழியும் அனைவருக்கும் தெரிந்த அறிந்த - திரைப்பட வெளிதான். அதன் மீதான விமாசனங்களில் முடிவுகளற்றவராய் இருப்பவர்களுக்கு.

உங்கள் கருத்துகள், படைப்புகள் அனைத்தையும் உடனுக்குடன் எமக்கு அனுப்பி வையுங்கள்; நமது மக்களின் அவலங்கள், தீர்க்கப்படாத பிரச்சினைகள், அரசியல்வாதிகளின் பொடுபோக்குத்தனம், அதிகாரிகளின் அசமந்தம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆதாரங்களுடன் எழுதப்படல் வேண்டும் - நியாயம் கிடைப்பதற்காக வேண்டி தொடர் ந்தும் உரியவர்களுடன் நமது பத்திரிகை ஊடாக பேசிக் கொண்டிருப்போம்.

முஸ்லிம் குரலில் வெளிவரும் கருத்துக்களுக்கு மாற்றுக் குரல்கள் எதிர்பார்க்கப்படு கின்றன. நமக்காக எழுதுவோம்! நமக்குள் உரையாடுவோம். விவாதிப்போம்! என்பதே நமது பத்திரிகையின் இலக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரடி

-சிராஜ் மஷ்ஹூர்

ஒருபோதும் வாய் வார்த்தைகள் விடுதலையின் தீப்பொறியை மூட்டுவதில்லை!

முஸ்லிம் அரசியல் மிகப் பெரும் பின்னடைவை எதிர்கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. அடுத்த கட்ட நகர்வு பற்றிய குறைந்த பட்சத் தெளிவு கூட நம்மிடம் இல்லை. சூன்யமான ஒரு அரசியல் எதிர்காலத்தினுள் நாம் விடப்பட்டிருக்கிறோம். எதிர்காலம் பற்றிய ஒரு அவநம்பிக்கை நிலையே பொதுவாக நிலவுகிறது. கைவிடப்பட்ட ஒரு மனோநிலை நம்மைச் சூழ்ந்திருக்கிறது. இது தனிப்பட்ட சிலரது மனோநிலை எனில், அது குறித்து நாம் அவ்வளவு தூரம் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. ஆயினும், அதுவே ஒட்டுமொத்த மக்களினதும் மனவிரக்தியாகத் திரள்கிறது எனில், மிக மோசமான பின்னடைவிற்கான தெளிவான அபாய அறிவிப்பாகவே அதை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

வேகமான அரசியல் மாற்றத்திற்கான சமிக்ஞைகளை முஸ்லிம் அரசியற் களமும் சிவில் சமூக நிறுவனங்களும் பாரியளவு வெளிப்படுத்தி வந்ததை அண்மைய வருடங்களில் அவதானிக்க முடிந்தது. ஆயினும், அந்த வேகத்தில் பெருமளவு தணிந்த ஒரு நிலையே சமீப நாட்களில் தென்படுகிறது. ஆயின், இதுவரை நிகழ்ந்தவற்றுள் கணிசமானவை வெறும் ஆவேசம் நிறைந்த உணர்ச்சிக் கொந்தளிப்புகள் மட்டும்தானா? அதற்கப்பால், எதிர்காலம் பற்றிய தீர்க்கமான தொலை நோக்கு எதுவுமே நம்மிடம் இல்லையா? எமது செயற்பாடுகள் குறிக்கோளற்று முன்னெடுக்கப்படும் வெறும் அவசர நடவடிக்கைகள் மட்டும் தானா? முஸ்லிம் அரசியல் குறித்து ஆர்வமுடைய எவருக்கும் இக் கேள்விகள் எழுவது தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

அண்மித்த நாட்களில் சந்திக்கின்ற பலரிடமும் மிகப்பெரும் நம்பிக்கையீனமும், அடுத்தகட்ட நகர்வு பற்றிய தெளிவீனமுமே நிலவுகிறது. சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்த காலங்களில் 'முஸ்லிம் எதிர்வினை' குறிப்பிடத்தகுந்தளவு தாக்கமாக வெளிப்பட்டது. முஸ்லிம் மக்களை அரசியல் மயப்படுத்தும் பல்வேறு கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் நடைபெற்றன. ஆயினும், இந்த எல்லா நிகழ்வுகளிலும் நாம் அடிக்கடி ஒரே முகங்களையே சந்திக்கிறோம். புதிய முகங்களினது வருகை பெருமளவு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இது இரு பிரச்சினைகளை அடையாளம் காட்டுகிறது. முதலாவது. இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் முஸ்லிம்களின் கையறு நிலையை. தோல்வியின் மிகச்சரியான பரிமாணத்தை - சிந்திக்கத் தெரிந்த நமது மக்களின் சகல தரப்புக்கும் கொண்டு செல்ல முடியாத நமது இயலாமை. இரண்டாவது, நம்முள் மிக அதிகமானோர் இவ்விடயத்தில் காட்டுகின்ற அக்கறை மிக மேலோட்டமான ஒன்று.

நாம் அதிகம் பேசிப்பேசியே நாட்களை கடத்துகிறோம். நம்முள் கணிசமானோர் இதை தமது ஓய்வு நேர வேலையாக - இன்னும் சரியாகச் சொல்வதானால் பொழுது போக்காகவே எடுத்துக் கொள்கிறோம். தமது இயலாமையை - அச்சத்தை வெளிக்காட்டிக்கொள்ளாது மறைக்கும் இவர்கள் வெறும் புத்திப் போராளிகள் மட்டும் தான். நமது பிரச்சினையை நாலு பேர் கூடிக்கலைந்து விடுவதால் ஒரு போதும் தீர்வோதில்லை என்பதை இவர்கள் நன்கு அறிவார்கள். ஆனாலும் தமது கையாலாகத்தனத்தை மறைப்பதற்கான ஒரு போலிக்கவசமாக பலரும் இந்தக் கூட்டங்களை பயன்படுத்தி வருகின்றனர். பலர் பிரச்சினை பற்றிய அடிப்படை அறிவு எதுவுமே இல்லாது வாய் வார்த்தைகளை அள்ளி வீசுகிறார்கள். இது போதாததற்கு அவர்களுக்கு புத்திஜீவி வேஷம் வேறு ஒரு கேடாகி இருக்கிறது. அந்நிய ஆதிக்க சக்திகளிடமிருந்து நமது மக்களைக் காப்பாற்ற முன்னால், இந்தப் பெருச்சாளிகளிடம்மிருந்துதான் நாம் பாதுகாகக்கப்பட வேண்டும். ஏனெனில், இது உள்நின்று கொல்லும் வியாதி. கண்ணுக்குத் தெரியாமல் ஒட்டுமொத்த சமூகத்தினது ஆன்மாவை உள்ளூர நின்று அரிக்கும் இந்த நோய்க்கூறு இல்லாதொழிக்கப் படவேண்டும்.

எந்தவொரு சமூகத்திற்கும் சிந்தனைப் பலம் அடிப்படையான தேவையாகும். ஒரு சிந்தனைக் கட்டமைப்பை - சிந்தனா வங்கியை (Think Tank) இன்னும் கூட நாம் சரியாக ஸ்தாபிக்கவில்லை. இவ்வாறான ஒரு நிலையில், இருக்கின்ற சக்திகளையும் ஐதாக்கிப் பலவீனப்படுத்தும் அனைத்து வகையான எதிர் நடவடிக்கைகளையும் அடையாளம் கண்டு, அதற்கெதிராகக் குரலெழுப்புவது நமது அத்தியாவசியப் பணியாகிறது.

சிந்தனைப் பலத்தை செயலுருப்படுத்தும் தீவிர செயற்பாட்டாளர்கள் இன்று நமக்கு உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். இவ்வாறான தீவிர செயற்பாட்டாளர்கள் (Activists) நம்மிடம் மிகச் சொற்பமாகவே உள்ளனர். புதிய செயற்பாட்டாளர்களை அடையாளம் காணவேண்டியது நமது பொது நிகழ்ச்சி நிரலின் குறிப்பான பிரச்சினையாக மாறியுள்ளது. சமூக சக்தியினை அடையாளம் காண்பதற்கான அர்ப்பணிப்பும் தொடர்ச்சியான வேலைத்திட்டமும் நம்மிடம் இல்லை. புதிய தலைமுறை இளைஞர்களிடம் நமது கவனம் சொற்ப அளவில் கூடச் செல்லவில்லை. பிராந்திய மட்டங்களில், ஊர் ஊராகச் சென்று சிறு சிறு கலந்துரையாடல்களை, கூட்டங்களை நடத்துவதனூடாகத்தான் புதிய சமூக சக்திகளை அடையாளம் காண முடியும். இந்த சமூக சக்திகளை அடையாளம் காண்பதனூடாகத்தான், அவற்றிடையே இணைப்பை ஏற்படுத்துவது சாத்தியமாகும்.

உதிரியான சமூக சக்திகளுக்கு ஒரு தொலைநோக்கோ, நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட செயற்திட்டமோ இருக்க வாய்ப்பில்லை. இவற்றிடையே ஒரு இணைப்பை ஏற்படுத்துவதனூடாகத்தான் ஒரு கூட்டு வேலைத்திட்டம் சாத்தியமாகும். இந்த கூட்டு வேலைத்திட்டம் மக்களது நலனில் நின்று வினைத்திறனுடன் செயலாற்றக் கூடியதாக வகுக்கப்படவேண்டும். இன்னும் சரியாகச் சொன்னால், நமது மக்களிடையே ஒழுங்குபடுத்தப்பட்ட உரையாடல்கள் நிகழவேண்டும். கருத்துக்கள் பரிமாற்றப்படுவதனூடாகத்தான் எதிர்காலம் பற்றி நமக்குள்ளே இறுகிப்போயிருக்கும் அவநம்பிக்கை மெல்லமெல்லத் தளரும். அதனடியாகத்தான் நாம் நமக்கான புதிய பாதையைக் கண்டு பிடிக்க முடியும். இதை விட்டுவிட்டு, சும்மா பேசிக் கொண்டிருந்தால் நாம் எதையுமே சாதிக்க முடியாது.

சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையில் இருந்துதான் விடுதலைக்கான மூலவித்துக்கள் ஊன்றப்படுகின்றன. நமக்குள்ளே உரையாடல்கள் நிகழ்கின்றனதான். ஆயினும், அவற்றை அர்த்தம் நிறைந்ததாய் மாற்றுவோம்: அவற்றை செயற்பாடுகளாய் மொழி மாற்றம் செய்வோம். அதுதான் நமது உடனடித் தேவையாக உள்ளது.

நமக்குள் அவசியமற்ற ஆயிரம் பிளவுகள் நிலவுகின்றன. அவற்றை சற்றே புறமொதுக்கிவிட்டு, எல்லோரும் ஒன்றுபடும் ஒரு பொது நிகழ்ச்சி நிரலையும் அதற்கான வேலைத்திட்டத்தையும் வகுப்போம். பல்வேறு சமூக சக்திகளை இதன் அடிப்படையில் இணைத்து புதிய எதிர்காலமொன்றை தீர்மானிப்போம். அரசியல்வாதிகள் நமமைக் கைவிட்டுவிட்ட நிலையில் மக்களாகிய நாம் தான் நமது விடுதலையின் தீப்பொறியை மூட்டியாக வேண்டும். இது தற்செயல் நிகழ்வு அல்ல. வரலாற்றின் தவிர்க்க முடியாத நியதி.

இன்று எல்லாவற்றையும் விடப் பிரதானமான பிரச்சினை, யார், எவர்கள் இதை தொடங்கி வைப்பது என்பதே. நமது தலைவர்களில் மக்கள் நம்பிக்கை இழந்து விட்ட நிலையில், பெரும் நம்பிக்கையீனம் நிலவுவது யதார்த்தமே. எனினும் நம்பிக்கையூட்டும் புதிய சமூக சக்திகள், தமது அர்ப்பணிப்பினாலும் தீவிர செயற்பாட்டினாலுமே மக்களை வென்றெடுக்க முடியும் அதற்கான பணிகளை இப்போதே முடுக்கி விட்டால்தான், அச்சுறுத்தும் எதிர்காலத்தில் சிறு நம்பிக்கை ஒளியையேனும் நம்மால் கண்டு கொள்ள முடியும்.

ஈராக் யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவில் பனிப்போர்

சதாம்ஹுசைனின் ஆட்சியிலிருந்து ஈராக் மக்களை விடுவிப்பதற்காக தனது படைகளை அங்கு அனுப்பிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோஜ். டபிள்யூ புஷ், சதாமின் ஆட்சியை தான் கவிழ்த்து விட்டதாகக் கூறியதாக மேற்கு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தற்போது ஈராக்கில் சதாமுக்கு எத்தகைய பலமும் இல்லையெனக் கூறும் இவ் ஊடகங்கள் சதாமும், ஒசாமா பின் லாதினை போன்று தலைமறைவாகியுள்ளதாகவும் அறிவிக்கின்றன. இவ்வாறு கூறி, தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இவ் ஊடகங்கள் ஈராக்கில் பொருளாதாரத் தடை என்ற பெயரில் யுத்தத்துக்கு முன்னரும், யுத்தத்துக்கு பின்னரும் நாளாந்தம் நூற்றுக்கணக்கான ஈராக்கிய சிறுவர்கள் மரணத்தின் மடியில் சிக்குண்டு கிடப்பதை அறிவிக்காமல் இருப்பதன் மூலம் ஜனாதிபதி புஷ்ஷை மகிழ்ச்சிப்படுத்துகின்றன என்பது தெளிவாகின்றது. இந்நிலையில் அமெரிக்காவுக்குள் யாரும் எதிர்பார்க்காத இடத்தில் பனிப்போர் நிகழ்ந்து வருகிறது.

அமெரிக்காவின் பரிபாலன விடயங்களில் ஈடுபடும் பிரதான இரு அமைப்புகளான பென்டகன், இராஜாங்க திணைக்களம் ஆகிய இரண்டுக்கும் இடையில் பனிப்போர் மூண்டு வருகிறது. ஈராக்கில் யுத்தத்தின் பின்னர் நிகழும் இப்போர் சற்று சூடாகவே செல்வதாக அங்கிருந்து வரும் தகவல்கள் குறிப்பிடுகின்றன. வேறு வகையில் குறிப்பிடுவதாயின் இப்போர் பாதுகாப்பு செயலாளர் டொனல்ட் ரம்ஸ்பீல்ட், இராஜாங்க செயலாளர் கொலின் பவல் இருவருக்கும் இடையில் நடைபெறும் பனிப்போராகும். ரம்ஸ்பீல்ட் படைபிரிவுக்கு பொறுப்பாகவும், கொலின் பவல் சிவில் பிரிவுக்கு பொறுப்பாகவும் செயற்படுகின்றார்கள். ஈராக் போர் ஆரம்பிப்பதற்கு முன்பிருந்தே இந்த நிலை காணப்பட்டு வந்தது. ஈராக் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க பவெல் முயற்சிப்பதாக ரமஸ்பீல்ட்டும், இதனை யுத்தத்தின் மூலம் தீர்க்க ரம்ஸ்பீல்ட் முயற்சிப்பதாக பவெலும் நினைத்துக் கொண்டனர். இந்த முரண்பட்ட எண்ணங்கள் முரண்பட்ட கருத்துக்களை தோற்றுவித்ததோடு பனிப்போர் என்ற நிலைக்கு தள்ளியும் விட்டது. இன்று வெளிப்படையாக மக்கள் முன் இருவரும் தாக்கிக் கொள்வது சகஜமாகிவிட்டது.

இந்த இரு நிறுவனங்களுக்கிடையேயான பிரச்சினைகளின் மூலம் ஏனைய வர்களை விட அதிகம் பாதிக்கப்படுவர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆவார். இந்த முரண்பாடுகள் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்துக்களை தோற்றுவித்துள்ளன. அதே நேரம் சிரியாவின் விடயம் குறித்தும் இரு வரும் முரண்பட்ட கருத்துக்களை கொண்டுள்ளனர். இங்கு பவெல் பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தை கொண்டிருக்க ரமஸ்பீல்டோ அதற்கு முற்றிலும் முரணான கருத்தையே கொண்டுள்ளதோடு பவலின் இந்த கருத்து நகைப்புக்குரியது என்கிறார் ரம்ஸ்பீல்ட்.

வட கொரியாவுடனான பேச்சுவார்த்தையையும் ரம்ஸ்பீல்ட் எதிர்த்துள்ளார். இஸ்ரேல் தொடர்பாக இராஜாங்க திணைக்களத்தின் நிலைப்பாடும் ரம்ஸ்பீல்டின் நிலைபாட்டுக்கு முரணாகவே உள்ளது. கொலின் பவல் கருப்பு இனத்தை சார்ந்தவர். ரமஸ்பீல்ட் வெள்ளையினத்தை சார்ந்தவர். ஆகவே நிறபேதமும் இத்தகைய முரண்பாட்டுக்கு எதுவான காரணங்களில் ஒன்றாகும். வட கொரிய பிரச்சினை தொடர்பாக அமெரிக்க பிரதிநிதிகள் குழுவை அங்கு அனுப்புவது தொடர்பாகவும் இருவர் மத்தியில் முரண்பாடு நிலவி வருகிறது. இந்த இரு முரண்பட்ட கருத்துகளுக்கு அமெரிக்க ஜனாதிபதியின் நிலைப்பாடு மிக முக்கியமானதாகும். புஷ்வின் பேச்சாளர், கொலின் பவல் ஜனாதிபதி புஷ்வின் கொள்கையை சரியான முறையில் பின்பற்றுபவர் என குறிப்பிட்டுள்ளார். அதனால் பவலை பாதுகாப்பது புஷ்வின் நோக்கமாகும் எனவும் கூறப்படுகிறது. ஆகவே இந்த வாத விவாதங்கள் மூலம் பவலின் பிரபல்யம் மேலும் உயர்த்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மறுபுறம் பவலுக்கு எதிரான கருத்துக்களை அமெரிக்காவில் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எது எவ்வாறு இருப்பினும் இந்த முரண்பட்ட கருத்துக்களும். இடைவிடாத முரண்பாடுகளும் அந்நாட்டின் வெளிநாட்டு கொள்கைகளை பலமாக தாக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

-தமிழில் : இப்னு இஸ்ஹாக்

சொன்னது போதும் செய்து காட்டுங்கள்!

புத்தளம் நகர சபையின் ஆளும் ஐக்கியத்தேசிய முன்னணியின் பிரதித் தலைவர் உட்பட ஐக்கியத் தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்களும் ஒரு மாதத்தினுள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யப்போவதாக சென்ற ஏப்ரல் 30 ஆம் திகதி இடம்பெற்ற நகர சபையின் மாதாந்த அமர்வில் ஏகமனதாகத் தீர்மானித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைத்துவப் பீடத்திற்கு காலக்கெடு விதித்துள்ளதாக அண்மையில் பத்திரிகைளில் செய்தி பிரசுரமாகியுள்ளது.

நகர சபையில் நிலவும் நிருவாக குளறுபடிகள் மற்றும் பாரிய நிதி மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவந்து மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய சந்தர்ப்பத்தை தமக்கு ஏற்படுத்தித் தருமாறு கட்சித் தலைமைத்துவத்திடம் கோரியே இத்தீர்மானம் மேற்கொள்ளப் பட்டதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

புத்தளம் நகர சபையை பொதுஜன ஐக்கிய முன்னணியிடமிருந்து ஐக்கிய தேசிய முன்னணி கைப்பற்றிய நாள் தொடக்கம் மு. காவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே அரசியல் இழுபறி ஆரம்பமாகிவிட்டது. மாதாந்த மற்றும் விஷேட சபை அமர்வுகளின் அறிக்கைகள் இதற்கு சான்று பகரும். இதன் முக்கிய கட்டமாக சென்ற வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்று வதற்கு ஐக்கிய தேசியக்கட்சியினர் மற்றும் கோரிக்கைகளை உள்வாங்க தலைவர் தவறிவிட்டதாலேயே இந்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பகீரத முயற்சி காரணமாக ஐ. தே. க. செயலாளரின் வேண்டுகோளுக்கமைய பிரதித்தலைவர் பட்ஜெட்டை நிறைவேற்ற ஒத்துழைப்பை வழங்கினார். ஏனைய ஐ. தே. க. உறுப்பினர்களோ ஆதரவு வழங்காது ஒதுங்கிக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து வழமையான பல்லவியையே நகர சபையில் ஐ. தே. கட்சியினர் இதுவரைக்கும் பாடிக் கொண்டிருக்கின்றனர். கட்சித் தலைமைப்பீடத்திற்கோ இவர்களது அவலக் குறைகள் செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றுள்ளது. இந்நிலையில் தமது பதவிகளைத் துறக்கும் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் புத்தளம் நகர சபையின் ஐ. தே. க. உறுப்பினர்கள் ஆறுபேரும் சொன்னதைச் செய்து காட்டி. முதுகெலும்புள்ள அரசியல்வாதிகளென தம்மைப் பறைசாற்ற வேண்டும்.

சதபவான்



அதிகரித்துச் செல்லும் குற்றங்கள்

கொலை, கொள்ளை, வீடுகளை உடைத்தல் உட்பட பல வகையான குற்றங்கள் இலங்கை வரலாற்றில் இடம்பெறாத அளவுக்கு மிக அதிகமான அளவில் அண்மைக்காலத்தில் இடம்பெற்றிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. கடந்த காலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு இதன் விகிதாசாரம் உயர்ந்து காணப்படுகிறது. குற்றங்களின் சுபாவமும் மிக உயர்ந்த அளவிலேயே காணப்படுகிறது. பாரதூரமான ஒரு குற்றமாவது இடம்பெறாத ஒருநாளேனும் கிடையாது. கடந்த வருடத்தில் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம் 321 கொலைகள் இடம்பெற்றுள்ளன. மனிதக்கடத்தல்கள் 184 உம் 1387 கொள்ளைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. இக்கால எல்லைக்குள் 23 கப்பம் பெறுதல் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. இது அசாதாரண அதிகரிப்பாகும். அதற்குப்பிறகு இன்றைய திகதிவரை குற்றங்கள் அதனைவிடப் பல மடங்காக பல்கிப் பெருகியே காணப்படுகின்றன. இத்தகை தொடர்ச்சியான அதிகரிப்பை உற்றுநோக்கும்போது இத்தகைய குற்றங்களைச் செய்வதற்கென அதனைத் தொழிலாகக் கொண்ட ஒரு குழு இயங்கி வருகின்றது எனத்தெரிய வருகிறது. கடந்த 2,3 தசாப்தங்களில் இடம்பெற்ற சமூக, அரசியல், பொருளாதார விடயங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் இதற்கான பிரதான காரணியாகும். என்றாலும் இத்தகை குற்றங்களை உடனடியாக தடுத்து நிறுத்திவிட முடியாவிட்டாலும் கூட அவற்றைப் படிப்படியாகக் குறைப்பதற்கான திட்டங்களை உடனடியாக அமுல்படுத்துவது அவசியம். இதுவரையில் குற்றங்களைத்தடுப்பதற்காக அமுலில் இருந்து வந்த பழைய நடவடிக்கைகளால் மாத்திரம் இதனை செய்துவிட முடியாது. ஆகவே அதற்காக புதிய திட்டங்கள் அமுல்படுத்தப்படுவது அவசியம். அதன்மூலமே குற்றங்களற்ற ஆரோக்கிய சமூகம் ஒன்றை எதிர்காலத்தில் உருவாக்க முடியும்.

முஸ்லிம் குரல்

கவடு 11

23 மே 2003 Muslim Kural صوت المسلم ஹிஜ்ரி வருடம் 21 ரபீஉல்-அவ்வல் - 1424

143, Muhandhiram Road, Colombo - 03. Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk

அன்பான மக்களே! பாராளுமன்றத்தின் ஆயுள் ஆட்டங் காணும் தருணமிது! நமது மக்களால் அரியணை ஏற்றப்பட்ட நமது மக்கள் பிரதிநிதிகள், மக்கள் காலடிக்கு மீண்டும் வரும் பொன்னான சந்தர்ப்பமிது! இப்போது மக்களே தலைவர்கள் - பலவான்கள்.

வாக்குப் பிச்சைக்காக நமது மக்களின் காலடிக்கு வரும் நமது அரசியல் தலைமைகளின் வாய் வாக்குறுதிகளை நம்பி வாக்குப் போட்ட காலம் மலை ஏறி விட்டது என்பதை அழுத்தி நிரூபிக்கும் வரலாற்றின் சந்தாப்பம் இது.

நமது மக்களுக்கு வேண்டிய தலைவர்கள் யார்? நமது அரசியல், சமூகப் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய அறிவும், பலமும் எத்தலைமைகளிடம் உள்ளன? என்பனவற்றை தீக்கமாகத் தீர்மானித்து நமது மக்கள், ஆணையை வழங்க வேண்டிய பொறுப்பில் மக்களாகிய நாம் உள்ளோம்! போய்க் கடந்த தசாப்தங்களில் அரசியல் ரீதியாக நமது மக்கள் மிக மோசமாக ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்டார்கள். அதன் விளைவை நாம் இப்போது அனுபவித்து வருகிறோம்!

எதிர்வரப் போகும் காலம்: இலங்கை வாழ் முஸ்லிம்களை மிகவும் கொடியதாக தண்டிக்கக் காத்திருக்கிறது போல் உள்ளது. (அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.) இத்தகைய மிக மோசமான நிலையில்: நமது மக்களுக்காக உறுதியாகப் போராடக் கூடிய அரசியல் தலைமைகளை நமது சமூக அரங்கு உருவாக்கியே ஆகவேண்டும். இல்லையேல் பெரும் கைசேதம் நம்மை வந்தடைந்துவிடும்.

உலக அரங்கில் அரசியல் அதிகாரம் என்பது இன்று அத்தியவசியமாகி விட்டது, குறிப்பாக முஸ்லிம்களைப் பொறுத்தவரையும் அடக்கப்பட்ட மக்களுக்கும். இலங்கைச் சூழலில் மிக அண்மைய நிகழ்வுகள் இந்த உண்மையை மெய்ப்படுத்தி நிற்கின்றன.

பாராளுமன்றத் தோதல் என்பது வெறுமனே சந்தோச மேலீட்டால் வாக்களித்துவிட்டு வீடு திரும்புவதல்ல; வெறும் மேடைப் பேச்சில், பொய் வாக்குறுதிகளில் பதவி பெறுவதுமல்ல; இதனை நமது மக்கள் உணர்ந்தால் - நமது அரசியல் தலைமைகள் நமது மக்களை தொடர்ச்சியாக ஏமாற்ற எந்த வழியும் இல்லாமல் போய்விடும்! சிந்திப்போமா? செயற்படுவோமா?

தோழமையுடன்
பிரதம ஆசிரியர்

இப்பத்திரிகை 143, முஹந்திரம் வீதி, "முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்" இனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org